முதல் மனிதர்

ஆதம்

அலைஹிஸ்ஸலாம்

மௌலவி சையத் அப்துர் ரஹ்மான் உமரி

சாஜிதா புக் சென்டர்

248, தம்புசெட்டித் தெரு,

முதல்மாடி, சென்னை - 600001

போன்: 044-2522 4821

முதல் மனிதர்

ஆதம்

அலைஹிஸ்ஸலாம்

விலை: ரூபாய் 35.00

❑நூலின்பெயர்: முதல் மனிதர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் ❑ஆசிரியர்: மௌலவி சையத் அப்துர் ரஹ்மான் உமரி ❑வெளியீடு: ஸாஜிதா புக் சென்டர், 248, தம்புசெட்டித் தெரு, முதல்மாடி, சென்னை–600001 ❑முதல் பதிப்பு: ஜூலை 2008 ரஜப் 1429 ❑பக்கங்கள்: 96 ❑கணிணி அச்சாக்கம்: அஹத் கிராஃப்வே, மதுரை ❑அச்சு: ஸாஜிதா அச்சகம், சென்னை ❑விலை: ரூபாய் 35.00

Price: Rs ***35.00***

❑Title of the Book: Adham AS
❑Compiled By: Moulawi Syed Abdur Rahman Umari
❑First Edition : July 2008 - Rajab 1429 ❑Published by: Sajidha Book Centre, 248, ThambuChetty Street, First Floor, Chennai-1
❑Pages :96 ❑Price: Rs.**35.00**

பதிப்புரை

வான்மறை குர்ஆன் பல்வேறு வரலாற்றுச் சம்பவங்களைப் பற்றி கூறுகின்றது. போகிறபோக்கில் சொல்லிவிட்டுச் செல்கின்ற கதைகளாக இல்லாமல் இறைநம்பிக்கையை மனதில் தேக்கியுள்ள முஃமின்களுக்கு உத்வேகமூட்டும் அவர்களை மேலும்மேலும் உழைக்கத்தூண்டும் கிரியாஊக்கியாக திகழுகின்றன.

வரலாற்றுச் சம்பவங்களில் இருந்து எவற்றை நாம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதைப் பற்றியும் குர்ஆன் குறிப்பிடுகின்றது. மூஸா அலைஹிஸ் ஸலாமுக்கு ஹாரூன் அலைஹிஸ் ஸலாம் அண்ணனா தம்பியா என்றெல்லாம் யோசித்துக்கொண்டு காலத்தைக் கழிப்பதை குர்ஆன் ஆதரிக்கவில்லை.

ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய வரலாற்றை குர்ஆன் கற்றுக் கொடுக்கும் முறையிலேயே இங்கு வாசகர்களுக்கு அளித்துள்ளோம். நேர்வழிகாட்ட வந்த நூல் என்றால் நாம் வாழும் இன்றைய வாழ்க்கைக்கு அது பயனளிக்கவேண்டும். வெறுமனே சம்பவங்களின் கோர்வையாக இருந்தால் அதனால் நமக்கு எந்தப்பயனுமில்லை. அவ் வகையில் குர்ஆன் வடிவில் ஒரு பேரருளையே நாம் பெற்றுள்ளோம்.

இஸ்லாமியப் பணியாற்ற எமக்கு கிடைத்த இவ்வாய்ப்பைக் கொண்டு மறுமையில் அல்லாஹ்விடமிருந்து நற்கூலியை எதிர்பார்க்கிறோம். இந்நூலை விரைவாக எழுதிக்கொடுத்து உதவிய சகோதரர் அப்துர் ரஹ்மான் உமரி அவர்களுக்காக இறைவனிடம் துஆ செய்கிறோம். அல்லாஹ் அவருடைய பணியை அங்கீகரிப்பானாக!. அவருடைய பாவங்களை மன்னிப்பானாக!.

முஹம்மத் ஜகரிய்யா
ஸாஜிதா புக் சென்டர்
சென்னை

முன்னுரை

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய வரலாறு என்பது ஏதோ ஒரு தனிப்பட்ட மனிதரின் வரலாறு அல்ல! மனித இனத்தின் தோற்றம், அவனுடைய படைப்பின் காரணம், அவனுக்கு வழங்கப்பட்ட தகுதிகள், திறமைகள் போன்றவற்றை அறிவதற்கான தேடுதல். இந்த உலகைப் பற்றியும் உலகப் படைப்பைப் பற்றியும் உலகில் மனிதன் எவ்வாறு பிறந்தான் எதற்காகப் பிறந்தான். அவனுடைய பிறப்பிற்கான காரணம் என்ன? என்பதைப் பற்றியும் இறைவனின் வேதம் என்று நாம் நம்பும் குர்ஆன் என்ன கூறுகின்றது என்பதைப் பற்றி பார்க்க உள்ளோம்.

இவ்வுலகம் தோன்றி 13.7 பில்லியன் ஆண்டுகள் ஆகிவிட்டதாக விஞ்ஞானம் கூறுகின்றது. அண்டத்தின் ஆயுட்காலம் பல டிரில்லியன் ஆண்டுகள். மிகச்சரியான காலத்தில் மனிதன் தோன்றியுள்ளான். மனித இனம் தோன்றவும் வளரவும் உகந்த பருவம் இதுவே. இது திட்டமிட்ட செயலா? திடீரென்று நிகழ்ந்த விபத்தா? என்றொரு சந்தேகம் கடவுள் இல்லை என மறுத்துக் கொண்டிருந்த விஞ்ஞானிகளுக்கு எழ ஆரம்பித் துள்ளது.

விஞ்ஞானம் உண்மையென நம்பிக்கொண்டிருக்கும் பல விஷயங்களை இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை. விஞ்ஞானத்தின் பின்னால் இஸ்லாமிய அழைப்பை எடுத்துச் செல்லும் 'அழைப்புப் பணி' சகோதரர்கள் இதைப் பற்றி கட்டாயம் சிந்தித்தே ஆகவேண்டும். விஞ் ஞான உண்மைகளைக் கூற குர்ஆன் வரவில்லை என்பதையும் இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும். மனிதனால் எல்லை எதுவென்றே கண்டு பிடிக்கப்படாத அண்டத்தையும் பிரபஞ்சத்தையும் எண்ணற்ற கேளக்ஸி களையும் அற்புதமாகப் படைத்து அதிஅற்புதமாக இயக்கி வரும் படைப் பாளனை 'அளவிடும்' அளவுக்கு மனிதன் அறிவைப் பெற்றுள்ளானா என்பதே நம் கவனத்தைக் கவருகின்ற விஷயம். நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்குள் சுருண்டுவிடுகின்ற அறிவை வைத்துக்கொண்டு பரம் பொருளை எடைபோட்டுப் பார்க்க மனிதன் முயற்சிப்பதே

அவனுடைய அறியாமைக்கு அத்தாட்சி.

உலகில் மனிதன் எவ்வாறு தோன்றினான்? முதல்மனிதன் நாகரீகத்தையும் பண்பாட்டையும் பெற்றிருந்தானா? என்பன போன்ற விஷயங்களில் அறிவியலின் கருத்துகளை நேர்எதிர்த் திசையில் இஸ்லாம் மறுக்கின்றது. பண்பாடு எங்ஙனம் தோன்றியது? என்பது குறித்து உண்மையான கருத்தை குர்ஆன் மட்டுமே அளிக்கின்றது.

ஆதம் எனும் தனிமனிதரைப் பற்றியல்லாமல் மேற்கண்ட விஷயங்களைப் பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது என்பதைப் பற்றியே நாம் இன்ஷா அல்லாஹ் இந்நூலில் பார்க்க உள்ளோம். ஆதம் எவ்வாறு படைக்கப்பட்டார்? அவருடைய தரமும் தகுதியும் என்ன? ஷைத்தான் விரோதியாக மாறியதன் பின்னணி என்ன? சொர்க்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதன் காரணம் என்ன? ஆதமுடைய படைப்பு குறித்து நம்முடைய உம்மத்தில் வழங்கி வருகின்ற கருத்துகள் எல்லாம் சரியா? என்பதைப் பற்றியும் பார்க்க உள்ளோம்.

இது ஒரு வரலாற்று நூலாக மட்டும் இல்லாமல் படைப்பின் நோக்கம் பற்றிய செய்தியாகவும் இருக்கும். ஆகையால், வரலாற்று நூலின் சுவாரஸ்யத்தை இந்நூல் வழங்காமலும் போகலாம் என்பதை முதலிலேயே கூறிவிடுகிறேன்.

குர்ஆன் ஓர் அற்புதமான வரலாற்று நூலாக திகழ்கின்றது. அதே சமயம் வரலாற்றிலிருந்து எவ்வாறு படிப்பினை பெறவேண்டும் என்ற பாடத்தை நடத்தும் அடிப்படை நியதி நூலாகவும் திகழ்கின்றது. வரலாற்றிலிருந்து எவற்றையெல்லாம் கைக்கொள்ள வேண்டும் எவற்றையெல்லாம் கைவிட்டுவிட-தவிர்த்துவிட வேண்டும் என்பதை நாம் குர்ஆனிலிருந்தே கற்றுக் கொள்ளவேண்டும்.

ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய வரலாறாக இருக்கட்டும். யூஸுஃப் அலைஹிஸ் ஸலாமுடைய வரலாறாக இருக்கட்டும். இல்லை, குகைத் தோழர்களின் வரலாறாகவே இருக்கட்டும். வரலாற்றுக்கான நிரந்தர நியதிகளை குர்ஆன் முன்வைக்கின்றது.

எது நமக்கு தேவையோ எதைக் கொண்டு நாம் படிப்பினை பெற முடியுமோ அதை மட்டுமே அதில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். தேவையற்ற விஷயங்களில் கவனத்தைத் தொலைத்துவிட்டு முற்கள் நிரம்பிய வெற்றுப் பள்ளத்தாக்குகளில் அலைந்துகொண்டு இருக்கக் கூடாது.

யூஸுஃப் அலைஹிஸ்ஸலாமுடைய வரலாற்றை வெகு அழகாகப்

படம் பிடித்துக் காட்டும் குர்ஆன் 'அந்தப் பெண்ணின்' பெயரை எங்குமே குறிப்பிடவில்லை. நாம் பெறவேண்டிய படிப்பினையோடு அந்தப் பெண்ணுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதுதான் காரணம். குகைத் தோழர்களின் வரலாற்றைக் கூறும் குர்ஆன் அவர்கள் எத்தனை பேர்? எத்துணை காலம் குகையில் தங்கியிருந்தார்கள்? என்பதைப் பற்றியெல்லாம் சொல்லவேயில்லை. அதெல்லாம் எதற்கு? என்று புறந்தள்ளி விடுகின்றது. சொல்லப்போனால் ஆதம் அவர்களைப் பற்றி மட்டுமே குர்ஆன் பேசுகின்றது. ஹவ்வா அலைஹாஸ் ஸலாம் அவர்களுடைய பெயரைக்கூட சுட்டிக் காட்டுவதில்லை. நேர்வழியைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தளவுக்கு குறைந்தபட்ச குறிப்புகள் போதுமோ அந்தக் குறிப்புகளை மட்டுமே குர்ஆன் வழங்குகின்றது.

எவற்றையெல்லாம் தேவையில்லை என்று குர்ஆன் ஒதுக்கிவிட்டதோ அத்தகைய முட்டுச் சந்துகளிலேயே இஸ்லாமிய உம்மத் சுற்றி வந்து கொண்டிருக்கின்றது காலமெல்லாம்! ஆதமைப் படைக்க இறைவன் எங்கிருந்து எவ்வாறு யாரை அனுப்பி மண்ணை எடுத்தான் என்று தொடங்கி, யூஸுஃப் அலைஹிஸ்ஸலாமுடைய கல்யாண வைபோகம் எவ்வாறு நடை பெற்றது என்பதுவரை என்னென்னவோ கற்பனைகளை ஏகப்பட்ட அளவில் எழுதிக் குவித்துள்ளார்கள். அவையெல்லாம் உண்மைதானா? ஆதாரப் பூர்வமானவையா? பக்கத்தில் இருந்து பார்த்துச் சொன்ன அறிவிப்பாளர்கள் உண்டா? என்றெல்லாம் நாம் கேட்காமல், குர்ஆன் கேட்க விரும்புவதையே வழிமொழிகிறோம்.

'இதெல்லாம் தேவைதானா?'

'இவற்றைக் கொண்டு உங்களுக்குக் கிடைப்பது என்ன?'

ஹிதாயத் எனும் நேர்வழியைக் கற்றுத்தர வந்த குர்ஆன் எவற்றை யெல்லாம் தேவையில்லை என ஒதுக்கிவிட்டதோ அவற்றை பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதில் என்னதான் பயன் விளையப் போகின்றது?

பயன் விளைகின்றதோ இல்லையோ, ஆபத்து கண்டிப்பாக உண்டு. நேர்வழியை விட்டுவிட்டு முட்டுச் சந்துகளில் சுற்றிக் கொண்டிருப் பதால் வீண் அலைச்சல் மட்டுமல்லாமல் வழியையே தொலைத்துவிடக் கூடிய அபாயமும் உண்டல்லவா?. ஆதமுடைய வரலாற்றில் இறைவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை வசதியாக மறந்துவிட்டு 'ஆதம் பாலம்' 'ஆதம் இறங்கிய இடம்' 'ஆதமுடைய காலடித்தடம்' 'சேது பாலம்' என்பதெல்லாம் நம்முடைய வழிகேட்டின் முகவரிகளல்லாமல் வேறென்ன?.

‘ஷீது’ என்ற பெயரே குர்ஆனிலும் இல்லை. ஹதீதுகளிலும் இல்லை. அப்படியிருக்கையில் ஷீதுதான் சேது என்று இன்றும் நம்மில் பலர் நம்பிக்கொண்டுதானே இருக்கிறார்கள்?.

இஸ்ரவேலர்களின் அறிவிப்புகளில் எச்சரிக்கையாக இருங்கள் என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அறிவுறுத்திய பின்னரும் நாம் அதனை மனதில் கொள்ளாமல் இஸ்ரலேர்களுடைய அறிவிப்புகளைத் தானே தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாடிக் கொண்டுள்ளோம்?.

பாம்பு வந்தது, பெண்ணிடம் பேசியது, ஆதாம் ஆப்பிள், ஆதாம் பாலம் இவையெல்லாம் என்ன?. குர்ஆன் கூறும் சம்பவங்களா?. இஸ்ர வேலர்களின் அறிவிப்புகள்தானே?

இதுபோன்ற கதைகளை எல்லாம் தவிர்த்துவிட்டு குர்ஆன் எதை குறிப்பிட விரும்புகின்றதோ எவ்வாறு குறிப்பிட விரும்புகின்றதோ அதை மட்டும் இந்நூலில் தொகுத்து அளித்துள்ளேன். வாசகர்களுக்கு இந்நூல் இன்ஷா அல்லாஹ் பயனுள்ளதாக அமையவேண்டும் என வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். சொல்ல வைத்தவனும் அவனே! செயல்பட வைப்பவனும் அவனே!

سید عبد الرحمٰن عمری

ஜுமாதுஸ்ஸானி , 3 — ***சையத் அப்துர் ரஹ்மான் உமரி***

ஹிஜ்ரி 1429

கோயமுத்தூர்

பொருளடக்கம்

(அ) உலகத் தோற்றமும் மனிதப்படைப்பும்

(ஆ) மண்ணுலகிற்கு வரும் முன்

(இ) நிரந்தரப் பகைவன்

(அ) உலகத் தோற்றமும் மனிதப்படைப்பும்

1. உலகம் தானாகத் தோன்றியதா? இறைவனால் படைக்கப்பட்டதா?

உலகம் எவ்வாறு தோன்றியது? கடவுளால் படைக்கப்பட்டதா? தானாகத் தோன்றியதா? கடவுள் நம்பிக்கையைச் சார்ந்த விஷயம் இது! கடவுள் நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் நீங்கள் அளிக்கும் பதில் வேறு. கடவுள் நம்பிக்கை இல்லையென்றால் அளிக்கும் பதில் வேறு!. ஆகையால், இந்தக் கேள்விக்கு அறிவியல் என்ன பதில் அளிக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளும் முன் அறிவியலுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கின்றதா என்பது மிக முக்கியம்!. புலன்களால் உணரப்படும் ஆதாரங்களின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளைச் சார்ந்து இயங்கும் அறிவியல் கடவுளையும் அவ்வடிப்படையிலேயே ஆராய முற்படுகின்றது. அறிவியலாளர்கள் கடவுளை மறுக்கிறார்கள். அறிவியல் முன்னோடிகள் கிறிஸ்துவ சமயத்தால் பாதிப்புக்குள்ளான வரலாறும் அவ்வாறு செய்யுமாறு அவர்களைத் தூண்டுகின்றது.

கிறிஸ்துவத் திருச்சபையின் ஆதிக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட அய்ரோப்பிய விஞ்ஞானிகள் மதத்தை அறவே புறக்கணித்தால்தான் மனிதன் முன்னேற முடியும் என்ற அவசர முடிவிற்கு வந்தார்கள். உலகிலுள்ள எல்லா சமயங்களையும் கிறிஸ்துவத்தோடு ஒப்பிட்டார்கள். கடவுளை அடியோடு புறக்கணித்து விட்டு உலகமும் அண்டமும் தோன்றிய காரணத்தை ஆராயத் தலைப்பட்டார்கள்.

'பெருவெடிப்புக் கொள்கை' என்றொரு கொள்கையை முன் வைத்தார்கள். அதன் விளைவாக திடீரென்று ஏற்பட்ட விபத்தே உலகத்தின் தோற்றம் என்ற முடிவை அடைந்தார்கள். பரிணாம வளர்ச்சி என்ற தத்துவத்தை வெளியிட்டார்கள். (பரிணாமத் தத்துவத்தால் சமூக அளவிலும் ஒழுக்க அளவிலும் பெருத்த மாற்றத்தை உலகம் சந்தித்தது. அதன் விளைவுகளையும் இன்று அனுபவித்து வருகின்றது).

இவை அனைத்தையும் குர்ஆன் மறுக்கின்றது. உலகப் படைப்பைப் பற்றியும் உலகைப் படைத்தவனைப் பற்றியும் அது பேசுகின்றது. இன்னும் சொல்லப்போனால் உலகில் உள்ள ஒவ்வொரு படைப்பையும் இறைவன் இருக்கிறான் என்பதற்கு ஆதாரமாக அது எடுத்து வைக்கின்றது. படைப்புகளை மட்டுமல்லாது மனித உடம்பில் உள்ள ஒவ்வொரு செல்லையும் எடுத்துக் காட்டி இறைவன் இருக்கிறானா இல்லையா என்ற கேள்வியை அது எழுப்புகின்றது.

தாழ்வு மனப்பான்மை எனும் கொடிய நோய் முஸ்லிம் உம்மத்தை படு பயங்கரமாக தாக்கி வருகின்றது என்பதை தொடர்ந்து நாம் சொல்லி வருகிறோம். சமயங்களில் இந்நோய்க்கு உலமாப் பெருமக்களும் இலக்காகி விடுகிறார்கள். இந்தத் தாழ்வு மனப்பான்மையின் விளைவாக இஸ்லாமியப் பிரச்சாரம் செய்வதற்கு விஞ்ஞானத்தை துணைக்கு அழைத்துக் கொள்ளும் போக்கு பெருகி வருகின்றது. விஞ்ஞானம் எந்தக் கருத்தை முன்வைத்தாலும் ‘ஏற்கனவே எங்களிடம் இருக்கின்றது’ என்று ஓடிப்போய் முன்னால் நின்று சொல்கிறோம்.

கடவுளை நம்பாத அறிவியல் மனிதப் படைப்புக்கு புதியதொரு காரணத்தை ‘பரிணாமத் தத்துவம்’ என்ற பெயரில் அறிமுகப்படுத்திய போது நம்முடைய உலமாக்களில் சிலர் ‘குர்ஆனும் இதனை மெய்ப் பிக்கின்றது’ எனும் ரீதியில் கருத்துகளை வெளியிடலாயினர். தாழ்வு மனப்பான்மையின் காரணமாக மிகப் பெரும் வரலாற்றுப் பிழைக்கு வித்திட்டனர்.

2. காட்டுமிராண்டியாகத் தோன்றியவனா மனிதன்?.

ஆதிமனிதன் நாகரீகம் தெரியாதவனாக பண்பாடற்றவனாக காட்டு மிராண்டியாக இருந்தான்; வாழும் வழிமுறை அறியாமல் விலங்கு களைப் போல காடுகளிலும் மலைகளிலும் வசித்துவந்தான்; நாட்கள் செல்ல செல்ல அவன் சிறுகச் சிறுக அறிவைப் பெற்றுக் கொண்டே வந்தான். முதன்முதலில் கற்களைப் பயன்படுத்தி தனக்குத் தேவையான விலங்குகளை வேட்டையாட கற்றுக் கொண்டான். கற்களைக் கொண்டே பல்வேறு கருவிகளையும் செய்துகொண்டான். அக் காலத்தை ‘கற்காலம்’ எனக் குறிப்பிடலாம். அதன் பின்பு அவனுடைய அறிவு வளர்ந்துகொண்டே சென்றது. கற்களுக்குப் பதிலாக மரங் களையும் வேறுவகை உபகரணங்களையும் தன்னுடைய வேட்டை வாழ்க்கைக்கு பயன்படுத்த ஆரம்பித்தான்.

இந்தத் தகவல்களை எல்லாம் விஞ்ஞானம் நமக்குத் தருகின்றது. பரிணாமத் தத்துவம் என்றொரு கொள்கையை விடாப்பிடியாக அறிவியல் நம்புகின்றது. இதுநாள்வரை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப் படாத தத்துவம் அது!.

அதன்படி, மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான். படிப்படியாக தன்னுடைய அறிவை வளர்த்துக் கொண்டான். அவனுடைய தேவைகளுக்கு ஏற்ப அவனுடைய அறிவு வளர்ந்துகொண்டே சென்றது. காலம் சுழலச் சுழல இப்போதைய நிலைமைக்கு மனிதன் வந்துள்ளான். வளர்ச்சியின் மிக உயர்ந்த நிலை இது!.

படைத்த இறைவனால் அருளப்பட்ட குர்ஆனில் எந்தவோர் இடத்திலும் இதற்கான ஆதாரத்தை நம்மால் காணமுடியவில்லை. பிரம்மாண்டம் என்ற வார்த்தைக்கு உண்மையிலேயே சொந்தமான அண்டத்தோடு ஒப்பிடுகையில் மிகமிக நுண்ணிய துகளாக, துகளினும் துகளாக இருக்கும் புவிப்பரப்பில் வசிக்கும் மனிதன் அண்டத்தையும் அதனைப் படைத்தவனையும் உணர்ந்து கொள்ள முயற்சிக்கலாமே ஒழிய, காரணத்தையும் கர்த்தாவையும் ஒரு போதும் கண்டடைய இயலாது. தானாக, தன் மொழியில் கர்த்தா சொல்வதைத் தான் நம்பியாக வேண்டும்.

உலகைப் படைத்த இறைவன் ஒருவன் உண்டு; அவனை மட்டுமே வணங்க வேண்டும்; அவனால் இயற்றியருளப்பட்ட வேதமே குர்ஆன் என்பதை நம்பி ஏற்றுக்கொண்டுள்ள முஸ்லிம்கள் மேற்கண்ட விஞ்ஞானக் கூற்றை ஒரு போதும் ஒப்புக்கொள்ள இயலாது. மண்ணிலிருந்து இறைவன் முதன்முதலில் மனிதனைப் படைத்தான். முதல் மனிதனே அறிவாம்சம் நிரம்பியவனாக இருந்தான். ஞானச்சுடராக திகழ்ந்தான் என்றெல்லாம் குர்ஆன் கூறுகின்றது.

பரிணாமம், காட்டுமிராண்டி, கற்காலம், பண்பாடு போன்ற சொற்றொடர்களை இஸ்லாம் வினோதமாகப் பார்க்கின்றது. பயன்படுத்தாமல் தவிர்க்கின்றது. கல்லூரிக் கல்வி நம்முடைய இளைய தலைமுறையின் ஈமானைப் பொசுக்கி விடுகின்றது என்று நாம் அடிக்கடி கூறுவதற்கும் இதுவே காரணம். இஸ்லாமிய அடிச்சுவடி கூடத் தெரியாமல் ஒருவன் கல்லூரியில் பயில்கிறான் என்றால் அவனுடைய இறைநம்பிக்கையில் பெரியதோர் ஓட்டை விழுந்து விடுவதற்கே வாய்ப்புகள் அதிகம். இந்த ‘இடைவெளி’யை கவனித்தாக வேண்டிய கட்டாயம் சமூகத் தலைவர்களுக்கு உண்டு!.

நாகரீகமும் பண்பாடும் இல்லாத குரங்கு இனத்திலிருந்து படிப்படியாக

பரிணாம வளர்ச்சி பெற்று மனிதன் தற்போதைய வடிவத்தை எய்தினான் என்று அறிவியல் கூறுகின்றது. இந்தப் பரிணாமப் பாதையில் எந்தக் கட்டத்தில் 'மனிதன்' எனும் நிலையை அவன் அடைந்தான் என்பதை அளவிடுவது கடினம் என்றும் விஞ்ஞானம் கூறுகின்றது.

அதற்கு நேர்மாற்றமாக, மனிதன் இப்போதுள்ள நிலையிலேயேதான் முதன் முதலாக தோன்றினான் எனக் குர்ஆன் கூறுகின்றது. பரிணாமம், வளர்ச்சி படித்தரம் போன்ற எதுவும் அவனுடைய வரலாற்றில் இல்லை என்று மேலும் அது தெரிவிக்கின்றது. படைக்கப்பட்ட முதல் நாளில் இருந்தே அவன் மனிதனாக இருந்தான்; பண்பாடு உள்ளவனாக இருந்தான்; முழு அறிவோடும் உணர்வோடும் இருந்தான்.

மனிதன் எப்படித் தோன்றினான் என்பதற்கு இவ்விதம் இரண்டு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. எந்த ஒன்றை நீங்கள் ஒப்புக் கொண்டாலும் ஒரு குறிப்பிட்ட முடிவை ஏற்க வேண்டியிருக்கும். இரண்டு காரணங்களும் கொடுக்கும் முடிவு ஒன்றுக்கொன்று நேர் முரணானதாகவே இருக்கும்.

ஒரு கருத்தை ஒப்புக்கொண்டால் மனிதனை நீங்கள் அதிகபட்சம் ஒரு விலங்காகத்தான் மதிப்பிட வேண்டியிருக்கும். அவனுடைய செயல்கள், நடத்தைகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றிற்கான மூல காரணங் களை மிருகங்களின் வாழ்விலிருந்து தேட வேண்டியிருக்கும். அவனுடைய ஒழுக்க நிலையையும் மிருகங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தே தீர்மானிக்க வேண்டியிருக்கும். விலங்குகளின் வாழ்க்கை அமைப் பிலேயே மனிதனும் படைக்கப்பட்டுள்ளான் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

மனிதனுக்கும் மற்ற விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன வென்றால் விலங்குகள் தமது தேவைகளை கருவிகள், உபகரணங்கள் இன்றியே நிறைவேற்றிக் கொள்கின்றன. மனிதன் எனும் விலங்கோ தன்னுடைய தேவைகளுக்கு கருவிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றது. அதாவது, மனிதன் ஒரு வகையான 'சமூக விலங்கு' *(Social Animal)* அல்லது 'பேசும் விலங்கு' ஆவான்.

இரண்டாவது கருத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டால், மனிதனை விலங்குகளிலிருந்து முற்றிலும் வேறுபடுத்தி அவனை இறைவனின் பிரதிநிதியாகப் பார்ப்பீர்கள். அவனுக்கு பேசும் சக்தி இருப்பதாலும் கூட்டமைப்போடு சேர்ந்து வாழ்வதாலும் மற்ற விலங்குகளிலிருந்து அவன் வேறுபடுகிறான் என்ற முடிவிற்கு வரமாட்டீர்கள். இறைவன் அவன்மீது சுமத்தியுள்ள ஒழுக்கப் பொறுப்பும் இறைவன் புறத்திலிருந்து

அவனுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும்தான் அவனுடைய சிறப்புக்கு காரணம் என்ற முடிவிற்கே வருவீர்கள். அந்த அதிகாரங் களைக் குறித்துத்தான் அவன் நாளை இறைவனுக்கு முன்னால் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளான். (இந்த ஒழுக்கப் பொறுப்பையும் அதிகாரங்களை செலவு செய்ததைப் பற்றிய கேள்விக் கணக்கையும்தான் குர்ஆன் 'அமானத்' என்று குறிப்பிடுகின்றது).

ஆக, இந்த இரண்டில் எந்தக் கருத்தை சரியென்று நீங்கள் ஒப்புக் கொள் கிறீர்களோ அதற்கு ஏற்றாற்போல மனிதனைப் பற்றியும் அவன் மீதான கடமைகளைப் பற்றியும் உங்களுடைய முடிவு கண்டிப்பாக மாறு கின்றது. குர்ஆன் முன்வைக்கும் கருத்தை நீங்கள் சரியென்று ஒப்புக் கொண்டால் விஞ்ஞானத்துக்கு நேர்எதிரான திசையில் பயணம் செய்ய வேண்டியிருக்கும். ஒழுக்கம், சமயம், பண்பாடு, நாகரீகம், சமூகம், சட்ட திட்டங்கள், கல்வி என்று அனைத்துத் துறைகளிலும் விஞ்ஞானத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முன் வரைவுகளுக்கு நேர்மாற்றமான முடிவுகளை செயற்படுத்த வேண்டியிருக்கும். இத்தகைய ஒழுக்க அமைப்பு, சமூக அமைப்புக்கான வேர்களை தேடியடைவதற்காக பொருளை அடிப்படையாகக் கொண்ட இவ்வுலகு அல்லாமல் ஆன்மாவை அடிப்படையாகக் கொண்ட மேலுலகை நீங்கள் முன்னோக்க வேண்டியிருக்கும்.

இங்கே உங்களுக்கு ஒரு சந்தேகம் எழலாம். 'நீங்கள் சொல்கின்ற இந்த இரண்டாவது கருத்து, பொறுப்புணர்வு மிக்கதாகவும் ஒழுக்கச் சிறப்பு வாய்ந்த தாகவும் உள்ளதென்னவோ உண்மைதான். அதற்காக அறிவியல் ஆதாரங்களால் ஊர்ஜிதமாக்கப்பட்ட நிரூபிக்கப்பட்ட ஒரு கருத்தை எப்படி சட்டென்று நிராகரிக்க முடியும்?'.

இதுதான் உங்களுக்கு எழுகின்ற சந்தேகம்.

இக்கேள்வியை எழுப்புவோர் முதலில் ஒரு விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். டார்வின் எனும் விஞ்ஞானியால் முன் வைக்கப்பட்ட பரிணாமத் தத்துவம் இன்றுவரை நிரூபிக்கப்படவில்லை. ஒரு 'கொள்கை' எனும் நிலையில்தான் அது பேசப்படுகின்றது. அனு மானங்களாலும் யூகங்களாலும் மட்டுமே இக்கொள்கை கட்டமைக்கப் பட்டுள்ளது. ஏற்றுக் கொள்ளத் தக்க ஆதாரங்கள் எதுவும் இதுவரை இக்கொள்கைக்கு ஆதரவாக சமர்ப்பிக்கப் படவில்லை. இக்கொள்கை யின் மெய்த்தன்மை குறித்து ஏராளமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இஸ்லாமிய அறிஞர்களும் ஓரிறைக் கொள்கையை ஒப்புக் கொள்ளும் அறிஞர்களும் இக்கொள்கையை அக்குவேறாக ஆணி வேறாக அலசி

ஆராய்ந்துள்ளனர். அவற்றை எல்லாம் இங்கு நாம் காண இயலாது. பரிணாமக் கொள்கை குறித்த விமர்சனங்களை வேறொரு நூலில் காணலாம்.

'நான் பிசுபிசுவென்று ஒட்டும் காய்ந்த களிமண் ஓட்டிலிருந்து மனிதன் எனும் படைப்பினத்தை படைக்க உள்ளேன் என்று உங்கள் இறைவன் வானதூதர்களிடம் கூறியதை நினைவு கூருங்கள். அப்படைப்பை அவன் செவ்வைப்படுத்தி அதில் தன்னுடைய ரூஹை ஊதியபோது, அவர்கள் அனைவரும் நெடுஞ்சாண்கிடையாக ஸஜ்தாவில் விழுந்தனர்' (அல்குர்ஆன் 15 : 28, 29).

மனிதனுடைய உயிர் உண்மையில் இறைப்பண்பின் ஒரு பிரதிபலிப்பே ஆகும். வாழ்வு, அறிவு, ஆற்றல், எண்ணம், தேர்வுசெய்யும் சுதந்திரம் இன்னும் மனிதனிடம் காணப்படும் இவை போன்ற எல்லாப் பண்பு களும் அந்த 'ரூஹ்' உயிரின் வெளிப்பாடுகளே!. மண்ணில் பிடிக்கப் பட்ட இந்த மனித உருவில் அல்லாஹ¬த் தஆலா தன்னுடைய உயிரின் லேசான ஓர் ஒளிப் பிம்பத்தை செலுத்தியுள்ளான். இந்த உயிர் ஊதப் பட்ட காரணத்தினால்தான் மனிதன் இந்த உலகில் இறைவனின் பிரதி நிதியாகவும் வானவர்கள் உட்பட எல்லா உயிரினங்களாலும் ஸஜ்தா செய்யப்படுமளவுக்கு தகுதி படைத்தவனாகவும் மாறி உள்ளான்.

படைப்பினங்களில் காணப்படும் உயிர்ப்பண்புகள் யாவும் இறைவனிட மிருந்து வெளிப்பட்டு வந்தவையே!. கீழ்வரும் ஹதீது அதை நமக்கு அழகாக விளக்குகின்றது.

'கருணையை இறைவன் நூறு பங்குகளாகப் பிரித்துள்ளான். தொன் னூற்று ஒன்பது பங்குகளை அவன் தன்னிடமே வைத்துக் கொண்டான். ஒரே ஒரு பங்கை இவ்வுலகில் இறக்கிவைத்துள்ளான். உயிரினங்கள் தமக்கிடையே பரஸ்பரம் பாசத்தைச் செலுத்திக் கொள்வதற்கு அந்தப் பங்கே காரணம்!. தன்னுடைய குட்டிகளுக்கு கஷ்டமளிக்கக் கூடாது என்பதற்காக அதன் மேலிருந்து தன்னுடைய கால்நகத்தை ஒரு விலங்கு அகற்றிக் கொள்வதும் இதன் காரணத்தினால்தான்!' (பதிவு : புகாரி, முஸ்லிம்).

ஆச்சரியப்படத்தக்க பொதுத்தன்மையோடு இறைப்பண்புகளின் தொகுப்பு மனிதனிடம் காணப்படுகின்றது. மற்ற உயிரினங்களிடமிருந்து அவனை இந்தத் தொகுப்பே வேறுபடுத்துகின்றது. இறைவனின் பண்புகளில் இருந்து ஓர் ஒளிக்கீற்று அளிக்கப்பட்டுள்ளதே ஒழிய, இறைவனின் தெய்வாம்சம் எதுவும் வழங்கப்படவில்லை. மிகவும் நுணுக்கமாக இதை விளங்கிக் கொள்ள வேண்டும். இல்லையெனில்

மயிரிழையில் நழுவி இறைநிராகரிப்பு எனும் படுபாதாளத்தில் விழுந்து விடும் அபாயம் உண்டு!. இறைவனின் தெய்வாம்சம் எனும் நினைப்பைக் கூட எந்த உயிரினமும் நெருங்க முடியாது.

3. உலகம் பிறந்தது எதற்காக?

மனிதனைப் படைப்பதற்கு முன்பே அல்லாஹ் இவ்வுலகையும் அண்டத்தையும் மற்ற எல்லாப் படைப்பினங்களையும் படைத்து விட்டான். அவற்றை எவ்விதம் படைத்தான்? எங்ஙனம் உண்டாக்கி னான்? எத்தனை காலக்கெடுவில் அவை உண்டாயின? என்பதைப் பற்றிய எக்குறிப்பும் குர்ஆனில் இடம் பெறவில்லை. இவ்வண்டமும் அதிலுள்ள அனைத்தும் ஆறு காலகட்டங்களில் படைக்கப்பட்டன என்று மட்டும் குர்ஆன் குறிப்பிடுகின்றது. அதற்கு மேலாக அதை குர்ஆன் ஆராயவில்லை.

இங்கு ஓர் உண்மையை அறிந்து கொள்வது அவசியம். மனிதன் தன் அறிவைக் கொண்டு தெரிந்துகொள்ள முடிகின்ற விஷயங்களைப் பற்றி அல்லாஹ் தன்னுடைய வேதமறையில் தெரிவிக்க வேண்டிய அவசிய மில்லை. தெரிவிப்பதுமில்லை. மனித அறிவால் எட்டமுடியாத, மனித அறிவு இயலாமையால் துவண்டுபோகின்ற, படைப்பாளனின் துணை யோடு மட்டுமே தெரிந்துகொள்ள முடிகின்ற விஷயங்களைப் பற்றியே குர்ஆன் பேசுகின்றது. அதாவது, நேர்வழியைப் பற்றியும் நேர்வழியை எங்ஙனம் அடைந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் இறைவனின் தூதர்களைப் பற்றியும் தூதர்கள் கொண்டுவந்த செய்தி யென்ன என்பதைப் பற்றியும் தான் அது பேசுகின்றது. போகிற போக்கில் ஏதேனும் ஒருசில பேருண்மைகளை அது சொல்லிவிட்டுப் போகலாம். அவ்விதம் அது குறிப்பிடுகின்ற உண்மைகள் யாவும் மறுக்க முடியாத அளவுக்கு ஆதாரப்பூர்வமாக அமைந்தாலும் அவ்வுண்மை களைக் குறிப்பிடுவதற்காக குர்ஆன் இறக்கியருளப்படவில்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

‘இந்தப் பூமியில் உள்ள அனைத்தையும் உங்களுக்காக படைத்தவன் அவனே’ என்றும் ‘இந்தப் பூமியில் உள்ள அனைத்தையும் அவனே உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தான்’ என்றும் குர்ஆன் குறிப்பிடு கின்றது.

உங்களுக்காகவே படைத்தான்; உங்களுக்காகவே வசப்படுத்திக்

கொடுத்தான் என்றால் என்ன பொருள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகம், உலகத்தை உள்ளடக்கிய சூரியக் குடும்பம், இந்த உலகத்திலுள்ள காற்று, மலை, கடல், வனம், தாவரங்கள், விலங்கினங்கள் என்று அனைத்தையுமே அல்லாஹ் மனிதனுக்காகவே படைத்தான் என்று கூறுகிறான். அதாவது இவையனைத்துமே மனிதனுக்குக் கட்டுப்படுகின்றன. மனிதனுக்காக பணியாற்றுகின்றன. மனிதனுடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கின்றன.

இவ்வுலகப் பொருட்கள் மட்டுமல்லாது இவ்வுலகில் இறை உத்தரவிற்கிணங்க பணியாற்றிவரும் வானவர்களும் மனிதனுக்குக் கட்டுப்படுகிறார்கள். அதாவது மனிதனுடைய விருப்பங்களை நிறைவேற்றுகிறார்கள்.

4. மனிதப் படைப்பின் முக்கியத்துவம்

உலகில் எத்தனைஎத்தனையோ உயிரிகளை இறைவன் படைத்திருந்த போதும் எதனைப் பற்றியும் தனியாக எங்குமே அவன் குறிப்பிடவில்லை. நாம் வாழும் ஊருக்கு எத்தனைஎத்தனையோ மக்கள் தினந்தோறும் வந்து கொண்டேயிருக்கிறார்கள். ஆனாலும் என்றைக்காவது ஒரு முக்கியஸ்தர் வந்தாரென்றால் அவருடைய வருகை முக்கியத்துவம் பெறுகின்றது. வருபவர் ஒருவேளை ‘ஏலியனாக’ (அயல் கிரக வாசியாக) இருந்துவிட்டால் சொல்லவா வேண்டும்?. வருகை அதிமுக்கியத்துவம் பொருந்தியதாக மாறிவிடுகின்றது.

மனிதனைப் படைப்பதற்கு முன்பு இறைவன் மலக்குகளை ஒன்று கூட்டி, தான் பூமியில் மனிதன் என்றொரு உயிரியைப் படைக்கப் போவதாக அறிவித்தான்.

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَـٰٓئِكَةِ إِنِّى جَاعِلٌ فِى ٱلْأَرْضِ خَلِيفَةً

“அந்நாளை நினைவு கூருங்கள்: வானவர்களை ஒன்றுகூட்டி ‘பூமியில் நான் என்னுடைய பிரதிநிதியை உண்டாக்கப் போகிறேன்!” என்று உம் இறைவன் அறிவித்தபோது...” (அல்குர்ஆன் 2:30).

மனிதனைப் படைப்பதற்கு முன்பே எண்ணற்ற கணக்கற்ற உயிரினங்களை இறைவன் இப்புவியில் படைத்துவிட்டிருந்தான். அதேசமயம், குர்ஆனில் எங்குமே எந்தவோர் உயிரினத்தின் படைப்பு நோக்கமும் கூறப்பட வில்லை. மற்ற உயிரினங்களை விட மனிதன் மேம்பட்டவன்,

உயர்வானவன், கண்ணியம் பொருந்தியவன் என்பதை இது வெளிக் காட்டுகின்றது.

இதுவரை படைக்கப்பட்ட உயிரிகளில் செயல்படும் பொதுவான உயிரியல் விதிகள் எதனையும் இப்படைப்பில் இறைவன் செயல் படுத்தப்போவதில்லை. இதுவரை யாருக்கும் கொடுக்காத பொறுப் பொன்றை இம்மனிதனுக்கு வழங்க உள்ளான். எனவேதான், வானவர் களை ஒன்றுகூட்டி அவன் அதனை அறிவித்தான். இன்னும் மனிதன் பிறக்கவேயில்லை. அவன் எப்படி இருப்பான்?. அவனுடைய வடிவம் என்னவாக இருக்கும்?. அவனுடைய மூலக்கூறு என்ன? என்று எதைப் பற்றியுமே அறிவிக்கும் முன்பு அவனுடைய முக்கியத்துவத்தை இறைவன் வானவர்களுக்கு உணர்த்திவிட்டான்.

5. மண்ணிலிருந்து மனிதப் படைப்பு

மண்ணிலிருந்து மனிதன் படைக்கப்பட்டான் என்பதை கீழ்வரும் வசனங்கள் விளக்குகின்றன.

﴿إِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي خَالِقٌ بَشَرًا مِّن طِينٍ ☆
فَإِذَا سَوَّيْتُهُ وَنَفَخْتُ فِيهِ مِن رُّوحِي فَقَعُوا لَهُ سَاجِدِينَ﴾

'நான் மண்ணிலிருந்து மனிதன் எனும் படைப்பினத்தை படைக்க உள்ளேன் என்று உங்கள் இறைவன் வானதூதர்களிடம் கூறியதை நினைவு கூருங்கள். அப்படைப்பை அவன் செவ்வைப் படுத்தி அதில் தன்னுடைய ரூஹை (ரூஹ் என்றால் உயிர்க்காற்று) ஊதியபோது, அவர்கள் அனைவரும் நெடுஞ்சாண் கிடையாக ஸஜ்தாவில் விழுந்தனர்' (அல்குர்ஆன் 38 : 71, 72).

وَلَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ مِن صَلْصَالٍ مِّنْ حَمَإٍ مَّسْنُونٍ

''பிசுபிசுவென்று ஒட்டும் காய்ந்த களிமண் ஒட்டிலிருந்து மனிதனை நாம் படைத்தோம்' (அல்குர்ஆன் 15 : 26).

இவ்வசனத்தில் மூன்று சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஹமஇன், மஸ்னூன், ஸல்ஸால்.

ஹமஇன் என்றால் நாற்றமடிக்கும் சேற்று மண் எனப்பொருள்.

குழைத்த மண்ணிலிருந்து எழும் அழுகிய வாடை எனவும் பொருள் கொள்ளலாம்.

மஸ்னூன் என்றால் அழுகிவிட்டதன் காரணமாக தோன்றும் பிசுபிசுவென்று ஜவ்வைப் போல ஒட்டும் தன்மை என்று பொருள். அல்லது குழைக்கப்பட்டு ஏதேனுமொரு வடிவத்தில் பிடிக்கப்பட்ட மண்ணென்றும் பொருள்.

ஸல்ஸால் என்றால் காய்ந்து போன ஓடாகிப்போன மண் எனப்பொருள்.

சேற்று மண்ணைப் பிடித்து ஓர் உருவமாக்கி அதைக் காயவைத்த பிறகு, அதில் இறைவன் தன்னுடைய ரூஹை ஊதி மனிதனுக்கு உயிர் கொடுத்துள்ளான். அவ்வுரு எங்ஙனம் இருந்தது? ரூஹ் கொடுக்கப்படும் முன் எவ் வடிவில் இருந்தது? எவ்வாறு சேற்று மண்ணுக்கு உருவம் கொடுக்கப்பட்டது? எனும் விவரங்களையெல்லாம் நம்மால் அனுமானிக்க இயலாது. முதலில் மனிதன் படைக்கப்பட்டான் பிறகு செவ்வையாக்கப்பட்டான் என இறைவன் கூறுகிறான். அப்படித்தரங்கள் எவ்வாறு அமைந்தன என்றும் நம்மால் கற்பனை செய்ய இயலாது.

மனிதத் தோற்றப் பாதையில் குர்ஆன் குறிப்பிடுகின்ற படித்தரங்களை கீழ்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

(1) மண் (துராப்)

‘ஆதத்தை இறைவன் மண்ணினால் படைத்தான்’ (அல்குர்ஆன் 3 : 59).

آدَمَ خَلَقَهُ مِنْ تُرَابٍ

(2) களிமண் சேறு (தீன்) அதாவது மண்ணோடு நீர் கலந்த கலவை.

‘களிமண்ணிலிருந்து மனிதனை அவன் படைக்கத் தொடங்கினான்’ (அல்குர்ஆன் 32 : 7).

وَبَدَأَ خَلْقَ الْإِنْسَانِ مِنْ طِينٍ

(3) பிசுபிசுப்பான களிமண் சேறு (தீனுன் லாஸிப்)

‘நாம் அவர்களை பிசுபிசுப்பான களிமண்ணைக் கொண்டு படைத்தோம்’ (அல்குர்ஆன் 37 : 11).

إِنَّا خَلَقْنَاهُمْ مِنْ طِينٍ لَازِبٍ

(4) பேதகமடைந்த (அதாவது அழுகிய) களிமண்.

وَلَقَدْ خَلَقْنَا الْإِنْسَانَ مِنْ صَلْصَالٍ مِنْ حَمَإٍ مَسْنُونٍ

“பேதகமடைந்த களிமண் சேற்றிலிருந்து மனிதனை நாம் படைத்தோம்’ (அல்குர்ஆன் 15 : 26).

(5) பேதகமடைந்த (சுண்டினால் ஓசை வரக்கூடிய) காய்ந்த ஓடுபோன்ற களிமண்.

''ஒடு போன்று தட்டினால் ஓசை வரக் கூடிய பேதகமடைந்த களிமண் சேற்றிலிருந்து மனிதனை நாம் படைத்தோம்' (அல்குர்ஆன் 55 : 14).

خَلَقَ الْإِنسَانَ مِن صَلْصَالٍ كَالْفَخَّارِ

(6) களிமண்ணிலிருந்து நிறைவடைந்த மனிதஉரு (பஷர்). இதில்தான் இறைவன் தன்னுடைய ரூஹை ஊதினான். இதிலிருந்தே மனிதனுடைய ஜோடியை உண்டாக்கினான்.

﴿إِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي خَالِقٌ بَشَرًا مِّن طِينٍ ☆ فَإِذَا سَوَّيْتُهُ وَنَفَخْتُ فِيهِ مِن رُّوحِي فَقَعُوا لَهُ سَاجِدِينَ﴾

'களிமண்ணால் ஒரு மனிதனை நான் படைக்கப் போகிறேன். அவரை முழுமையாகப் படைத்து அவருக்குள் என் ரூஹை (உயிரை) ஊதியபிறகு அவருக்கு ஸஜ்தா செய்யுங்கள்' (அல்குர்ஆன் 38 : 71,72).

خَلَقَكُم مِّن نَّفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً

'ஒரே ஆன்மாவிலிருந்து உங்களை அவன் உண்டாக்கினான். அதே ஆன்மாவிலிருந்தே அதனுடைய ஜோடியையும் படைத்தான். அவையிரண்டைக் கொண்டே உலகில் அதிகமான ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான்' (அல்குர்ஆன் 4 : 1).

(7) அடுத்தடுத்த சந்ததிகளை அற்பமான நீரைப் போன்ற ஒருவித சத்திலிருந்து! பலவிடங்களில் இந்நிலை 'நுத்ஃபா' எனக் குறிப்பிடப் படுகின்றது.

''பின்னர் மனிதனுடைய சந்ததிகளை அற்பமான நீரைப்போன்ற ஒருவித சத்திலிருந்து படைத்தான்'' (அல்குர்ஆன் 32 : 8).

ثُمَّ جَعَلَ نَسْلَهُ مِن سُلَالَةٍ مِّن مَّاءٍ مَّهِينٍ

'உங்களை நாம் மண்ணிலிருந்தும் தொடர்ந்து விந்துத் துளியிலிருந்தும் படைத்தோம்' (அல் குர்ஆன் 22 : 5).

خَلَقْنَاكُم مِّن تُرَابٍ ثُمَّ مِن نُّطْفَةٍ

ஆக, மனிதன் எப்படிப் பிறந்தான் என்பதற்கு டார்வினும் அவருடைய ஆதரவாளர்களும் கொடுக்கும் விளக்கத்தை ஒட்டுமொத்த விஞ்ஞான

மும் ஏற்றுக் கொண்டுள்ள விளக்கத்தை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை என்பது என்னவோ உண்மை!.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை இறைவன் எவ்வாறு படைத்தான்? பூமியின் எந்தப் பகுதியிலிருந்து மண் எடுத்தான்? யாரைக் கொண்டு எடுத்தான்? அப்போது என்ன நிகழ்ந்தது? என்பதைப் பற்றி யெல்லாம் மக்கள் வழக்காறுகளும் புகழ்பெற்ற கதைகளும் உள்ளன. சுவாரஸ்யமான கதைப் புத்தகங்களாக அவற்றை கருதலாமே ஒழிய, நபிமார்களின் வரலாறாக எண்ண முடியாது.

முதல் மனிதர் என்பதால் ஆதம் அலைஹிஸ்ஸலாம் 'அபுல் பஷர்' (மானுடர் தந்தை) என அழைக்கப்படுகிறார்.

''அல்லாஹ் ஆதமை மண்ணிலிருந்து படைத்தான். அவருடைய உயரம் அறுபது முழம். 'நீங்கள் சென்று அந்த வானவர்களிடம் முகமன் (ஸலாம்) சொல்லுங்கள். அவர்கள் அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை உற்று கவனித்துக் கொள்ளுங்கள். அதுவே உங்களுக்கும் உங்களுடைய சந்ததியினருக்கும் பதிலாகும்' என்று அவரிடம் கூறினான்.

அவ்வாறே ஆதம் அவர்களிடம் போய் 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது இறைவனின் சாந்தி ஏற்படட்டும்) எனக் கூறினார். அதற்குப் பதிலாக அவர்கள், 'அஸ்ஸலாமு அலைக்க வ ரஹ்மத்துல்லாஹி' (அவ் விதமே உங்கள் மீதும் இறைவனின் சாந்தியும் அத்தோடு அவனுடைய கருணையும் உண்டாகட்டும்) எனக் கூறினார்கள். அதாவது 'ரஹ்மத்துல்லாஹி' என்பதை அதிகப்படியாக சேர்த்துச் சொன்னார்கள்.

சொர்க்கத்தில் நுழையக் கூடியவர் எவராக இருந்தாலும் ஆதமுடைய உருவத்தோடுதான் நுழைவார். அன்றிலிருந்து இன்றுவரை மனிதப் படைப்பு (அழகிலும் உருவத்திலும்) குறைந்துகொண்டே வருகின்றது''.

காண்க : புகாரி, நான்காம் பாகம்,

ஹதீஸ் எண் : 3326 ரஹ்மத் வெளியீடு.

6. வானவர்கள் என்றால் யார்?

மலக்குகள்/மலாயிக்குகள் என்பதையே நம் தமிழில் வானவர்கள் என்கிறோம். மலக்கு என்றால் செய்தி கொணர்பவர்கள் எனப்பொருள். இந்த உலகிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் இறைவனிடமிருந்து செய்தியைக் கொண்டு செல்பவர்கள் மலக்குகள் எனப்படுகிறார்கள்.

மனிதன், இன்னபிற படைப்பினங்களைப் போன்றே அல்லாஹ்வால் படைக்கப்பட்ட படைப்பினமே மலக்குகள். ஒளியால் படைக்கப் பட்டவர்கள். இறைவனுக்கும் மற்றமற்ற படைப்பினங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துபவர்கள். இறைவனுடைய கட்டளைகளையும் இறைபுறத்து செய்திகளையும் படைப்பினங்களுக்கு கொண்டுபோய்ச் சேர்ப்பவர்கள். வானவர்கள் என்று சொல்வதைவிட அவர்களை வானதூதர்கள் என்று சொல்லலாம்.

மலக்குகள் என்று எந்தத் தனிப்படைப்பும் இல்லை. மாறாக, உலகிலுள்ள ஆற்றல்/சக்தித் துகள்களின் தொகுப்பே மலக்குகள் என்றழைக்கப்படுகின்றன எனக் கூறுவோரும் உள்ளனர். ஆனால் அதற்கான ஆதாரங்கள் எதனையும் அவர்களால் சமர்ப்பிக்க இயல வில்லை. அத்தோடு குர்ஆனுடைய வசனங்களும் அவர்களை ஒரு தனிப் படைப்பினமாகவே முன்னிறுத்துகின்றன.

பழங்கால அரபுக்கள் வானவர்களை தெய்வங்களாக எண்ணி வணங்கி வந்தனர். அல்லாஹ்வின் மகள்களாக வானவர்களை அவர்கள் கருதினர். அல்லாஹ்விடத்தில் தமக்காக சிபாரிசு செய்வார்கள் என்ற நம்பிக்கை யோடு அவர்கள் வானவர்களை வழிபட்டு வந்தனர். லாத், உஸ்ஸா, மனாத் போன்ற புகழ்பெற்ற அரபு தேவதைகள், வானவர்களே!.

வணங்கி வழிபடுவதற்கான எப்பண்பையும் வானவர்கள் பெற்றிருக்க வில்லை என்பதை பல்வேறு இடங்களிலும் குர்ஆன் தெளிவுபடுத்து கின்றது. வல்ல இறைவனின் தூயஅடியார்களே வானவர்கள் என்பதை யும் தெளிவுபட எடுத்துக் கூறுகின்றது.

7. கிலாஃபத் எனும் சிறப்பு

ஒருவர் இல்லாதபோது அவர் ஆற்றவேண்டிய பணிகளைச் செய்பவர் அவருடைய ‘கலீஃபா’ என அழைக்கப்படுவார். தன்னுடைய கலீஃபா வாக மனிதனை நியமிக்க உள்ளதாக இறைவன் இங்கு குறிப்பிடுகிறான். உலகில் இதுவரை யாருக்கும் கிடைக்காத சிறப்பு இது!.

உலகப் படைப்பினங்களில் யாருக்கும் எதற்கும் வழங்காத ஒருசில சிறப்பு அதிகாரங்களை மனிதனுக்கு மட்டுமே இறைவன் வழங்கி யுள்ளான். அவற்றைப் பயன்படுத்தி மனிதன் என்ன செய்ய உள்ளான் என்பதுதான் அவனுக்கான சோதனை. அவ்வதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? எவ்வாறு பயன்படுத்தக் கூடாது என்பதற்கான

திட்டவட்டமான வழிகாட்டுதலை முன்னரே இறைவன் வழங்கி விட்டான். அவ்வழிகாட்டுதலையும் அந்நியதிகளையும் நினைவூட்டும் விதமாகத்தான் அவ்வப்போது இறைவன் தன்னுடைய தூதர்களை அனுப்பிக்கொண்டே இருந்தான்.

தங்களுக்கு இந்த உயர்வான சிறப்பும் கௌரவமும் வழங்கப்படவில்லையே என்ற ஆற்றாமையினால்தான் ஜின்களில் ஒரு கூட்டத்தினர் வரம்பு மீறி நடந்து கொண்டார்கள். கிலாஃபத் எனும் பதவிக்கு மனிதனை விட தாங்களே பொருத்தமானவர்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். தங்களுக்குத்தான் அந்தத்தகுதி இருப்பதாக நினைத்துக் கொண்டார்கள்.

தன்னுடைய கலீஃபாவாக மனிதனை இறைவன் ஆக்கியுள்ளான். அப் பொறுப்பை சிறப்பான வகையில் நிறைவேற்றுவதற்காகத்தான் மனிதனுக்கு தனித்திறமைகளும் சிறப்புத் தகுதிகளும் வழங்கப் பட்டுள்ளன.

இன்னொரு விஷயத்தையும் நாம் இங்கு உணரமுடியும். படைத்தவனால் தான் எதற்காகப் படைத்தேன் என்று காரணத்தைக் கூறமுடியும். உலகில் இஸ்லாமைத் தவிர யூதசமயம், கிறிஸ்துவம் என்று எந்தவொரு சமயமும் படைப்பு நோக்கத்தைப் பற்றிக் கூறுவதேயில்லை. தவ்ராத்தை எடுத்துப் பார்த்தோமென்றால் வேளாண்மை விவசாயம் செய்வதற்காகத்தான் மனிதனை இறைவன் படைத்தான் என்று கூறப்பட்டுள்ளது.

8. பிரதிநிதியா? பின்தோன்றலா?

கலீஃபா என்ற வார்த்தைக்கு ஒருசில நூற்களில் பின்தோன்றல் அல்லது தலைமுறை என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளதை நீங்கள் பார்த்திருப் பீர்கள். பிரதிநிதி எனும் சொல்லாடலை அல்ல, இறைவனுக்குப் பிரதிநிதி என்ற கருத்தையே அவர்கள் எதிர்க்கிறார்கள்.

தன்னுடைய பிரதிநிதியாக மனிதனை இறைவன் படைக்க நினைத்தானா? அல்லது முன்னரே இந்தப் பூமியில் வசித்துவந்த ஏதேனுமொரு படைப்பின் பிரதிநிதியாகப் படைக்க நினைத்தானா என்றொரு கேள்வி இங்கு எழுகின்றது.

மனிதன் படைக்கப்படுவதற்கு முன்னால் இந்தப் பூமியில் ஜின்கள்

வசித்து வந்தனர். பூமியில் சீர்குலைவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியதால் அவர்கள் துடைத்தெறியப்பட்டு அவர்களுடைய இடத்துக்கு மனிதர்கள் நியமிக்கப் பட்டனர். ஆகையால், மனிதர்கள் 'பிரதிநிதிகள்' என அழைக்கப்படுகிறார்கள். இது ஒரு கருத்து!.

இறைவன் பல சிறப்பு அதிகாரங்களை மனிதனுக்கு வழங்கி அவனைத் தன்னுடைய பிரதிநிதியாக நியமித்தான் என்பது இன்னொரு கருத்து!.

முதல் கருத்தை எடுத்தவுடன் நாம் நிராகரித்துவிட முடியாது என்றாலும் மனிதப்படைப்புக்கு முன்னால் இந்தப் பூமியில் ஜின் களுடைய ஆதிக்கம் நிலவி வந்தது என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் அடிப்படையும் கிடையாது. மனிதன் படைக்கப்படுவதற்கு முன்னால் இந்தப் பூமியில் ஜின்கள் வசித்து வந்தன என்பதற்கு இறைவேதம் குர்ஆனிலோ அல்லது தவ்ராத்திலோ அவ்வாறே ஏதேனுமொரு ஸஹீஹான ஹதீதிலோ ஆதாரம் கிடையாது. குறியீடுகள், சைகைகள் போன்ற சார்பு அம்சங்களை சுட்டிக்காட்டியே இக்கருத்து கட்டப் பட்டுள்ளது. நிலையான கட்டிடம் ஒன்றை அதற்கு மேலாக நாம் கட்ட இயலாது.

இறைவனுடைய பிரதிநிதி எனும் இரண்டாவது கருத்தை வலி யுறுத்தும் ஏராளமான ஆதாரங்களை நாம் காண முடியும்.

لَقَدْ خَلَقْنَا الْإِنْسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ

(1) 'நிச்சயமாக மனிதனை நாம் மிக அழகிய வடிவத்தில் படைத் துள்ளோம்' (அல்குர்ஆன் 95 : 4).

قَالَ يَا إِبْلِيسُ مَا مَنَعَكَ أَنْ تَسْجُدَ لِمَا خَلَقْتُ بِيَدَيَّ

(2) "என் கையால் நான் படைத்ததை ஸஜ்தா செய்யவிடாமல் உன்னை தடை செய்தது எது? இப்லீஸே!" (அல்குர்ஆன் 38 : 75).

(3) "பிறகு, அதை செம்மைப்படுத்தினான். அதில் தன்னுடைய ரூஹை ஊதினான்" (அல்குர்ஆன் 32 : 9).

ثُمَّ سَوَّاهُ وَنَفَخَ فِيهِ مِنْ رُوحِهِ

(4) "அவன் ஆதமுக்கு எல்லாப் பொருட்களின் பெயர்களையும் கற்றுக் கொடுத்தான்" (அல்குர்ஆன் 2 : 31).

وَعَلَّمَ آدَمَ الْأَسْمَاءَ كُلَّهَا

هُوَ الَّذِي خَلَقَ لَكُم مَّا فِي الْأَرْضِ جَمِيعًا

(5) 'இந்தப் பூமிப் பிரதேசத்தில் உள்ள அனைத்தையும் உங்களுக்காக அவனே படைத்தான்'' (அல்குர்ஆன் 2 : 29).

وَسَخَّرَ لَكُم مَّا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ جَمِيعًا مِّنْهُ

(6) 'வானங்களிலும் பூமியிலும் உள்ள யாவற்றையும் அவனே உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தான்'' (அல்குர்ஆன் 45 : 13).

إِنَّا عَرَضْنَا الْأَمَانَةَ عَلَى السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَالْجِبَالِ فَأَبَيْنَ أَن
يَحْمِلْنَهَا وَأَشْفَقْنَ مِنْهَا وَحَمَلَهَا الْإِنسَانُ

(7) 'வானங்களின் மீதும் பூமியின் மீதும் நாம் இப்பொறுப்பை சுமத்திய போது ஏற்றுக் கொள்ள இயலாது என அவை மறுத்துவிட்டன. (அப் பொறுப்பை எண்ணி) அவை பயந்தன. மனிதனோ அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டான்'' (அல்குர்ஆன் 33 : 72).

இவ்வசனங்களை ஆழ்ந்து கவனித்தால் கீழ்வரும் விஷயங்கள் நமக்கு புலப்படுகின்றன.

- *தன்னுடைய கரங்களால் மனிதனை இறைவன் படைத்துள்ளான்.*
- *மனிதப் படைப்பு முக்கியமான படைப்பு என்பதை மலக்குளின் மத்தியில் அறிவித்துள்ளான்.*
- *தன்னுடைய ரூஹை மனிதனுடைய உடலில் ஊதியுள்ளான்.*
- *முந்தைய படைப்பினங்கள் எதற்கும் கொடுக்கப்படாத 'தேர்ந் தெடுக்கும் உரிமை'யும் நினைத்தபடி செயல்படும் சுதந்திரமும் மனிதனுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது.*
- *வானதூதர்களான மலக்குகளுக்குக் கூட கொடுக்கப்படாத அறிவு மனிதனுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது.*
- *வானத்தூதர்களால் ஸஜ்தா செய்யப்படக் கூடிய சிறப்பும் மனிதனுக்குக் கிடைத்துள்ளது.*
- *ஓரிடத்தில் இப்பொறுப்பு 'அமானத்' என குறிப்பிடப் பட்டுள்ளது. அப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள பயந்து வானங்களும் பூமியும் மறுத்து விலகி விட்டன. அமானத் என்பது 'தெரிவு செய்யும் உரிமை' (Freedom of Choice) யும் பொறுப்புணர்வும் (Responsibility) ஆகும். இவற்றின்*

பாரத்தை உணர்ந்த வானங்களும் பூமியும் வேண்டாம் என மறுத்து விட்டன. இப்பொறுப்பை ஏற்கும் நிலையில் மனிதனுக்கு முன்பாக படைக்கப்பட்ட எப்படைப்பும் இல்லை. இறுதியில் மனிதன் முன் வந்தான். பொறுப்பை சுமந்து கொண்டான்.

- மனிதனுக்கு முன்னால் வானங்களிலும் பூமியிலும் இருந்த எந்த வொரு படைப்பும் பொறுப்பை சுமக்கும் நிலையில் இல்லை. ஆகை யால், பொறுப்பை ஏற்றுக்கொண்ட வகையில் மனிதன் யாருடைய 'பிரதிநிதி'யாகவும் *(Successor)* இல்லை என்பதே உண்மை!.

- 'கிலாஃபத்' என்றும் 'அமானத்' என்றும் இப்பொறுப்பே உணர்த்தப் பட்டுள்ளது. வானதூதர்களுக்கும் ஜின்களுக்கும் முன்னால் கிலாஃபத் துக்கு தகுதியானவன் மனிதனே என்பது அத்தியாயம் பகறாவில் உணர்த்தப்பட்டது. வானம், பூமியில் எப்படைப்பும் இதற்கு தகுதி பெற்றதாக இல்லை என்பது அத்தியாயம் அஹ்ஸாபில் உணர்த்தப் பட்டது.

- கிலாஃபத் என்கிற வார்த்தையின் உண்மையான பொருள் என்ன என்பதை அமானத் எனும் வார்த்தை விளக்கிவிடுகின்றது. விரிந்து பரந்துள்ள இந்தப் பிரபஞ்சத்தில் மனிதனுடைய நிலை என்ன என்பதை இவ்விரு வார்த்தைகளும் விளக்கிவிடுகின்றன. இந்தப் பூமியின் ஆட்சியாளனாக மனிதன் உள்ளான். ஆயினும், தன்னுடைய தகுதியின் காரணமாக அவன் இப் பொறுப்புக்கு வரவில்லை. அவனுக்கு இப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. *(Delegated)* இப்பொறுப்பில் அவன் நியமிக்கப்பட்டுள்ளான். அவனிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை *(Delegated Power)* இறைவன் அமானத் எனும் பதத்தால் குறிப்பிடு கிறான். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை செயல்படுத்து வதால் மனிதன் கலீஃபா *(Vicegerent)* என்றழைக்கப்படுகிறான். கலீஃபா என்றால், 'தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை முறைப்படி பயன்படுத்துபவன்' *(Person Exercising Delegated Powers)* என்று பொருளாகின்றது.

மேற்கண்ட இவ்விஷயங்கள் யாவும் கிலாஃபத் என்பதன் உண்மைப் பொருள் யாது என்பதை நமக்கு உணர்த்திவிடுகின்றன. இறைவனின் பிரதிநிதி என்பதே அது என்று அய்யந்திரிபற சந்தேகமே இல்லாமல் நாம் விளங்கிக் கொள்கிறோம்.

'பிரதிநிதி' என்றால் யார்? என்ற அடுத்த கேள்வி எழுகின்றது.

ஒருவர் தம்முடைய மறைவுக்குப் பின்னால் தாம் செய்து வந்த

காரியங்களை கவனித்துக் கொள்ள நியமித்துச் செல்பவர்தாம் அவருடைய பிரதிநிதி என்று அழைக்கப்படுவார். அல்லது ஒருவர் இல்லாதவிடத்து அவருடைய காரியங்களை கவனித்துக் கொள்பவர் பிரதிநிதி என அழைக்கப்படுவார். அப்படியெனில் இறைவன் மறைந்து போகக் கூடியவனா? செயலற்றுப் போகக் கூடியவனா? என்றெல்லாம் சந்தேகங்கள் எழுகின்றன.

யோசித்துப் பார்த்தால் இவை அனைத்தும் அடிப்படையற்றவை என்பது விளங்கிப் போகும்.

மனிதனுக்கு முன்னால் படைக்கப்பட்ட எப்படைப்புக்கும் வழங்கப் படாத சில சிறப்பு அதிகாரங்களும் உரிமைகளும் மனிதனுக்கு இறை வனால் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை எவ்வழிகளில் அவன் பயன் படுத்துகிறான் என்பதுதான் அவனுக்கான சோதனை!.

கலீஃபா எனும் வார்த்தைப்பதம் எந்நோக்கில் பயன்படுத்தப் பட்டுள் ளது என்பதை அறிய இவ்விளக்கம் போதுமென்று நினைக்கிறேன்.

(ஆ) மண்ணுலகிற்கு வரும் முன்

9. வானவர்களின் கேள்வி

தன்னுடைய பிரதிநிதியாக மனிதனை பூமியில் உருவாக்க உள்ளேன் என்று இறைவன் கூறியபோது, اَتَجْعَلُ فِيهَا مَنْ يُّفْسِدُ فِيهَا وَ يَسْفِكُ الدِّمَآءَ *''அங்கே சீர்குலைவை ஏற்படுத்தி இரத்தத்தை ஓட்டுபவனையா உருவாக்கப்போகிறாய்?'' என்று வானவர்கள் வினாவொன்றை எழுப்பினர். (அல்குர்ஆன் 2 : 30).*

ஃபஸாது என்றால் சீர்குலைவு எனப்பொருள். 'ஃபஸாது ஃபில் அர்ழ்' (பூமியில் சீர்குலைவை ஏற்படுத்துதல்) என்று குர்ஆன் குறிப்பிடுவது எதனை என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

பூமியின் ஒழுங்கமைப்பையும் சட்ட அமைப்பையும் அல்லாஹ்வின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப நடத்தாமல் தான்தோன்றித்தனமாக நடத்துவது, இறைவனின் கட்டளைகளுக்கு மாறு செய்வது, தன்னுடைய மனோ இச்சைகளை செயற்படுத்த முனைவது, உண்மையான ஆட்சி யாளனின் சட்டதிட்டங்களை அமுல்படுத்தாமல் தன்னுடைய மனோ இச்சைகள் அபிலாஷைகளுக்கு ஏற்ப ஆட்சி புரிவது போன்றவற்றையே குர்ஆன் 'பூமியின் சீர்குலைவு' என்ற சொல்லால் குறிக்கின்றது.

கொடுங்கோன்மை, அராஜகம் போன்றவற்றைக் கையாண்டு இவை செயல்படுத்தப்படுகின்றனவா, இல்லை ஏதேனும் சித்தாந்தம், கொள்கையின் நிழலில் செயல்படுத்தப்படுகின்றனவா என்பது இங்கு முக்கியமில்லை.

பூமியைப் படைத்தவனான அல்லாஹ்வே அதனுடைய உண்மையான ஆட்சியாளனாவான். மனிதன் இப்புவியின் ஆட்சியாளன் அல்லன். உண்மையான ஆட்சியாளனின் பிரதிநிதியே மனிதன். ஆகவே, பூமியின் மூலை முடுக்குகளெங்கும் அல்லாஹ்வின் ஆட்சி செயல் படுத்தப்படுவதில்தான் நீதியும் உலக அமைதியும் அடங்கியுள்ளன.

பூமியின் ஏதேனும் ஒரு பகுதியில் இறைவனின் ஆட்சி செயல்படுத்தப்

படவில்லை என்றால் அப்பகுதியில் கிளர்ச்சியும் குழப்பமும் தலைதூக்கும். ஒட்டுமொத்த பூமியின் அமைதிக்கே அது பங்கம் விளைவிக்கும் என்று தான் பொருள்.

பூமியில் சீர்குலைவு தோன்றினால் இரத்தம் கண்டிப்பாக ஓடும். இறைவனுடைய சட்டங்களைப் புறக்கணித்துவிட்டு மனிதன் தன்னுடைய மனோஇச்சைகளின் வழி செயல்படும்போது இன்னொரு சகமனிதனின் உரிமைகளைப்பற்றியும் அவை பறிக்கப்படுவதைப்பற்றியும் சகமனிதன் அவமானத்துக்கு ஆளாவதைப் பற்றியும் அறவே கவலைப்பட மாட்டான்.

சீர்குலைவைச் செய்பவர்கள் ஒன்றாகக் கூடி ஓர் அமைப்பை நிறுவிக் கொண்டாலும் அங்கே கண்டிப்பாக அமைதி நிலவ வேண்டும் என்ற கட்டுப்பாட்டை தங்களுக்குத்தாமே வகுத்துக் கொண்டாலும் முழுமையான அமைதியை அவர்களால் செயல்படுத்தவே இயலாது. தம் சமூகம் சாராத மாற்றாரைப் பொருத்தவரை அவர்கள் துஷ்டர்களாகவே இருப்பார்கள். திருடர்கள் தமக்கிடையே செய்துகொண்ட ஒப்பந்தத்தோடு இதனை ஒப்பிடலாம். உலகில் அமைதியோடும் நிம்மதியோடும் வாழும் எத்தனை எத்தனையோ நாடுகள் பிற நாடுகளில் குழப்பம் தோன்றவும் வளரவும் காரண கர்த்தாக்களாக திகழுவதை நாம் காணவே செய்கிறோம்.

ஒரு மனிதன் மனோஇச்சைகளின் படி செயல்படும்போது தன்னுடைய நலன்களுக்கே முக்கியத்துவம் அளிப்பான். அதுவே ஒரு தேசமாக இருக்கும்போது தன்னையும் தன்னின மக்களையும் மட்டுமே மனதில் கொண்டு அது செயல்படும். தன் நலனுக்காக மற்றவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை தத்துவார்த்தமாக அது நியாயப்படுத்தவும் செய்யும். உலகில் உள்ள எல்லா மனிதர்களையும் எல்லா நாடுகளையும் படைத்த இறைவனுடைய சட்டங்கள் செயல்படுத்தப்படும்போதுதான் உண்மையிலேயே ‘உலக அமைதி’ நிலவும். நிலவ முடியும்.

வானவர்கள் மனதில் எழுந்த ஒருவகையான அச்சத்தை உடனடியாக வெளிப்படுத்தினார்கள். அந்த அச்சம் தோன்றுவதற்கு கலீஃபா என்ற வார்த்தையே காரணமாக அமைந்தது. குறிப்பிட்ட சில அதிகாரத்தை மனிதனுக்கு இறைவன் வழங்க உள்ளான். அவ்வதிகாரத்தை மனிதன் நினைத்தால் தன்னிச்சையாக தன்னிஷ்டப்படி பயன்படுத்த முடியும் என்பதை கலீஃபா என்ற சொல்லின் மூலமாக வானவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

அந்த அதிகாரத்தை முறைப்படி பயன்படுத்தாது போனால்

என்னென்ன விளைவுகள் எல்லாம் ஏற்படும் என்பதை எண்ணி பயந்து போன வானவர்கள் தங்களுடைய அச்சத்தை சொற்களில் வெளிப்படுத்தி னார்கள்.

10. புலனறிவும் பெயரறிவும்

உலகில் உள்ள ஒவ்வொரு உயிரும் தம்மோடு சேர்ந்து வாழும் பிற உயிரிகளைச் சார்ந்தே வாழ வேண்டியிருக்கின்றது. ஆகையால் அவற்றை உணர்ந்து கொள்ள வேண்டியதும் தோழமை கொள்வதா பகைமை பாராட்டுவதா என்று முடியு செய்யவேண்டியதும் மிகமிக அவசியம். பொதுவாக உயிரிகள் அனைத்தும் புலன் அறிவைக் கொண்டும் தொடு உணர்ச்சியை அடிப்படையாக வைத்தும் மற்ற உயிரிகளை அடை யாளம் கண்டு கொள்கின்றன.

மண்ணில் விளைந்துள்ள ஒரு புல்லைக் கண்டதும் அதனைச் உண்ணலாமா கூடாதா என்பதை முகர்ந்து பார்த்தும் தன்னுடைய உள்ளுணர்வை கேட்டுக் கொண்டும் ஒரு பசுமாடு முடிவு செய்து கொள்கின்றது. ஆனால், மனிதனுடைய நிலை அவ்வாறல்ல!. அவன் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பெயரைச் சூட்டியுள்ளான். ஒரு பொருளுடைய தன்மை அதனுடைய பண்புகள் போன்றவற்றை அடிப்படையாக வைத்தே மனிதன் அப்பொருளுக்குத் தகுந்த பெயரைச் சூட்டுகிறான். அப்பெயரறிவைக் கொண்டே தனக்குத் தேவையான தையும் தேவையற்றதையும் பிரித்துணர்கிறான்.

பெயர்கள் இரண்டு வகைப்படுகின்றன. பெயரைக்கேட்டவுடன் அப் பொருளின் தன்மையும் அதனுடைய பண்பும் தெரிந்துவிடுவது ஒரு வகை. தமிழில் நாம் இத்தகைய பெயர்களை ‘காரணப் பெயர்கள்’ என்கிறோம். ஏன் இந்தப் பெயரை வைத்தார்கள்? என்ன காரணம்? என்றே தெரியாத பெயர்கள் இன்னொரு வகை. அவை ‘இடுகுறிப் பெயர்கள்’ என்றழைக்கப்படுகின்றன.

நம்முடைய அறிவு என்பது முழுக்க முழுக்க பெயர்களைச் சார்ந்தே இயங்குகின்றது. அண்டவெளியில் எங்கோ கோடானுகோடி மைல் களுக்கு அப்பால் ஒரு கேலக்ஸியையோ விண்மீனையோ கண்டுபிடித்து விட்டால் உடனே நாம் அதற்கொரு பெயரைச் சூட்டிவிடுகிறோம். நுண்ணிய பாக்டீரியா ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டாலும் அதற்கு ஒரு பெயரைச் சூட்டுகிறோம். அப்புறம் பெயர் வைத்துக் கொள்ளலாம்

என்று தான் கண்டுபிடித்த கதிரியக்க கதிர் ஒன்றிற்கு ‘எக்ஸ்ரே’ என ஒருவர் அப்போதைக்கு ஒரு பெயரை வைத்தார். அப்புறம் அதுவே அதற்குப் பெயராகிவிட்டது.

வார்த்தைகளைக் கற்றுக் கொள்வதைத்தான் நாம் ‘கல்வி’ என்கிறோம். இதற்கு இன்ன வார்த்தை, இதை இவ்வாறு அழைக்கவேண்டும் என்பதைத்தான் நாம் கல்விக் கூடங்களில் கற்றுக் கொள்கிறோம். ஒரு மொழியில் நிறைய வார்த்தைகளைத் தெரிந்து வைத்திருப்பவர் அம் மொழியில் புலமை பெற்றுவிடுகிறார். தான் நினைப்பதை வார்த்தை களைக் கொண்டு வெளிப்படுத்த முடியாதவன் பாமரனாக பட்டிக் காட்டானாக அறியப்படுகிறான்.

பல்துறைகளிலும் புழங்கும் பற்பல வார்த்தைகளைத் தெரிந்து வைத்திருப்பவன் அறிவாளி. நிறைய வார்த்தைகளை கற்றுக்கொள்ள கற்றுக்கொள்ள நீங்கள் அறிவாளி என மதிக்கப்படுகிறீர்கள்.

ஒரு பொருளைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என்றால் அதனுடைய பயன்பாடு, சிறப்பம்சம் என்று எல்லாவற்றைப் பற்றியும் தெரியும் என்றுதான் அர்த்தம். கம்யூட்டரைப் பற்றி எனக்குத் தெரியும் என்றால் அதனுடைய பயன் என்ன? சிறப்பு என்ன? அதை எவ்வாறு கையாள்வது? என்பதனைத்தும் தெரியும் என்றுதானே பொருள்.

நுணுக்கமான பெயரறிவு துல்லியமான ஞானத்தைக் காட்டுகின்றது. பரிச்சயமே இல்லாத ஒரு என்ஜினின் பாகங்களையோ அவற்றின் பெயர் களையோ உங்களால் கூறமுடியாது. பொருள் பயன்பாட்டைப் பற்றித் தெரியாமல் வெறுமனே பெயரை மட்டும் தெரிந்து வைத்திருந்தால் வெறும் ‘ஓசை’யை மட்டுமே நம்மால் வெளிப்படுத்த இயலும். ஆம், அது பொருளற்ற ஓசையே!.

முதல் மனிதர் ஆதமுக்கு அல்லாஹ் சுப்ஹானஹு¯த் தஆலா எல்லா வகையான பெயர்களையும் கற்றுக் கொடுத்தான். (அல்குர்ஆன் 2 31).

உலகில் தோன்றிய முதல் மனிதர் எல்லாவகையான அறிவையும் பெற்றவராக அனைத்தையும் அறிந்தவராக இருந்தார்.

11. வானவர்களின் மரியாதை

வானம் பூமி அனைத்தையும் இறைவன் மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுத்தான் என்பதில் வானவர்களும் அடங்குவர். வானவர்களை வசப்படுத்திக் கொடுத்துள்ளான் என்பதற்கு என்ன பொருள்?. பல்வேறு

வகைப்பட்ட பணிகளை வானவர்களுக்கு இறைவன் அளித்துள்ளான். உலக நிர்வாகம், மழை, கடல், காற்று, வெள்ளாமை, விவசாயம், வெள்ளம், வேதனை, இயற்கைச் சீற்றங்கள் என்று அனைத்துப் பணிகளும் வானவர்களைக் கொண்டே இயக்கப்படுகின்றன. ஆகையினால் தான் ஒருசில விரிவுரையாளர்கள் வானவர்கள் என்பதற்கு ஆற்றல், சக்தித் தொகுப்பு என்றும் பொருள் கொள்கிறார்கள்.

புவியுலகம் மற்றும் பூமி சார்ந்த வானத்தின் நிர்வாகப் பணிகளோடு தொடர்புடைய வானவர்களிடம் மனிதனுக்கு கட்டுப்படுமாறும் கீழ்ப்படியுமாறும் கூறப்பட்டது. பூமி சார்ந்த பகுதியில்தான் இறைவன் தன்னுடைய பிரதிநிதியாக மனிதனை நியமிக்க உள்ளான். அந்த சிறப்புச் சலுகையையும் தனிப்பட்ட அதிகாரங்களையும் பயன்படுத்தி மனிதன் ஏதேனும் செய்ய நாடினால், - அவை சரியோ தவறோ - மனிதனுடைய உத்தரவுகளுக்கு கட்டுப்படுமாறும் தத்தமது எல்லைக்குள்ளாக எந்தளவு அவ்வுத்தரவுகளை நிறைவேற்ற இயலுமோ அந்தளவு நிறைவேற்றி வைக்குமாறும் வானவர்களுக்கு கட்டளையிடப்பட்டது.

மனிதன் திருட நினைக்கிறானா, தொழ நினைக்கிறானா, நல்லது புரிய எண்ணுகிறானா, தீயதைச் செய்ய முயல்கிறானா -- அவன் எதைச் செய்ய ஆசைப்பட்டாலும் அதனைச் செய்துகொள்ள அவனுக்கு நாம் அனுமதி வழங்கியுள்ளோம். அவனுக்குத் தேவையான அளவு உதவி ஒத்தாசை செய்தாக வேண்டியது வானவர்களுடைய பணி!.

மாபெரும் மன்னர் ஒருவர் தன்னுடைய ஆளுகைக்கு உட்பட்ட பகுதியொன்றில் ஆளுனர் ஒருவரை நியமித்து அனுப்புகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஆளுனர் அப்பகுதிக்குச் சென்று முன்னரே அங்கு பணியில் இருக்கும் அதிகாரிகளைப் பயன்படுத்தித்தான் தன்னுடைய வேலைகளைச் செய்யத் தொடங்குவார். அந்த அதிகாரிகளுக்கு மன்னரிடமிருந்து ஒரு கட்டளை வருகின்றது. ‘நாம் இந்த ஆளுனருக்கு எல்லாவகையான அதிகாரங்களையும் வழங்கியுள்ளோம். அவர் என்ன சொன்னாலும் மறுபேச்சு பேசாமல் நீங்கள் அவருக்குக் கட்டுப்படுங்கள் கீழ்ப்படியுங்கள். அவர் செய்வது சரியா, தவறா என்பதையெல்லாம் யோசித்துக் கொண்டிருக்காதீர்கள்’.

அந்த ஆளுனர் என்ன செய்தாலும் எதைச் செய்தாலும் அதிகாரிகள் ஒத்துழைப்பு தருகிறார்கள். அதேசமயம், மன்னரிடமிருந்து குறிப்பிட்ட வேலையொன்றைச் செய்யாதீர்கள் என்ற சமிக்ஞை கிடைத்துவிட்டால் அந்த ஆளுனரின் அதிகாரம் செல்லாக்காசாகிடும். அவரால் எதுவொன்றுமே செய்யயியலாது. அதிகாரிகள் அனைவரும் பந்த்

செய்துவிட்டார்களோ என்று அவர் சிந்தனையில் ஆழ்ந்துவிடுவார்.

அந்த ஆளுனரைக் கைது செய்து சிறையில் அடையுங்கள் என்று அரசாங்க ஓலை வந்துவிட்டால் நேற்றுவரை சொன்னதற்கெல்லாம் மறு பேச்சு பேசாமல் ஓடிஓடி வேலை செய்து கொண்டிருந்த அதே அதிகாரிகள் விலங்கோடு வந்து கையில் பூட்டி அழைத்துச் சென்று விடுவார்கள்.

மனிதனுக்கு ஸஜ்தா செய்யுமாறு வானவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டளையின் யதார்த்தம் இதுதான்!.

இறைக்கட்டளையின்படி மனிதனுக்கு கட்டுப்படத் தயார் என்பதை அவர்கள் வெளிப்படையான ஸஜ்தாவின் மூலமாக உணர்த்தினார்களா? என்றொரு கேள்வி இங்கு எழுகின்றது.

12. ஸஜ்தா என்றால் என்ன?.

அரபி மொழியில் ஸஜ்தா என்றால் குனிவது எனப்பொருள். குனிவது என்பது பலதரப்பட்ட வடிவங்களில் நிகழும். ஒருவருக்குமுன்பு மரியாதைக்காக நீங்கள் தலைகுனியலாம்; உடம்பை வளைத்து குனியலாம்; நெடுஞ்சாண் கிடையாக படுக்கலாம்; நெற்றியைத் தரை யில் வைத்து சாஷ்டாங்கமாக விழலாம். இவை அனைத்துமே ஸஜ்தா என்றே அழைக்கப்படும்.

மரியாதைக்காக தலைகுனிவதற்கு முந்தைய ஷரீஅத்துகளில் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. பனூ இஸ்ராயீல்களிடம் பரவலாக இந்தப் பழக்கம் காணப்பட்டது. நம்முடைய ருகூஃ போன்று குனிந்து அவர்கள் மரியாதை (ஸஜ்தா) செய்து வந்தார்கள் என்பதை தவ்ராத் வேதத்தின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். ஸஜ்தத்துத் தஃழீமிய்யா எனப்படும் இந்த ஸஜ்தாவை உம்மத்தே முஹம்மதிய்யாவுக்கு அருளப்பட்ட இஸ்லாமில் தடைவிதிக்கப்பட்டுவிட்டது. பணிவு மரியாதை போன்ற வற்றை வெளிப்படுத்தும் எல்லா வடிவங்களையும் வல்ல இறைவன் ஒருவனுக்கென்றே ஆக்கிவிட்டது இஸ்லாம். ஒரு மனிதர் வந்தால் மரியாதைக்காக எழுந்து நிற்பதைக்கூட இஸ்லாம் தடை செய்து விட்டது. எந்தவொரு சின்ன ஓட்டை வழியாகவும் ஷிர்க் நுழைந்து விடக்கூடாது என்பதில் இஸ்லாம் வெகு எச்சரிக்கையாக உள்ளது.

இங்கு ஆதமுக்கு வானவர்கள் ஸஜ்தா செய்ததில் எந்தவொரு குற்றமும் கிடையாது. ஏனெனில் முதற்கண் அல்லாஹ்வுடைய ஆணைக் கிணங்கவே அவர்கள் ஸஜ்தா செய்தார்கள். அதாவது, இறை யாணைக்கே அவர்கள் கட்டுப் பட்டுள்ளார்கள். இரண்டாவது, ஸஜ்தா செய்வதும் ஷிர்க்கின் ஒரு வடிவமே என்பதால் பிற்காலத்தில் இஸ்லாமில் தடை செய்யப்பட்டது. அதுவரை மரியாதைக்காக ஸஜ்தா செய்யப் பட்டே வரப்பட்டுள்ளது. ஆகையால், ஆதமுக்கு ஸஜ்தா செய்யுங்கள் எனில் ஆதமுக்கு பணிவோடு மரியாதை செலுத்துங்கள் என்பதுதான் பொருள்!.

13. எதற்காக இந்த ஸஜ்தா?

முன்னரே சொல்லப்பட்டது போல மனிதனுடைய விருப்பங்களை நிறைவேற்றுவதில் வானவர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்பதை வெளிப்படுத்தும் விதமாகவே ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிடப் பட்டது. இன்னொரு விஷயமும் இதில் அடங்கியே உள்ளது. இறைவன் வானவர்களை சோதிக்க நினைத்தான். நம்முடைய மனதுக்குப் பிடிக்காத ஒரு காரியத்தைச் செய்வதுதான் உண்மையிலேயே நமக்கு சோதனை யாகும். வானவர்கள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள். அதுவும் இறைவனைத் துதிப்பதற்கும் அவன் புகழ்பாடுவதற்கும் என்றே படைக்கப் பட்டவர்கள். மண்ணால் படைக்கப்பட்ட மனிதனுக்கு முன்னால் தலைசாய்த்து மரியாதை செய்யவேண்டும் என்பது அவர்களுடைய மனது ஒருபோதும் ஒப்புக் கொள்ளாத ஒரு காரியம். வானவர்கள் இதிலுள்ள ஹிக்மத்தை நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆகையால், மெய்யறிவு பெற்ற அவர்கள் உடனடியாக தலைசாய்த்து சிரம் தாழ்த்தி ஆதமுக்கு மரியாதை செய்தார்கள். சோதனையில் வெற்றி பெற்று விட்டார்கள்.

ஆதமுடைய அறிவுச் சிறப்பு நிரூபிக்கப்பட்டபிறகே வானவர்களுக்கு ஸஜ்தா செய்யும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகையால் வானவர்களை விடவும் மனிதனே சிறந்தவன் என்றொரு கருத்தையும் ஒருசிலர் முன் வைக்கிறார்கள். ஆனால், இது தவறான கருத்தாகும். ஏனென்றால் மனிதன் படைக்கப்படும் முன்பே வானவர்களுக்கு ஸஜ்தாவுக்கான கட்டளை வந்துவிட்டது. குர்ஆன் தெளிவாகவே அதைக் குறிப் பிட்டுள்ளது.

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَٰٓئِكَةِ إِنِّي خَٰلِقٌ بَشَرًا مِّن صَلْصَٰلٍ مِّنْ
حَمَإٍ مَّسْنُونٍ ﴿٢٨﴾ فَإِذَا سَوَّيْتُهُۥ وَنَفَخْتُ فِيهِ مِن رُّوحِي فَقَعُوا لَهُۥ سَٰجِدِينَ ﴿٢٩﴾
فَسَجَدَ ٱلْمَلَٰٓئِكَةُ كُلُّهُمْ أَجْمَعُونَ ﴿٣٠﴾ إِلَّآ إِبْلِيسَ أَبَىٰٓ أَن يَكُونَ مَعَ ٱلسَّٰجِدِينَ ﴿٣١﴾

''பேதகமடைமந்த (சுண்டினால் ஓசை வரும்) களிமண்ணிருந்து மனிதனை நான் படைக்க உள்ளேன். அவனைப் படைத்து செவ்வை யாக்கிய பிறகு அவனுடைய உருவில் என்னுடைய ரூஹை ஊதுவேன். உடனே நீங்கள் அனைவரும் ஸஜ்தாவில் விழுந்துவிடவேண்டும். அவ்வாறே வானவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஸஜ்தாவில் விழுந்தனர். இப்லீஸைத் தவிர. ஸஜ்தா செய்ய என்னால் முடியாது என்று அவன் மறுத்துவிட்டான்'' (அல்குர்ஆன் 15 : 28 31).

மனிதனுடைய அறிவு நிரூபிக்கப்படும் முன்பே ஸஜ்தாவிற்கான கட்டளை வந்துவிட்டது என்பதோடு இன்னொரு விஷயமும் இதி லிருந்து தெரிய வருகின்றது. ஸஜ்தா செய்யச் சொன்னதன் நோக்கமே வானவர்களை சோதிப்பதுதான். உயர்ந்த படைப்பினம் எனும் பெருமையும் அகம்பாவமும் அவர்களிடம் இருக்கின்றதா? என்பதை அறிவதுதான். ஆகையால்தான் மனிதனை நான் அழுகிப்போய் நாற்ற மெடுக்கும் ஓடுபோல் காய்ந்த களிமண் ணிலிருந்து படைக்கப் போகிறேன் என்ற தகவலையும் இறைவன் தெரிவிக்கிறான். வானவர்களின் தோற்றமூலத்திற்கு முன்னால் மனிதனின் தோற்ற மூலம் எந்தளவுக்கு இழிவானது என்பதை விளக்கியபிறகே ஸஜ்தா செய்யுமாறு ஆணையிடுகிறான்.

14. மஸ்ஜூதுல் மலாயிக்கா

மனிதகுலப் பிரதிநிதியான ஆதமுக்கு வானவர்கள் ஸஜ்தா செய்ததால் ஆதமுக்கு எள்ளளவும் பெருமையில்லை. மனிதனுக்கு வானவர் கள் ஸஜ்தா செய்தது உண்மையில் அவர்களுக்கான சோதனையே என்பதை உணர்ந்து கொண்டோம். சிறப்பான ஒரு பொருளால் படைக்கப்பட்ட காரணத்தாலேயே யாரும் சிறந்தவர்கள், உயர்ந்தவர்களாக ஆகிவிட முடியாது. ஒளியால் படைக்கப்பட்டதால் வானவர்களுக்கு எந்தப் பெருமையும் இல்லை. இறைவனுக்கு எந்தளவு அவர்கள்

கட்டுப்படுகிறார்கள்; இறை கட்டளைகளுக்கு எந்தளவு செவிசாய்க் கிறார்கள் என்பதில்தான் அவர்களுடைய பெருமையும் உயர்வும் இருக்கின்றன!.

இங்கே இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நாம் கவனித்தாக வேண்டும். மனிதனுடைய நிலை உண்மையில் எப்பேற்பட்டது?. இப்போது அவன் இருக்கும் நிலை என்ன? என்பதே அது.

لَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ ﴿٤﴾ ثُمَّ رَدَدْنَاهُ أَسْفَلَ سَافِلِينَ ﴿٥﴾

'நாம் மனிதனை மிகஉயர்வான நிலையில் படைத்தோம். பிறகு, அவனை மிகமிக கீழான நிலைக்கு தாழ்த்தி விட்டோம்' (அல்குர்ஆன் 95 : 4,5) என்று இறைவன் கூறுகிறான்.

மனிதனின் பிரதிநிதியான ஆதமுக்கு ஒரு காலத்தில் வானவர்கள் தலை சாய்த்து மரியாதை செலுத்தியுள்ளார்கள். வானவர்களுடைய மரியாதையைப் பெற்றுக்கொள்ளும் அளவு தகுதியையும் அருகதை யையும் இறைவன் மனிதனுக்குக் கொடுத்துள்ளான். அந்த மரியாதையை மனிதன் தக்கவைத்துக் கொண்டுள்ளானா? வானவர்களைப் பார்த்து 'மனிதனுக்கு மரியாதை செலுத்துங்கள்' என்று இறைவன் சொல்லக் கூடிய நிலையில் இன்றைக்கும் மனிதன் இருக்கிறானா? மஸ்ஜூதுல் மலாயிக்கா என்ற உயர்நிலைப் படித்தரம் இன்றைக்கும் மனிதன் கைவசம் உள்ளதா? --- இவையெல்லாம் ஆதம் அலைஹிஸ் ஸலாமுடைய வரலாறு இன்றும் எழுப்பும் கேள்விகள். வெறும் கேள்விகளே!. விடையற்ற கேள்விகள்.

அவ்வாறே ஸஜ்தா செய்யவேண்டுமென்ற ஆணை வானவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. மாறாக, புவிப்பரப்பில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் ஸஜ்தா செய்யுமாறு கட்டளை பிறப்பிக்கப் பட்டது. படைப்பினங்களில் உயர்படைப்பினம் என்பதால் வானவர் களின் பெயர் மட்டும் வான்மறை குர்ஆனில் குறிப்பிடப் பட்டுள்ளது. எல்லோருக்குமான கட்டளை என்பதால்தான் இப்லீஸால் மறுக்க முடிந்தது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். வானவர்களுக்கு மட்டுமே கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தால் இப்லீஸ் மறுக்க வேண்டிய அவசியமேயில்லை.

மஸ்ஜூதுல் மலாயிக்கா அதாவது வானவர்களால் சிரம் பணியப் பட்டவன் என்பது மனிதன் இவ்வுலகில் எவ்வாறு வாழவேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றது. உலகிலுள்ள படைப்பினங்களிலேயே

உயர்ந்த படைப்பினமான வானவர்களை மனிதனுக்கு ஸஜ்தா செய்யுமாறு இறைவன் கட்டளையிட்டுள்ளான். அதற்கு அடிபணிந்து அவர்களும் மனிதனுக்கு மரியாதை செலுத்தியுள்ளார்கள். பெருமையும் அகம்பாவமும் கொண்டு இப்லீஸ் சிரம் பணிய மறுத்துவிட்டான். அப்படிப்பட்ட உயர்நிலைக்குச் சொந்தக்காரனான மனிதன் எக் காலத்திலும் வானவர்களையோ ஜின்களையோ அல்லது மற்ற மற்ற படைப்பினங்களையோ தன்னுடைய கடவுளாக தெய்வமாக எண்ணி வழிபடவே கூடாது. மிகப்பெரிய வழிகேடு அது!.

(இ) நிரந்தரப் பகைவன்

15. இப்லீஸின் மறுப்பு

ஆதமுக்கு ஸஜ்தா செய்க என்ற இறைகட்டளை வந்தவுடன் வானவர்கள் அனைவரும் சட்டென்று ஸஜ்தாவில் விழுந்துவிட்டனர். ஆனால், ஸஜ்தா செய்ய இப்லீஸ் மறுத்துவிட்டான். இப்லீஸ் வானவர் கூட்டத்தைச் சார்ந்தவன் அல்லன். ஜின்களைச் சார்ந்தவன். கீழ்ப் படியாமல் மறுப்பது என்பது வானவர்களின் இயல்பிலேயே இல்லை.

لَا يَعْصُونَ اللَّهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ ۞

''அல்லாஹ்வின் ஆணைக்கு அவர்கள் மாறு செய்யவே மாட்டார்கள். கட்டளையிடப்படுவதை உடனுக்குடன் நிறைவேற்றி விடுவார்கள்''. (அல் குர்ஆன் 66: 6).

يَخَافُونَ رَبَّهُم مِّن فَوْقِهِمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ ۞

''அவர்கள் பெருமையடித்துக் கொள்ளமாட்டார்கள். தங்களுக்கு மேலே உள்ள தங்களுடைய இறைவனுக்கு பயந்து கொண்டே இருப்பார் கள். ஆணையிடப்பட்டதை உடனுக்குடன் செய்துவிடுவார்கள்'' (அல்குர்ஆன் 16 : 50).

ஜின்கள் வானவர்களைப் போன்றவர்கள் அல்லர். மனிதர்களைப் போன் றோர். பகுத்தறியும் தீர்மானிக்கும் உரிமையும் சுதந்திரமும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. நன்மையையும் தீமையையும் விரும்பித் தேர்ந் தெடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றவர்கள்.

இப்லீஸ் என்றால் சோகத்தில் மூழ்கிப்போனவன் எனப்பொருள். நிராகரிப்பவன், விசனத்தில் ஆழ்ந்தவன் என்ற பொருளும் உண்டு. 'முப்லிஸூன்' (முற்றிலும் நிராசை அடைந்து போய்விடுவது) என்ற வார்த்தையையும் (6 : 44, 30 : 12) 'யுப்லிஸு' (வருத்தத்தில் மூழ்கி நிலைகுலைந்து போவது) என்ற வார்த்தையையும் (30 : 49) அல்குர்ஆன் பயன்படுத்தியுள்ளது.

ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு ஸஜ்தா செய்யமாட்டேன் என்று மறுத்த 'ஜின்'னின் பட்டப்பெயர்தான் இப்லீஸ்.

16. ஷைத்தான்கள் என்போர் யாவர்?

பகுத்தறிவைப் பயன்படுத்தி தங்களுடைய செயல்களை எடை போட்டுப் பார்க்கவல்ல படைப்பினங்களாக மூன்று உயிரினங்களை குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது. (அ) வானவர்கள் (ஆ) ஜின்கள் (இ) மனிதர்கள்.

'ஜின்களை இறைவன் தீப்பிழம்பிலிருந்து படைத்துள்ளான்' (அல்குர்ஆன் 55 : 15). وَخَلَقَ الْجَانَّ مِن مَّارِجٍ مِّن نَّارٍ (١٥)

வானவர்களை இறைவன் ஒளியிலிருந்தும் ஜின்களை நெருப்பிலிருந்தும் படைத்துள்ளான். நெருப்பு என்றால் விறகையோ அடுப்புக்கரியையோ எரிப்பதால் உண்டாகும் நெருப்பு அல்ல!. வேறுவகையான நெருப்பு!. தீப்பிழம்பு எனில் புகையற்ற ஜ்வாலை!.

ஆரம்பத்தில் மனிதன் மண்ணிலிருந்து படைக்கப்பட்டான். பிறகு படிப்படியாக மாற்றம் அடைந்து விந்துத் துளியிலிருந்து படைக்கப் படுகிறான். அது போன்றே முதல்ஜின் தொடக்கத்தில் நெருப்பு ஜ்வாலையிலிருந்து படைக்கப்பட்டது. தொடர்ந்து அதிலிருந்து அதனுடைய சந்ததிகள் பெருகலாயின. ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுடைய நிலையைப் போன்றதே முதல் ஜின்னின் நிலையும். ஆதம் அலைஹிஸ் ஸலாம் மண்ணிலிருந்து படைக்கப் பட்டாலும் அவருடைய சந்ததியினருக்கு மண்ணோடு எந்தத் தொடர்பும் கிடையாது. நாம் மண்ணால் படைக்கப்பட்டவர்கள். நம்முடைய மூலக்கூறுகள் மண்ணின் மூலக்கூறுகளோடு ஒத்துள்ளன. எனினும், நமக்கும் மண்ணுக்கும் நேரிடையாக யாதொரு தொடர்பும் கிடையாது. அதுபோலவே முதல் ஜின்னிலிருந்து தோன்றிய மற்ற ஜின்களுக்கும் நெருப்பு ஜ்வாலைக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது.

ஜின்கள் அருவமானவர்கள் அல்லர். அவர்களுக்கென்று ஓர் உருவம் வழங்கப்பட்டுள்ளது. தூயநெருப்பு மூலக்கூறுகளால் உருவானவர்கள் என்பதால் தூயமண்ணிலிருந்து உருவான மனிதர்கள் கண்களில் அவர்கள் தட்டுப்படுவதில்லை. ஆகவேதான், 'நீங்கள் பார்க்க முடியாத இடங்களிலிருந்து அவனும் அவனைச் சார்ந்தவர்களும் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" (அல்குர்ஆன் 7 : 27).

ஜின்கள் ஓரிடத்தை மிகவேகமாக கடந்து விடுகின்றன. பல்வேறு வடிவங்களை எடுக்கின்றன. உணரமுடியாத அளவுக்கு ஒருசில இடங்களைக் கடந்து சென்றுவிடுகின்றன. (அவ்விடங்களை மனிதர்களால் கடந்து செல்ல இயலாது. அவ்வாறு சென்றாலும் பிறரால் உணர முடியும்). நெருப்பால் படைக்கப்பட்டவர்கள் என்பதால் அவர்களால் இது சாத்தியமாகின்றது. சாத்தியப்படும் என்பதை நம்பவும் முடிகின்றது.

படைக்கப்பட்ட விதத்தால் ஜின்கள் மனிதர்களோடு மட்டுமல்லாமல் மற்ற தாவரங்கள், விலங்குகள், உயிரினங்களோடும் வேறுபட்டு உள்ளன.

ஜின்கள் என்று எந்தவொரு படைப்பும் கிடையாது. மனிதர்களிலேயே தீயவர்களை அவ்வாறு நெருப்பைக்கொண்டு இறைவன் படைத்துள்ளான். நல்லவர்களை மண்ணைக் கொண்டு படைத்துள்ளான் என்றும் ஒருசிலர் கருதுகிறார்கள். அவர்களுடைய நினைப்பு தவறு என்பதை குர்ஆனிய வாசிப்பிலிருந்து உணர முடிகின்றது.

ஷைத்தான்கள் என்றொரு தனிப் படைப்பினம் கிடையாது. ஜின்களிலும் மனிதர்களிலும் இறைவனுக்கு மாறு செய்து வருபவர்களே ஷைத்தான்கள் என அழைக்கப்படுகிறார்கள். நல்வழி எது? தீயவழி எது? என்று தீர்மானித்து பின்பற்றத் தூண்டும் அறிவை மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் இறைவன் கொடுத்துள்ளான். அவ்வாறிருக்கையில் இறைவனின் பாதையை புறக்கணித்துவிட்டு வழிகேட்டுப் பாதையை தமதாக்கிக் கொண்டவர்கள் இப்லீஸோடும் அவனுடைய தோழர்களோடும் போய்ச் சேர்ந்து கொள்கிறார்கள்.

17. மறுத்தவர்களும் காரணமும்

மனிதனுக்குக் கட்டுப்படுதல், மனிதனுக்கு வழங்கப்பட்ட கிலாஃபத் எனும் சிறப்பை அங்கீகரித்தல் போன்றவற்றின் வெளிப்பாடுதான் ஆதம் அலைஹிஸ் ஸலாமுக்கு செய்யப்பட்ட ஸஜ்தா!.

ஜின்களில் ஷைத்தானியப் பண்பைப் பெற்றிருந்தவர்களால் இதை ஜீரணித்துக் கொள்ள இயலவில்லை. இறைவனுடைய பிரதிநிதி எனும் சிறப்பு தங்களுக்குக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் தாங்கள் நெருப்பால் படைக்கப்பட்டவர்கள் என்கிற இறுமாப்பும் அவர்களை இறைவனுக்கு எதிரான கிளர்ச்சியில் இறங்கத் தூண்டின.

'நிராகரிப்பவர்களில் அவனும் ஒருவனாக இருந்தான்' என்று குர்ஆன் கூறுகின்றது.(2:34) ஜின்களில் ஒரு கூட்டமே பொறாமையால் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அக்கூட்டத்திற்கு இப்லீஸ் தலைமை தாங்கினான்.

தங்களுக்கு வழங்கப்படாத நான்கு வகை சிறப்புகளால் ஆதம் அலைஹிஸ் ஸலாம் கௌரவிக்கப்பட்டதை ஜின்கள் வெறுப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

(அ) இறைவன் நேரடிடையாக மனிதனைப் படைத்தான். படைப்பில் தனிக் கவனம் செலுத்தினான். 'ஆகுக!' என்று அவன் ஆணையிட்டாலே போதும். எல்லாமே ஆகிவிடும். இருப்பினும் மனிதப்படைப்பில் சிறப்புப் பார்வையைச் செலுத்தினான்.

(ஆ) மனித மூலஉருவில் தன்னுடைய ரூஹை ஊதினான்.

(இ) மனிதனுக்கு ஸஜ்தா செய்யுமாறு வானவர்கள் உட்பட அனைவருக்கும் கட்டளை பிறப்பித்தான்.

(ஈ) எல்லாவகையான அறிவையும் ஆதம் அலைஹிஸ் ஸலாமுக்கு கற்றுக் கொடுத்தான்.

இந்நான்கையும் ஜின்களால் சகித்துக் கொள்ள இயலவில்லை. அவர் களுடைய உள்ளத்தில் பொறாமைத்தீ கொழுந்துவிட்டு எரிந்தது. விளைவறியாமலும் யாரை எதிர்க்கிறோம் என்று பாராமலும் அவர்கள் இறைகட்டளையை மீறத் துணிந்தார்கள்.

பிறப்பால், இருக்கும் இடத்தால் ஒருவன் சிறப்படைவதில்லை. அவன் எந்தளவுக்கு இறைவனை அஞ்சுகிறான் என்பதைப் பொருத்தே அவனுக்கு கண்ணியமும் கௌரவமும் கிட்டுகின்றது. இஸ்லாம் தொடர்ந்து கற்றுக் கொடுக்கும் பாடம் இது!.

இந்தப் பாடத்தில் வெற்றிபெற வேண்டும் என்பதுதான் பகுத்தறிவு வழங்கப்பட்ட உயிரினங்களுக்கு (மனிதர்களுக்கும் ஜின்களுக்கும்) இறைவன் வைக்கும் சோதனை!. பகுத்தறிவைச் சரியாகப் பயன் படுத்தா மல் மனோ இச்சைகளை வழிபடுபவர்கள் இறைகட்டளையை மீறும் ஷைத்தானிய வழிகேட்டுப் பாதையை தமதாக்கிக் கொள்கிறார்கள்.

பெருமை என்பது இறைவனுக்கு மட்டுமே சொந்தமான ஒன்று!. அதை களவாடவும் கைக்கொள்ளவும் நினைப்பவர்கள் இறைவனோடு மோது கிறார்கள். தனக்கு சற்றும் தகுதியில்லாத ஒன்றுக்கு ஆசைப்பட்டால் அது அவமானத்தையே கொண்டுவரும்!. 'எல்லாம் வல்ல' இறை வனுக்கு பயப்படுவதுதான் படைக்கப்பட்ட பொருள் ஒன்றுக்கு

பெருமையைத் தேடித் தருமே அல்லாமல் நான் என்ற நினைப்பும் எனது என்ற இருப்பும் பெருமையைத் தராது!. இழிவையும் அழிவையுமே பெற்றுத் தரும்!.

18. தீராத பகைமை

'சிரம் பணியுமாறு கட்டளையிட்டபோது அதைச் செய்யவிடாமல் உன்னைத் தடுத்தது எது?' என்று இறைவன் கேட்டான்.

''அவரைவிட உயர்ந்தவன் நான்!. என்னை நெருப்பிலிருந்து படைத்தாய். அவரையோ களிமண்ணிலிருந்துதானே படைத்தாய்!'' என்று இப்லீஸ் பதிலளித்தான்.

'இறங்கிவிடு இங்கிருந்து! இங்கிருந்துகொண்டே பெருமை யடிக்கிறாயா? வெளியே போய்விடு! இழிவை அள்ளிக் கொள்பவர்களில் ஒருவனாக ஆகிவிட்டாய்!''.

''எழுப்பப்படும் நாள்வரை எனக்கு அவகாசம் அளிப்பாயாக!'' என்று அவன் கேட்டுக்கொண்டான்.

'நீ கேட்ட அவகாசம் உனக்கு கொடுக்கப்படும்'.

'நான் வழிகெட்டுப் போனதற்கு நீதான் காரணம் என்பதால் உன்னுடைய நேர்வழியில் உட்கார்ந்து கொண்டு இவர்களை மேலே செல்ல விடாமல் தடுத்துக் கொண்டிருப்பேன். முன்னால் இருந்தும் பின்னால் இருந்தும் வலப்பக்கத்தில் இருந்தும் இடப்பக்கத்தில் இருந்தும் அவர்களை வளைத்துக் கொள்வேன். அவர்களில் பெரும்பாலோர் நன்றி கெட்டவர்களாக இருப்பதையே நீ பார்க்கப் போகிறாய்!''.

'இழிவடைந்தவனாக, விரட்டப்பட்டவனாக இங்கிருந்து வெளியேறி விடு!. உன்னைப் பின்பற்றுவோரையும் உங்கள் யாவரையும் கொண்டு நரகத்தை நான் நிரப்புவேன்!''. (அல்குர்ஆன் 7 : 12-18).

எண்ணம் தவறாக ஆகிவிட்டால் எடுத்துவைக்கும் ஆதாரங்களும் அடிப் படையற்றுப் போகின்றன. 'நெருப்பால் படைக்கப்பட்டவன் நான்!. ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவர்' என்று இறுமாப்போடு இப்லீஸ் கூறினான். மண்ணைவிட நெருப்பு எவ்விதத்தில் சிறந்தது?. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனித்தன்மை இருக்கவே செய்கின்றது. அதனதன் பயன்பாட்டை முன்னிருத்தினால் ஒவ்வொன்றும் சிறந்தது தான்!.

ஆதமுக்கு வழங்கப்பட்ட கௌரவத்தையும் கண்ணியத்தையும் இப்லீஸால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவனுடைய அகம் பாவத்தாலும் ஆணவத்தாலும் சொர்க்கத்திலிருந்து இழிவைச் சுமந்த வாறு வெளியேற்றப் பட்டான். எந்தெந்தக் காரணங்களால் மனிதன் கௌரவப்படுத்தப் பட்டானோ அந்தக் காரணங்களை எல்லாம் தவிடு பொடியாக்குவேன் என்று இப்லீஸ் அல்லாஹ்விடமே சபதம் செய்தான்.

(1) தன்னைவிட மனிதனை அல்லாஹ் மேம்படுத்தியதுதான் ஷைத்தானின் பொறாமைக்கு வழிவகுத்தது. எந்தப் பண்புகளால் மனிதன் தன்னைவிட முன்னிலைப்படுத்தப்பட்டானோ அந்தப் பண்பு களையெல்லாம் செல்லாக் காசாக்கிவிட ஷைத்தான் துடித்தான். அதற்கான அவகாசத்தை இறைவனிடமே கேட்டு வாங்கிக்கொண்டான்.

'நீ எனக்கு மறுமைநாள்வரை அவகாசம் அளித்தால் அவருடைய வழித் தோன்றல்கள் அனைவரையும் அடியோடு வழிகெடுத்து விடுவேன். மிகக் குறைவான மக்கள்தான் என்னிடமிருந்து தப்பமுடியும்!" (அல்குர்ஆன் 17 : 62).

தன்னை விரோதியாகப் பாவித்து தன்னை தோற்கடிக்க அயராது முயற்சி செய்யும் ஷைத்தானுடைய படையில் சேர்ந்து அவனுக்கு தொண்டூழியம் புரிகிறானே மனிதன்!. எவ்வளவு பெரிய மடமை இது!!. தன்னைப்பற்றி இறைவனிடம் ஷைத்தான் சொல்லியதுதான் சரி என்று தன்னுடைய செயல்களால் நிரூபித்துக் கொண்டிருக்கும் மனிதனைப் பற்றி வேறென்ன சொல்வது?.

(2) இந்த உலகத்தில் மனிதன் ஒரு மிகப்பெரிய போராட்டத்தையே சந்திக்க வேண்டியுள்ளது. அதில் அவனுடைய பலங்கொண்ட எதிரியாக ஷைத்தான் உள்ளான். தன்னுடைய புகழ்மொழிகள், படை பட்டாளங் கள், ஆயுதங்கள், உபகரணங்களோடு மனிதனைத் தோற்கடிக்க ஷைத்தான் தொடர்முயற்சியில் ஈடுபட்டுள்ளான். அவனுக்கு இறைவன் கியாமத் நாள்வரை அவகாசம் அளித்துள்ளான்.

(3) மனிதனுக்கு எதிரான இந்தப் போரில் ஷைத்தானுடைய இலக்கே 'ஓரிறைக் கொள்கை' (தவ்ஹீத்) தான். ஓரிறைக் கொள்கை எனும் நேர் வழியில் நின்றுகொண்டுதான் ஷைத்தான் அவ்வழி செல்வோரை யெல்லாம் பிடித்து இழுத்து வேறுவேறு முட்டுச் சந்துகளில் திருப்பி விட்டுக் கொண்டுள்ளான். நேர்வழியை மனிதன் விட்டுவிட்டான் என்றால், நன்றிகெட்டவனாக மாறி விடுவான் என்பதில் எந்தவிதமான அய்யமும் இல்லை!.

(4) தன்னுடைய உள்ளத்தில் அகம்பாவம் இடம் பிடித்ததற்கு காரணம் என்ன என்பதை ஷைத்தானே கூறியிருக்கிறான். ''அவனைவிடச் சிறந்தவன் நான்!. நெருப்பால் படைக்கப்பட்டவன். அவனோ கேவலம் மண்ணால் உண்டாக்கப் பட்டவன்!''. பிறப்பால் யாரும் உயர்ந்துவிட முடியாது. நெஞ்சிலிருந்து பிறந்தவர்கள், அல்லாஹ்வின் மக்கள், பனூ ஹாஷிம் வம்சாவழியினர், சாதாத் வழியினர் (சய்யிதுகள்) என்றெல்லாம் தமக்குத்தாமே பெருமை பாராட்டிக் கொள்ள யாருக்கும் உரிமை இல்லை. பிறப்பால் பெருமை பாராட்டிக் கொள்ளும் கலாச்சாரத்தை ஷைத்தான் தான் தொடங்கிவைத்தான் என்று குர்ஆன் குறிப்பிடு கின்றது.

இறைவன் என்ன சொன்னாலும் கீழ்ப்படிவதுதான் அடிமைக்கான இலக்கணம்!. மனதில் பெருமை கொண்டு இறைவனின் ஏதேனும் ஒரு கட்டளைக்கு -ஒரேஒரு கட்டளைக்கு- கீழ்ப்படிய மறுத்தாலும் இறைவனுக்கு இணையாக அவன் தன்னுடைய பெருமையைக் கருது கிறான் என்றுதான் பொருள். அப்புறமென்ன? அவன் 'ஷிர்க்' எனும் தீராப் பாவத்தில் காலடி வைத்து விடுகிறான்.

கீழ்ப்படிபவர்களுக்காகத்தான் சொர்க்கமே தவிர, மறுப்பாளர் களுக்கான இடமல்ல!. ஆகையால்தான் 'வெளியே போ' என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. பெருமைக்கு பக்கத்தில் இடம் கொடுத்தவர்கள் சொர்க்கத்தின் பக்கமாகக் கூட போக முடியாது.

'நம்முடைய வசனங்களைப் பொய்ப்பித்து பெருமைகொண்டு ஆணவம் கொண்டவர்களுக்கு சொர்க்கத்தின் கதவுகள் ஒருபோதும் திறக்கப்படாது. ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழையாதவரை இவர் களால் சொர்க்கத்துக்குள் நுழைய முடியாது' (அல்குர்ஆன் 7 : 40).

இதே உவமையை இறைத்தூதர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் பயன்படுத்தியுள்ளார்கள்.

> *'செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் என நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். மீண்டும் உங்களுக்குக் கூறுகிறேன். செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது' (மத்தேயு 19 : 23,24).*

செல்வர் ஏன் புகமாட்டார் என்ற காரணத்தை குர்ஆன் கூறியே விட்டது. பெருமை அவர் மனதில் இடம் பெற்றிருப்பதனால்!.

ஆகையால், ஷைத்தான் சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டான்.

வெளியே போ எனும் உத்தரவு வந்தவுடன் தன்னால் இனி ஏதும்

செய்ய முடியாது என்ற பயம் ஷைத்தானுக்கு ஏற்பட்டது. இறைவனிடம் அவன் அவகாசத்தைக் கோரினான். நீ அருளியுள்ள சிறப்புக்கெல்லாம் தகுதியானவன் இந்த மனிதன் இல்லை என்று நிரூபிக்க எனக்கு கால அவகாசம் கொடு என்ற அவனுடைய கோரிக்கை ஏற்கப்பட்டது. மனிதனின் மரணம் வரை அவனை வழிகெடுத்து தன்னுடைய சபதத்தை உறுதிப்படுத்த ஷைத்தான் முயற்சி செய்துகொண்டே இருப்பான்.

'நான் வழிகெட நீ காரணமாக அமைந்தாய்' என்று ஷைத்தான் கூறினான். தன்னுடைய எதிரி மனிதன்தான் எனும் நிலையைத் தாண்டி எதிரியின் இடத்தில் இங்கு அல்லாஹ்வையே கொண்டுவந்து நிறுத்திவிட்டான். தான் ஸஜ்தா செய்யாதது சரிதான். அதில் ஒன்றும் தவறு கிடையாது. வணங்க முடியாது எனக்கூறும் நிலைக்கு தன்னை தள்ளியது இறைவனின் செயலே!. ஆகையால் தன்னுடைய இந்த இழி நிலைக்கு இறைவனே பொறுப்பு என்று இறைவன் மீதே குற்றம் சுமத்தினான்.

குற்றவாளிகள் எப்போதும் இவ்வாறே பேசுகிறார்கள். இறைவனே ஏழையாக வைத்திருப்போருக்கு நாமென்ன பெரிதாய் உதவி செய்து விடப் போகிறோம்?. இறைவன் நாடியிருந்தால் அவர்களுக்கும் வழங்கியிருக்கலாம் அல்லவா? என்றெல்லாம் இறை நிராகரிப்பாளர்கள் கேட்டுள்ளதை குர்ஆன் பதிவு செய்துள்ளது.

நான் இவ்வாறு இருப்பதற்கு இறைவன்தானே காரணம். அவன் நாடியிருந்தால் என்னை மாற்றியிருக்கலாமே! என்று இன்றும் தொழாதவர்களும் வட்டி வாங்குபவர்களும் கேட்கத்தான் செய்கிறார்கள். அதைப் பற்றி அலசுவது நம் நோக்கம் அல்ல!. இதற்கெல்லாம் ஷைத்தானிய மனோபாவம்தான் காரணம் என்பதை மட்டும் பதிவு செய்கிறோம்.

மனிதனை வழிகெடுப்பதற்காக எப்படியெல்லாம் ஷைத்தான் வருவான் என்பதையும் அவனே கூறுகிறான். 'முன்னாலும் பின்னாலும் வலது பக்கமாகவும் இடது பக்கமாகவும் வருவேன்!'.

மனிதனுடைய எல்லா பாகத்திலிருந்தும் ஷைத்தானிய தாக்குதல் தொடுக்கப்படும். காட்சிகள், கோலங்கள், உணர்வுகள், எண்ணங்கள், சிந்தனைகள், இச்சைகள், கிளர்ச்சிகள் என்று எல்லா வாசல் வழியாகவும் அவன் உள்நுழைவான். மனிதனுடைய அறிவு, ஆற்றல், சிந்தனை, தத்துவம், கல்வி, கலை, பண்பாடு எல்லாவற்றையும் தன் விஷத்தால் நிரப்புவான். மனிதனுடைய ஆராய்ச்சி, பகுப்பாய்வு, படைப்புத்திறன், சமூகம், ரசனை, விமர்சனம், அரசியல், சமயம் எல்லாவற்றிலும் சீர்குலைவை ஏற்படுத்துவான்.

‘சரி, நீ போய்விடு!. அவர்களில் யார் உன்னைப் பின்பற்றினாலும் உன்னையும் சேர்த்து நரகம்தான் அவர்களுக்கு நிறைவான கூலியாகும். உனது பசப்பு வார்த்தையின் மூலம் அவர்களில் யாரை உன்னால் வழிபிறழச் செய்யமுடியுமோ வழிபிறழச் செய்!. உனது குதிரைப் படையையும் காலாட்படையையும் அவர்களுக்கு எதிராக அணிதிரட்டு!. சொத்துகளிலும் பிள்ளைகளிலும் நீ அவர்களுடன் பங்காளியாகிவிடு. உன்னுடைய வாக்குறுதி வலைக்குள் அவர்களைச் சிக்கவை!.” (அல்குர்ஆன் 17 : 63,64).

قَالَ اذْهَبْ فَمَنْ تَبِعَكَ مِنْهُمْ فَإِنَّ جَهَنَّمَ جَزَآؤُكُمْ جَزَآءً مَّوْفُورًا ﴿٦٣﴾
وَاسْتَفْزِزْ مَنِ اسْتَطَعْتَ مِنْهُمْ بِصَوْتِكَ وَأَجْلِبْ عَلَيْهِمْ بِخَيْلِكَ
وَرَجِلِكَ وَشَارِكْهُمْ فِي الْأَمْوَالِ وَالْأَوْلَادِ وَعِدْهُمْ

19. ஷைத்தானின் தோழமை குறித்த எச்சரிக்கை

மனிதனின் நிரந்தரப் பகைவனான ஷைத்தான் ஏதேனுமொரு வழியில் மனிதனை வழிகெடுத்தே தீரவேண்டும் என்று வெறியாய் அலைகின்றான். அவனுடைய சூழ்ச்சி வலையில் அகப்படாமல் நிமிர்ந்து நின்று வெற்றி பெற்றால்தான் மனிதன் ஏற்கனவே தான் இருந்த சொர்க்கத்துக்கு சென்றடைய முடியும். குர்ஆன் பக்கத்துக்கு பக்கம் ஷைத்தானைப் பற்றியும் அவனுடைய சூழ்ச்சிகளைப் பற்றியும் எடுத்துரைத்து மனிதனை எச்சரிக்கின்றது.

உண்மையான இறையடியார்கள் இறைவனுக்கு மட்டுமே கட்டுப்பட்டு வாழ்வார்கள். (அதற்குத்தானே இஸ்லாமிய வாழ்வு எனப்பெயர்?) முழுமையாக கட்டுப்பட்டு வாழுங்கள்; ஷைத்தானைப் பின்பற்றி இறைவனுக்கு மாறுசெய்யும் மனப்போக்கை கைக் கொள்ளாதீர்கள் என்று குர்ஆன் எச்சரிக்கின்றது.

“இறை நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் முழுக்க முழுக்க (இறைவனுக்கு கட்டுப்படும்) இஸ்லாமில் நுழைந்துவிடுங்கள்! ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி விடாதீர்கள்! அவன் உங்களுக்கு பகிரங்க பகைவனாவான்!” (அல்குர்ஆன் 2 : 208).

அவ்வனைத்து எச்சரிக்கைகளையும் அலட்சியப்படுத்தி புறந் தள்ளிவிட்டு மனிதன் ஷைத்தானின் அடிச்சுவடுகளையே பின்பற்றிக் கொண்டுள்ளான்.

“நாம் வானவர்களிடம் ‘ஆதமுக்கு சிரம் பணியுங்கள்’ எனக் கூறியதை நினைவு கூருங்கள். அவ்விதமே அவர்கள் அனைவரும் ஸஜ்தா செய்தார்கள், இப்லீஸைத் தவிர! அவனோ ஜின்களினத்தைச் சேர்ந்தவன். தன் இறைவனுக்கு கீழ்ப்படிய மறுத்தான்.

என்னை விட்டுவிட்டு அவனையும் அவனுடைய சந்ததியினரையும் உங்களுடைய உற்ற தோழர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்களா, என்ன? அவர்கள் உங்களுடைய பகிரங்கப் பகைவர்கள்”

*(அல்குர்ஆன் 18 : 50).*acred

குழிபறித்துக் கீழே தள்ள காத்திருப்போரோடு கைகுலுக்கிக் கொண்டிருந்தால் வெற்றிபெறுவோர் கண்டிப்பாக நாமாக இருக்க முடியாது.

“ஆதத்தின் மக்களே! உங்களுடைய தாய் தந்தையரை சொர்க்கத் திலிருந்து வெளியேற்றி அவர்களுடைய வெட்கத்தலங்களை பரஸ்பரம் வெளிப்படுத்தி மானமிழக்க செய்திடவேண்டும் என்பதற்காக ஆடை களை நீக்கியதுபோல உங்களையும் அவன் குழப்பத்தில் ஆழ்த்தாது இருக்கட்டும்!. நீங்கள் பார்க்க முடியா இடங்களிலிருந்து அவனும் அவனுடைய தோழர்களும் உங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இறைநம்பிக்கையற்றவர்களுக்கு தோழர்களாக ஷைத்தான்களை நாம் ஆக்கியுள்ளோம்’ (அல்குர்ஆன் 7 : 26,27).

ஷைத்தானைக் குறித்த எச்சரிக்கை உணர்வு மனதில் இருந்தால் அவனால் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. “ஷைத்தானின் சூழ்ச்சிகள் மிகவும் பலவீனமானவை!” (அல்குர்ஆன் 4 : 76).

(௩) நிறைவேற்றவேண்டிய ஒப்பந்தம்

20. ‘அலஸ்து’ ஒப்பந்தம்

அதென்னது அலஸ்து ஒப்பந்தம்?

ஆதமுடைய சந்ததியர் அனைவரையும் அல்லாஹ் எழுப்பி அவர்களோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டான். அல்குர்ஆனில் ஏழாவது அத்தியாயத்தில் அதைப்பற்றி அல்லாஹ் கூறுகிறான். ‘அலஸ்து’ என்ற வார்த்தையோடு அவ்வரிகள் ஆரம்பமாவதால் நாம் அதனை ‘அலஸ்து ஒப்பந்தம்’ என்று குறிப்பிடுகிறோம்.

‘நினைத்துப் பாருங்கள்! ஆதமுடைய மகன்களின் முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததியினரை எழுப்பி நிப்பாட்டிய பொழுதை! அவர்களுக்கு எதிராக அவர்களையே சாட்சிகளாக ஆக்கிய பொழுதை! ‘நான் உங்களுடைய இறைவன் அல்லவா?’ என்று அவர்களிடம் அல்லாஹ் கேட்டான். ‘ஆம்! நிச்சயமாக நீயே எங்களுடைய இறைவன். இதற்கு நாங்களே சாட்சியாக இருக்கிறோம்!’ என்றவர்கள் கூறினார்கள். எதற்காக நாம் இவ்வாறு செய்தோம், எனில், மறுமைநாளில் “எங்களுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது!’ என நீங்கள் கூறிவிடக் கூடாதல்லவா?. அல்லது நாங்கள் என்ன செய்ய? எங்களுக்கு முன்னால் வந்த எங்களுடைய மூதாதையர்களே இணைவைக்கத் தொடங்கி விட்டிருந்தார்கள். நாங்கள் செய்ததெல்லாம் அவர்களைப் பின்பற்றியது மட்டுமே! என்று சொல்லிவிடக் கூடாதல்லவா? யாரோ கேடுகெட்ட மக்கள் செய்த செயலுக்காக நீ எங்களை தண்டிக்கலாமா? என்று நீங்கள் நியாயம் பேசக் கூடாதல்லவா?’ (அல்குர்ஆன் 7 : 172,173).

ஆதம் அலைஹிஸ்ஸலாம் படைக்கப்பட்டபோது இச்செயல் நடைபெற்றதாக பல்வேறு ஹதீதுகளிலிருந்து அறிந்துகொள்கிறோம். வானவர்களை எல்லாம் ஒன்றுகூட்டி மனிதனை தன்னுடைய பிரதிநிதியாக அறிவித்து அவனுக்கு ஸஜ்தா செய்யுங்கள் என்று இறைவன் கட்டளையிட்டபோது இறுதித்தீர்ப்பு நாள்வரை இவ்வுலகில் பிறக்கவுள்ள ஆதமுடைய மக்கள் அனைவரையும் அல்லாஹ் எழுப்பி நிறுத்தினான். அவர்கள் அனைவருடைய இறைவனும் தானே என்பதை

அவர்களுடைய வாயாலேயே கூறவைத்தான். இந்த இறைவசனத்துக்கு விளக்கமாக நபித்தோழர் உபை இப்னு கஅப் ரழியல்லாஹு அன்ஹு கூறியுள்ளதை பார்ப்போம். அண்ணல் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்துதான் உபை செவியுற்றி ருப்பார்கள் என்று நம்புவதற்கே அதிக சாத்தியக்கூறு உண்டு!.

''அல்லாஹ் அனைவரையும் ஓரிடத்தில் ஒன்றுகூட்டினான். ஒவ்வொரு காலகட்டத்து மக்களையும் தனித்தனிக் கூட்டமான நிற்க வைத்தான். அவர்கள் அனைவருக்கும் மனித உருவையும் பேசும் சக்தி யையும் கொடுத்தான். அவர்களை அவர்களுக்கே சாட்சிகளாக்கி அவர்களோடு ஓர் ஒப்பந்தத்தை செய்துகொண்டான்.

'நான் உங்களுடைய இறைவன் அல்லவா?'

'கண்டிப்பாக, நீயே எங்களுடைய இறைவன்!' என்று அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் கூறினார்கள்.

'நீங்கள் சொல்வதற்கு வானங்கள் பூமியையும் உங்களுடைய தந்தை ஆதமையும் சாட்சியாக்குகிறேன். எங்களுக்கு தெரியாது என்று நீங்கள் நாளை மறுமை நாளில் சொல்லிவிடக் கூடாதல்லவா? என்னைத்தவிர வணக்கத்திற்கு தகுதியானவன் யாரும் கிடையாது; என்னையன்றி வேறு இறைவனும் கிடையாது என்பதை தெள்ளத்தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். வணக்க வழிபாட்டில் என்னோடு யாரையும் நீங்கள் இணையாக்கக் கூடாது. இப்போது என்னோடு நீங்கள் செய்துகொண்ட இந்த ஒப்பந்தத்தை உங்களுக்கு ஞாபகமூட்டுவதற்காக நான் அவ்வப்போது என்னுடைய தூதர்களை அனுப்பிக் கொண்டே இருப்பேன். என்னுடைய வேதங்களை அருளிக்கொண்டே இருப்பேன்!' என்று அல்லாஹ் கூறினான்.

'நீயே எங்களுடைய இறைவன்! எங்கள் வணக்கத்திற்கு உரியவனும் நீயே! உன்னையன்றி எங்கள் இறைவன் யாருமில்லை! எங்களுடைய வணக்கத்திற்கு உரிமைகோருவோரும் யாருமில்லை என்பதற்கு நாங்களே சாட்சி!!' என்று அனைவரும் கூறினார்கள்.

உண்மையிலேயே நடந்த நிகழ்வல்ல இது! இஃது ஓர் உவமைத் தோற்றம்தான். மனித இயல்பமைப்பிலேயே ஓரிறை வழிபாட்டுணர்வு பொதிந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை வர்ணிக்கும் காட்சியே இது -- எனக் கூறுவோரும் உண்டு!. பேருண்மை ஒன்றை காட்சியாக இங்கு படம் பிடித்துக் காட்டுகின்றது அல்குர்ஆன் என்பது அவர்களுடைய கூற்று!.

உண்மையிலேயே நடந்த நிகழ்வாகவே குர்ஆனிலும் ஹதீதிலும் இது கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, மறுமை நாளன்று வெளிப்படையாக இந் நிகழ்வு அனைவருக்கும் புரியும் வகையில் விளக்கிக்காட்டப்படும் என்று வேறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால், நாம் இதனை வெறுமனே உருவகத் தோற்றமாக எல்லாம் கற்பனை செய்யத் தேவையில்லை. புலன்களால் பார்க்கும் உலகில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியைப் போன்றே இந்த நிகழ்சியும் நடைபெற்றதாகவே நாம் எண்ணுகிறோம்.

உலகில் தோன்ற உள்ள கடைசி மனிதன் வரை யாவரையும் அல்லாஹ் எழுப்பி நிறுத்தினான். உயிரையும் உணர்வையும் அவர்களுக்கு வழங்கினான். பேசும் திறனையும் அளித்தான். தனக்கு முன்னால் அவர்கள் அனைவரையும் நிறுத்தி தன்னுடைய புனித இருப்பை உணர்த்தினான். புலன்களால் தாங்கள் உணரும் இந்த பேரொளியையேதான் அனைவரும் வணங்கவேண்டும்;! வேறு எதனையும் இறையாகக் கருதவே கூடாது; ஓரிறையோடு எதனையும் இணையாக்கவும் கூடாது; அவனுக்கு முற்றிலும் கீழ்ப்பட்டு கட்டுப்பட்டு வாழ்வதுதான் (இஸ்லாம்) உண்மையான வாழ்வுநெறி என்பதையும் தெளிவாகப் புரிய வைத்தான்.

நடக்கமுடியாத நிகழ்வு என்று யாரேனும் முடிவுகட்டினால் அது அவருடைய சுருங்கிய சிந்தனையையே வெளிக்காட்டும். மனித இனத்தின் தற்போதைய வளர்ச்சியும் முன்னேற்றமும் நிகழ்வதற்கான எத்தனை சாத்தியக்கூறு உள்ளதோ அதே அளவு சாத்தியக்கூறு முன்பொருநாள் அனைவரும் உயிர் கொடுத்து எழுப்பப்பட்டதற்கும் உள்ளது. பகுத்தறிவும் நிறைஉணர்திறனும் ஏகப்பட்ட அதிகாரமும் கொடுக்கப்பட்டு பிரதிநிதி எனும் கௌரவமும் வழங்கப்பட்டு மனிதஇனம் மண்ணுலகிற்கு அனுப்பப்படும் முன் இறைவன் அவர்களோடு கீழ்ப்படிவதற்கான ஓர் ஒப்பந்தத்தை (Ooth of allegiance) செய்துகொண்டான் என்பதையே மனிதஅறிவு ஒப்புக்கொள்ளும். இந் நிகழ்வு நடந்தது ஒன்றும் ஆச்சரியமல்ல, நடக்காமல் இருந்திருந்தால்தான் ஆச்சரியம்!.

தங்களுடைய இறைவனுக்கு எதிரான பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள் தங்களுடைய செயலுக்கும் அதனுடைய பின்விளைவுகளுக்கும் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

அதை நியாயப்படுத்த பொதுவாக இரண்டு காரணங்களை அவர்கள் முன் வைக்கக்கூடும்.

(1) ஒரே இறைவன் நீதான் என்று நாங்கள் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது எங்களுக்கு சுத்தமாக நினைவிலேயே இல்லை.

(2) எங்களுக்கு முன்னால் சென்ற எங்களுடைய மூதாதையர்கள் செய்ததைத்தான் நாங்கள் வழிவழியாக செய்து வருகிறோம். ஒருவேளை அவர்கள் அறியாது தவறு செய்திருப்பின் அதற்கு நாங்கள் எவ்வாறு பொறுப்பேற்க முடியும்?.

இவ்விரண்டு காரணங்களையும் யாருமே சொல்லக்கூடாது என்பதற் காகத்தான் அல்லாஹ் இங்கே இந்த ஒப்பந்தத்தைச் சுட்டிக் காட்டுகிறான். ஏனென்றால், மனிதகுலத்தில் ஒவ்வொருவரும் தனித் தனியாக இறைவனிடத்தில் இந்த ஒப்பந்தத்ததை செய்து கொண்டுள் ளார். ஆகையால், எனக்குத் தெரியாது என்று யாருமே சொல்ல இயலாது. அவ்வாறே, முன்னோர்கள் செய்தார்கள் என்றும் காரணங் காட்ட இயலாது.

உண்மையிலேயே அப்படி ஓர் ஒப்பந்தம் செய்திருந்தால் நம்முடைய நினைவில் அது இருக்கவேண்டும் அல்லவா, என்றொரு கேள்வி எல்லோருடைய மனதிலும் எழலாம். பிறப்பதற்கு முன்னால் அல்லாஹ் எனக்கு உயிர்கொடுத்து எழுப்பினான். நான்தானே உன்னுடைய இறைவன்? (அலஸ்து பிரப்பிகும்) என்று கேட்டான். நானும் ஆமென்று ஒத்துக்கொண்டு பதில் சொன்னேன் என்பதே என்னுடைய நினைவிலும் ஞாபகத்திலும் இல்லையே! அப்படி யிருக்கும்போது எனக்கு எதிராக அதை எப்படி சுட்டிக்காட்ட இயலும்?.

இதற்கு என்ன பதில்?

அன்று நடந்தது அனைத்தும் புத்தம்புதிதாக நம்முடைய நினைவில் இருந்தால் நாம் உலகிற்கு அனுப்பப்பட்டதே அர்த்தமில்லாமல் போய்விடுமே!. எல்லாமே தெரிந்துவிட்டால் அப்புறம் பரீட்சை எதற்கு? சோதனைதான் எதற்கு?. அன்று நடந்தது நம்முடைய மனதில் இல்லாமல் போனாலும் நம்முடைய ஆழ்நிலை மனதில் (Sub-Conscious Mind) அல்லது நம்முடைய நனவிலி மனதில் (Intution) பசுமை யாகத்தான் இருக்கும். எவ்வாறு நம்முடைய நனவிலி மனதில் வேறு ஏதேதோ எண்ணங்கள் குடிஉள்ளனவோ அவ்வாறே இதுவும் இருக்கத்தான் செய்யும். பண்பாடு, கலாச்சாரம், சமூகம், ஒழுக்கம் என்று எல்லாத் துறைகளிலும் மனிதன் இன்று அடைந்துள்ள முன்னேற்றங் களுக்கெல்லாம் நனவிலி மனதில் பொதிந்துள்ள மறை திறமைகளே (Potentially) காரணம். உட்தூண்டுதல்களும் வெளிக்காரணிகளும் ஒன்று சேர்ந்து மறைந்துள்ளவற்றை வெளிப்படுத்தியுள்ளன அவ்வளவுதான்!.

மனிதனுடைய செயல்களையும் சிந்தனைகளையும் தீர்மானிப்பது அவனுடைய வெளிமனம். பொதுவாக நாம் மனம் என்று சொல்வது

இதைத்தான். இதுவன்றி ஆழ்மனம் அல்லது நனவிலி மனம் ஒன்று உள்ளது. அந்த ஆழ்மனதில்தான் நம்முடைய மறைவான திறமைகளும் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாத உணர்வுகளும் பொதிந்துள்ளன.

இளம்வயதில் ஏதேனும் அசாதாரணமான பாதிப்புகளோ நிகழ்வுகளோ ஏற்பட்டிருந்தால் அவை நம்முடைய ஆழ்மனதில்தான் பதிகின்றன. இயல்பு நிலை பிறழ்ந்த மனநோயாளிகள் இவ்வாறுதான் உண்டா கின்றனர். மனோதத்துவ மருத்துவர்கள் இந்த நனவிலி அதாவது ஆழ் மனதை சீர் படுத்தியே நோயாளிகளை குணப்படுத்துகிறார்கள்.

உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானிகள், தத்துவஞானிகள் போன்றோர் கண்டடைந்த வியத்தகு பேருண்மைகள் அனைத்தும் இந்த நனவிலி மனம் வழியாகத்தான் சாத்தியமாகி உள்ளன.

கல்வியோ பயிற்சியோ சூழலோ எதுவாக இருப்பினும் மனிதனின் நனவிலி மனதில் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணரலாமே ஒழிய, அவனிடம் அறவே இல்லாத ஒன்றை புதிதாக ஒருபோதும் தோற்றுவித்திட இயலாது. அவ்வாறே இவ்வனைத்து சக்திகளும் ஒன்று சேர்ந்தாலும் மனிதனின் மனதில் மறைவாக உள்ள ஒன்றை அறவே இல்லாமல் அழித்துவிடவும் முடியாது. அதிகபட்சமாக, அதனுடைய இயல்பமைப்பை மாற்றி திரித்துக் (Pervert) காட்டமுடியும். அவ்வளவே!.

ஆனால், மறைந்துள்ள அந்தத் திறமை வெளியே வர துடித்துக் கொண்டிருக்கும். வெளிச்சக்திகளின் துணையும் உதவியும் கிடைக்காதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். நம்முடைய நனவிலி மனதிலுள்ள எல்லா மறைதிறமைகளின் நிலையையும் கூறவேண்டுமெனில்...

- நம்முடைய நனவிலி மனதில் மறைதிறமைகள் இருக்கத்தான் செய் கின்றன. அவை உள்ளன என்பதை நாம் வெளிப்படுத்தும் செயல் களிலிருந்து அறிகிறோம்.

- நம்முடைய மறைதிறமைகளை வெளிக்கொணர வெளிப்படை யான நினைவூட்டல், கல்வி, பயிற்சி, வடிவமைப்பு போன்றவை தேவைப்படுகின்றன. இத்தகு வெளிக்காரணிகளுக்கு நம்முடைய நனவிலி மனம் அளிக்கும் பதிலாகத்தான் நம்முடைய மறைதிறமைகள் வெளிப்படுகின்றன.

- இந்த மறைதிறமைகளை உள்ளே உள்ள தவறான இச்சைகளும் வெளியிலுள்ள தீய தாக்கமும் அழுத்திவைக்கின்றன; திரித்து உரு மாற்றுகின்றன அல்லது ஒன்றுமில்லாததைப் போன்று ஆக்கிவிடு

கின்றன. ஆனால், உண்மையிலேயே ஒன்றுமில்லாமல் செய்துவிட முடியாது. ஆகையால், உள்ளுணர்வு, வெளிமுயற்சி இவ்விரண்டும் இணைவதால்தான் சீர்திருத்தமும் மாற்றமும் (Conversion) சாத்தியமாகின்றது.

இவ்வுலகில் நம்முடைய இருப்பு, நம்முடைய தோற்றத்திற்கான காரணம், இப்பிரபஞ்சத்தோடு நம்முடைய தொடர்பு, பிரபஞ்சத்தைப் படைத்தவனோடு நம்முடைய தொடர்பு போன்றவை குறித்த அறிவும் இதைப்போன்றதே ஆகும்.

- மனித வாழ்வின் எல்லா காலகட்டங்களிலும் பூமியின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா நாடுகளிலும் எல்லா தலைமுறைகளிலும் எல்லா வம்சாவழிகளிலும் அவ்வுணர்வு தலையெடுத்து வந்துள்ளது. உலகின் எந்தவொரு சக்தியாலும் அவ்வுணர்வை அழிக்கவோ அடியோடு மறைக்கவோ இயலவில்லை.

- அவ்வுணர்வு தலையெடுத்து செயலுலகில் வெளிப்பட்டபோதெல்லாம் மனித குலத்திற்கு நன்மைகளையும் பயன்களையுமே அள்ளித் தந்துள்ளது. அவ்வுணர்வின் மெய்த்தன்மைக்கு இதுவே எடுத்துக் காட்டாகும்.

இவ்வுணர்வு வெளிப்படவும் செயலுலகில் தடம் பதிக்கவும் வெளியிலிருந்து ஓர் அழைப்புக் குரலின் தேவை என்றும் இருந்துள்ளது. அதனால்தான், இறைத் தூதர்களும் இறைவாக்கினர்களும் இறைவேதங்களும் அவர்களைப் பின் பற்றியோரும் சத்தியநெறியின் அழைப்பாளர்களும் இந்தத் தேவையையே பூர்த்தி செய்கிறார்கள். ஆதலால், அவர்களை அல்குர்ஆன் *முதக்கிர்* (நினைவுபடுத்துபவர்) *திக்ரு* (நினைவு) *தஸ்கிரா* (நினைவூட்டுதல்) அவர்தம் பணியை *தஸ்கீர்* (நினைவுபடுத்துவது) என்ற வார்த்தைகளால் சுட்டுகின்றது. அப்படியென்றால் இறைத்தூதர்களும் இறைவாக்கினர்களும் சத்தியநெறியின் அழைப்பாளர்களும் புதிதாக எந்தவோர் அழைப்பையும் விடுக்கவில்லை; முன்னரே மனித மனதிலுள்ளதை நினைவுபடுத்துவதை மட்டுமே செய்கிறார்கள் என்றுதானே பொருள்!.

வரலாற்றின் எல்லா காலகட்டங்களிலும் மனிதகுல உள்ளுணர்வு இவ்வழைப்புக்கு ஆமென்று நேர்மறையாகவே பதிலளித்துள்ளது. இதன் மெய்த் தன்மைக்கு இன்னுமோர் உதாரணமாகும் இது!. உள்ளே ஒலிக்கும் குரலின் எதிரொலி வெளியே கேட்பதைக் கண்டுதானே மனிதமனம் எழுந்து நின்று ஆமென்று பதில் சொல்லியுள்ளது?.

அறியாமையும் மௌட்டீகமும் மனிதமன இச்சைகளும் இனவெறி மொழி வெறி போன்ற குறுகிய பற்றுகளும் ஜின்களிலும் மனிதர்களிலும் உள்ள ஷைத்தான்களும் தீய போதனைகளும் தவறான தூண்டுதல்களும் இம் மெய்யுணர்வை அமுக்கவும் திரிக்கவும் அடியோடு மறைக்கவும் ஒழித்துக் கட்டவும் எல்லா காலகட்டங்களிலும் முயன்று வந்துள்ளன. அவற்றின் விளைவாக, ஓரிறைவனை விட்டுவிட்டு வேறிறைவனை வணங்கும் ஷிர்க், இயற்கைவாதம், நாத்திகவாதம், கடவுள்மறுப்புக் கொள்கை போன்றவற்றோடு ஆன்மீக, ஒழுக்க சீரழிவுகள் தலை தூக்குகின்றன. இப்படியாக பல்வேறு முனைகளில் வழிகேடு தன்னை ஒருமுகப்படுத்திக் கொண்டு தாக்குதல் தொடுத்தாலும் மனப்பலகையில் எழுதப்பட்ட இம்மெய்வரிகள் அழியாது தொடர்கின்றன. அதன் காரணமாகவே ‘நினைவூட்ட’ யாரேனும் ஒருவர் வந்து விட்டால் உடனுக்குடன் பதில் அளிக்க இவ்வுணர்வு முந்திக்கொண்டு ஓடோடி வருகின்றது.

மெய்த்தன்மையையும் வாய்மையையும் விடாது எதிர்த்து வருவோர் இன்று உலகமெங்கும் நிறைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஓர் உணர்வு மனித மனதில் பதிந்துள்ளது என்பதை அடியோடு ஏற்றுக் கொள்ளாமல் அவர்கள் நிராகரிக்கக்கூடும். ஆனால், மறுமை நாளில் எல்லா மக்களும் ஒன்று திரட்டப்படும் நாளில் வல்ல இறைவன் இந்த உணர்வின் மீதான திரையை நீக்கி விடுவான். அப்போது முன்பொருநாள் நாமெல்லாம் இறைவனுக்கு முன்னால் சத்தியம் செய்து கொடுத்ததும் நீதான் எம்மிறைவன் என்று ஒரே குரலில் முழங்கியதும் ஞாபகத்திற்கு வந்துவிடும்.

அதுமட்டுமல்ல, நாம் அன்றைக்கு செய்த சத்தியத்திற்கான சாட்சியம் நம்முடைய மனதிலேயே மறைந்து இருந்ததையும் இறைவன் வெளிப்படுத்திக் காட்டுவான். அத்தோடு அந்த நினைப்பு அவ்வப்போது தலைதூக்கி தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முயற்சித்த போதெல்லாம் எவ்வாறு அவர்கள் அதனை ஒடுக்கினார்கள், ஓரங் கட்டினார்கள், ஒன்றுமில்லாமல் செய்தார்கள் என்பதையும் அல்லாஹ் புரியவைப்பான். அவர்களாலும் அவர்களைச் சுற்றியுள்ள சூழல்களாலும் எப்படியெல்லாம் அவ்வுணர்வு பாதிக்கப்பட்டது என்பதை விளங்க வைப்பான். சத்திய அழைப்பாளர்களின் அறைகூவல் எப்போதெல்லாம் அவர்கள் காதில் விழுந்தது? அதற்கு விரைந்து பதிலளிக்க எப்படி துடித்துக்கொண்டு மனதின் மெய்யறிவு திமிறியது? அதை எவ்வாறெல்லாம் அவர்கள் அடக்கியும் ஒடுக்கியும் வைத்திருந்தார்கள்?

தங்களுடைய மனோயிச்சைகளையும் போலிப் பற்றுகளையும் அழகாகக் காட்டி எப்படியெல்லாம் அவர்கள் தங்களுடைய ‘மனஒலி’யை சமாதானப் படுத்தினார்கள்? சாந்தமடைய வைத்தார்கள்? பேசவிடாமல் மௌனியாக்கினார்கள்? என்பதையெல்லாம் விவரித்துக் காட்டுவான்.

இரகசியங்கள் எல்லாம் அன்று பொலேரென்று வெளிப்பட்டுவிடும். எந்தவிதமான சாக்குபோக்கு சொல்லவும் இடமிருக்காது. வேறுவழி யில்லாமல் குற்றத்தை ஒப்புக்கொண்டே ஆகவேண்டியிருக்கும். அந்நாளை படம்பிடித்துக் காட்டும் குர்ஆன் நம் கண்களுக்கு முன்னால் எதை நிறுத்துகின்றது என்பதைப் பாருங்கள்.

“குற்றவாளிகள் தங்களுக்குத் தெரியவில்லை என்றோ தாங்கள் அலட்சியப் படுத்திவிட்டோம் என்றோ கூறமாட்டார்கள். மாறாக, தங் கள் மனஒலிக்கு எதிரான நிலையெடுத்து தாங்கள் நிராகரிப்பாளர்களாக ஆகிவிட்டோமே என்றுதான் விசனப்படுவார்கள்” (அல்குர்ஆன் 6 : 130).

ஒரே இறைவனை மட்டுமே வணங்கி வழிபடவேண்டும் எனும் உணர்வு ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் மறைந்து இருக்கின்றது என்றால் மனிதன் முதலில் ஓரிறைக்கொள்கையைத்தானே கடைப் பிடித்திருக்க வேண்டும்? ஆனால், நவீன அறிவியலோ முதல் மனிதன் ஆரம்பத்தில் இயற்கை சக்திகளையே வணங்கி வந்தான் என்றல்லவா கூறுகின்றது? என்று யாரேனும் கேள்வி எழுப்பலாம்.

ஆதிமனிதன் தன்னுடைய அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களை எண்ணி வெகுவாகப் பயந்தான். கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படாத அந்தச் சக்திகளை கடவுளாக எண்ணி வணங்க ஆரம்பித்தான். பிறகு நாளடைவில் அவனுடைய அறிவு வளரவளர அவனுக்கு விஷயங்கள் மெதுமெதுவாக விளங்கத் துவங்கின. தன்னுடைய மடத்தனத்தை எண்ணி, தான் வணங்கி வந்த கடவுளர் களின் சக்தி என்னவென்று தெரிந்துபோனதன் பிறகு, அவற்றை கை விட்டுவிட்டு ஓரிறைக் கொள்கையின் பக்கம் திரும்பினான்.

அறிவியல் எடுத்துவைக்கும் கருத்து இதுதான்!. இதை இஸ்லாம் வன்மையாக மறுக்கின்றது. முதல்மனிதன் துவக்கத்தில் ஓரிறைக் கொள்கையையே பின்பற்றி ஓரிறைவனையே வணங்கி வந்தான் என்று கூறுகின்றது. முதல் மனிதன் ஓரிறைவனையே வணங்கிவந்தான். நாளடைவில் மனிதனுடைய அறிவு சீர்கெட சீர்கெட அவன் சத்தியப் பாதையை விட்டு விலகிச் செல்ல ஆரம்பித்தான். இணைவைப்பு, கண்டதையும் வணங்குவது போன்றவை பிற்காலத்தைய கண்டு பிடிப்புகள் என்றுதான் இஸ்லாம் கூறுகின்றது.

ஏராளமான அருட்கொடைகளை இறைவன் மனிதனுக்கு வழங்கி யுள்ளான். அவ்வருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தும் உணர்வே இயற்கையாக மனிதனின் மனதில் முதலில் தோன்றியிருக்க வேண்டும். அந்நன்றியுணர்வின் வெளிப்பாடாக அவன் ஓரிறையை வணங்கத் துவங்கினான். ஆக, முதல் மனிதன் ஓரிறைவனை வணங்க நன்றி யுணர்வே காரணம்.

பயம் என்பது விளைவு. ஏதேனும் ஒன்றை இழந்துவிடுவோமோ என்ற உணர்வின் வெளிப்பாடுதான் பயம். பயத்தின் காரணமாக மனிதன் வணங்கினான் என்றால் அந்தப் பயம் ஏன் எழுந்தது? எதை இழந்து விடுவோம் என அவன் பயந்தான்? தான் அனுபவித்துவரும் பற்பல அருட்கொடைகளை இழந்துவிடுவோம் எனும் பயம்தானே இயற்கை சக்திகளை வணங்குமாறு அவனைத் தூண்டியது? அப்படியென்றால் பயம் தோன்றுவதற்கு முன்னால் அவ்வருட்கொடைகளை அளித்த வனுக்கு நன்றி செலுத்தும் உணர்வல்லவா அவனுக்கு முதலில் தோன்றியிருக்கவேண்டும்?.

ஆக, வணக்க வழிபாட்டின் முதற்புள்ளி பயத்தில் அல்ல, நன்றி யுணர்வில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. ஓரிறைக்கொள்கை எனும் ஆதிஉணர்வின் சிதைந்த வெளிவடிவங்களே பலகடவுட்கொள்கையாக திரிந்தது. அதைப்பற்றி விரிவாக வேறொரு நூலில் காண்போம்.

தத்துவ விசாரணையாக மாறிவிடுமோ என்று அஞ்சி இவ்விளக்கத்தை மேலும் தொடராமல் இத்தோடு நிறுத்திக் கொள்கிறோம்.

21. ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒரேவழி!

இறைவனோடு செய்துகொண்டுள்ள இந்த ஒப்பந்தத்தை முழுமை யாகவும் முறையாகவும் நிறைவேற்ற வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்?

மனிதனைப் படைக்கப் போகிறேன் என்று இறைவன் வானவர் களிடம் தெரிவித்தபோது வானவர்கள் கூறிய வார்த்தைகளை எண்ணிப் பார்த்து அவற்றை அப்படியே பின்பற்ற முயற்சிக்க வேண்டும்.

“நாங்கள்தாம் உன்னைப் புகழ்ந்து துதிபாடி உன் தூய்மையைப் போற்றிக் கொண்டிருக்கிறோமே!” (அல்குர்ஆன் 2 : 30).

தஸ்பீஹ், தக்தீஸ் எனும் இரண்டு வார்த்தைகளை இங்கு வானவர்கள்

பயன்படுத்தியுள்ளார்கள். தஸ்பீஹ், தக்தீஸ் என்றால் இறைவனைப் புகழ்வது; அவனைத் துதிப்பது; கடவுள் என்று எவற்றைப்பற்றி யெல்லாம் மனிதர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்களோ அவற்றிலிருந்து விலகி அவனைத் தூய்மையானவனாகவும் தூர இருப்பவனாகவும் கருதுவது; அவன் திருமுன் பெருமை பாராட்டாமல் இருப்பது; பெருமைக் கெல்லாம் அவன் ஒருவனே உரியவன் என்று நினைப்பது, சொல்வது, எந்நேரமும் சொல்லிக் கொண்டே இருப்பது; சொல்லால் மட்டுமல்லாமல் செயல்களாலும் சொல்லிக் கொண்டிருப்பது.

அவனுக்கு மட்டும் கட்டுப்பட்டு வாழ்வது, அவனுடைய கட்டளை கள் மட்டுமே செயற்படுத்தப்படவேண்டும் எனும் வேட்கையை வளர்த்துக் கொள்வது, அதற்காக இயன்ற மட்டிலும் பாடுபடுவது, அவனுடைய திருவார்த்தை மேன்மை அடையவேண்டும், அவனுடைய ‘சொல்’ மேலாண்மை பெறவேண்டும் என்று அயராது உழைப்பது.

“அல்லாஹ்வின் வாக்குதான் மேலானதாக இருக்கின்றது!”

(அல்குர்ஆன் 9 : 40).

விண்ணிலிருந்து ஆதம் அலைஹிஸ்ஸலாம் இறக்கப்பட்டபோது இறைவன் வெற்றிக்கான வழியையும் சொல்லிக்கொடுத்தே அனுப்பினான்.

“என்னிடமிருந்து நேர்வழி உங்களிடம் வந்துசேரும். என்னுடைய வழியை யார் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை, அவர்கள் வருத்தமடையவும் மாட்டார்கள்” (அல்குர்ஆன் 2 : 38).

இறைத்தூதர்கள் வழியாக இந்நேர்வழி நமக்கு வந்து சேர்ந்தது. இன்றும் உலகில் நிலைத்திருக்கின்றது. அந்நேர்வழியைப் பின்பற்றுவோர் மட்டுமே வெற்றிவாசலை அடைந்து கொள்வார்கள். இன்ஷா அல்லாஹ்!.

(உ) பரிசோதனையில் தோல்வி

22. சொர்க்க வாழ்க்கை

இறைவனின் பிரதிநிதியாக கௌரவிக்கப்பட்டு பல்வேறு சிறப்பு அதிகாரங்களும் கொடுக்கப்பட்ட மனிதன் வாழவேண்டிய வசிக்க வேண்டிய இடம் சொர்க்கம்தான்!. மஸ்ஜூதுல் மலாயிக்கா எனும் அவனுடைய நிலைக்கு தகுந்த இடமும் உகந்த இடமும் அதுவே!.

'ஆதமே! நீயும் உன்னுடைய மனைவியும் சொர்க்கத்தில் வசியுங்கள்!'' (அல்குர்ஆன் 7 : 19).

தகுதியும் அருகதையும் இருந்தால் மட்டும் போதாது. அதைத் தக்க வைத்துக் கொள்ளவும் வேண்டும். தக்கவைத்துக் கொள்ளும் திறன்தான் நாமிருக்கும் நிலையில் நம்மை தொடர்ந்து இருக்க வைக்கின்றது. சொர்க்கத்திற்கு அனுப்பப்பட்ட மனிதன் சொர்க்கத்திலேயே நிலைத்திருக்க தகுதி வாய்ந்தவனா, என்று இறைவன் சோதித்தறிய வேண்டாமா?. அத்தோடு பிரதிநிதி என்றழைக்கப்படுபவன் எந்நிலையிலும் எச்சூழலிலும் இறைவனுக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும் அல்லவா?. இறைவனொரு சோதனையை வைத்தான்.

''நினைத்ததையெல்லாம் நீங்கள் சாப்பிடலாம். ஆனால், இதோ இந்த மரத்திற்குப் பக்கத்தில் மட்டும் போய்விடாதீர்கள். அப்புறம் உங்களுக்கு நீங்களே அநியாயம் செய்துகொண்ட மக்களாக ஆகிவிடுவீர்கள்!'' (அல்குர்ஆன் 7 : 19).

சொர்க்கத்தில் உள்ள யாவற்றையும் அனுபவித்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒரேஒரு மரத்தின் பக்கமாக மட்டும் போய்விடாதீர்கள். இதுதான் அவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்ட ஆணை!.

''இங்கே உங்களுக்கு பசி தெரியாது. நிர்வாணமாகாமல் இருக்க இங்கே பல வசதிகள் இருக்கின்றன. தாகமோ வெப்பமோ உங்களை வாட்டவே வாட்டாது!'' (அல்குர்ஆன் 20 : 118).

சொர்க்கத்திற்கு போகும் முன்பாகவே உங்களுடைய பகிரங்க விரோதி ஷைத்தான் என்று இறைவன் எச்சரித்துவிட்டிருந்தான். ஆகையால்

அவனுடைய விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையாக இருங்கள். தப்பித் தவறிக்கூட அவனுடைய வலையில் விழுந்துவிடவேண்டாம் என்றும் பலமாக எச்சரித்திருந்தான்.

'ஆதமே! இந்த ஷைத்தான் உங்களுக்கும் உங்களுடைய மனைவிக்கும் பகைவன் ஆவான். (அவனுடைய விஷயத்தில் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்) இல்லாவிட்டால் அவன் உங்கள் இருவரையும் சொர்க்கத்திலிருந்தே வெளியேற்றிவிடுவான். உங்களை கஷ்டத்திலும் ஆழ்த்திவிடுவான்!'' (அல்குர்ஆன் 20 : 117).

பகிரங்க விரோதி அல்லவா?. கவிழ்ப்பதற்கு தக்க தருணத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தான். ''அவர்கள் இருவரையும் ஷைத்தான் வழுக்கி விழ வைத்தான். அவர்கள் இருந்த வசதியான இடத்திலிருந்து வெளித் தள்ளினான்'' (அல்குர்ஆன் 2 : 36).

எப்படி என்று பார்ப்போம்.

23. பசுத்தோல் போர்த்திய புலி

''ஷைத்தான் அவர்களுடைய உள்ளத்தில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தி னான்!'' (அல்குர்ஆன் 7 : 20).

அவர்கள் இருவரையும் சந்தித்தான். 'நான் உங்களுடைய நலம்விரும்பி' என அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''உங்களுடைய நலம்நாடும் நலம்விரும்பி நான்' என்று அவன் பலவாறு சத்தியம் செய்து கூறினான்'' (அல்குர்ஆன் 7 : 21).

'நான் சொல்வதைக் காதுகொடுத்துக் கேளுங்கள். நான் சொல்வதைக் கேட்டால் உங்களுக்குத்தான் நல்லது. உங்களுடைய நலனுக்காகத்தான் இவ்வளவும் சொல்கிறேன்!'

'ஆதமே! நிரந்தர வாழ்வையும் அழியாத ஆட்சியையும் தரக்கூடிய ஒரு மரத்தை உனக்குக் காட்டித்தரவா? என ஷைத்தான் அவருக்கு ஆசை காட்டினான்'' (அல்குர்ஆன் 20 : 120).

'இந்த மரத்தின் கனியை மட்டும் நீங்கள் சாப்பிட்டீர்கள் என்றால் நீங்கள் இருவரும் வானவர்களாக ஆகிவிடுவீர்கள். அப்புறம் என்றென் றைக்கும் இங்கேயே இந்த சொர்க்கத்திலேயே தங்கி இருப்பீர்கள்!. ஆகையால்தான், உங்களுடைய இறைவன் இதைச் சாப்பிடவேண்டாம் என்று உங்களை தடை செய்துள்ளான்'' (அல்குர்ஆன் 7 : 20).

இப்படியாக அவன் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தான். ''அவர்கள் இருவரையும் தனது கைப்பிடிக்குள் ஒருவழியாக கொண்டு வந்துவிட்டான்'' (அல்குர்ஆன் 7 : 22).

ஆதமையும் ஹவ்வாவையும் ஷைத்தான் எப்படி மடக்கினான் என்பதும் ஒரு கேள்வி!. பாம்பின் வடிவில் வந்து பசப்பு வார்த்தைகளைக் கூறி மயக்கினான் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆம்! குர்ஆனும் நபிமொழிகளும் கூறாத கதைகளை புராணங்கள் என்றுதானே சொல்ல வேண்டும்?.

சூழ்ச்சி மிகுந்த பாம்பு பெண்ணிடம் சென்று பேசியது. பேச்சில் மயங்கிய பெண் கனியைப் பறித்து ஆணிடம் கொடுத்தாள் என்ப தெல்லாம் தவ்ராத் கூறும் கதை. இஸ்ரவேலர்களின் கற்பனை. குர்ஆன் அதை வன்மையாக மறுக்கின்றது.

வஸ்வஸா எனும் வார்த்தையை குர்ஆன் பயன்படுத்துகின்றது. ஊசலாட்டம் எனப்பொருள். ஷைத்தான் நேரிடையாக வந்து ஆதமிடமும் ஹவ்வாவிடமும் பேசினானா? இல்லை, அவர்களுடைய மனதில் புகுந்து தவறான எண்ணங்களை ஏற்படுத்தினானா? என்று இரு கருத்துகள் நிலவுகின்றன. இரண்டில் ஏதேனும் ஒன்று நிகழ்ந் திருக்கலாம். ஆனால், நல்லபெயர் கொண்ட நாகப்பாம்பு வடிவெடுத்து கதை பேசி மயக்கினான் என்பதெல்லாம் பொழுது சாய்ந்த பின்பு பாட்டி பேசும் கதைகள்.

அப்புறம் என்ன? கணவனும் மனைவியும் அந்த மரத்தின் கனியைப் புசித்தார்கள். அவர்களுடைய மர்மஸ்தலங்கள் வெளிப்பட்டுவிட்டன. அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சொர்க்கத்து ஆடை நீக்கப்பட்டு விட்டது. இரண்டுபேரும் சொர்க்க மரங்களின் இலைகளால் தங்களுடைய மறைவிடங்களை மறைத்துக் கொண்டனர்.

'ஆதமே! உனக்கு என்ன ஆனது? அந்த மரத்தின் பக்கமாகக் கூட போக வேண்டாம் என்று நான் உன்னை எச்சரித்திருந்தேன் அல்லவா?'' என்று இறைவன் விசாரித்தான்.

''எப்படியாவது உங்களை வழிகெடுக்க ஷைத்தான் முயற்சி செய்வான் என்றும் நான் கூறியிருந்தேனே!'' என்றெல்லாம் இறைவன் கேள்விகளை அடுக்கினான்.

என்ன எச்சரித்து என்ன பயன்?.

ஆதம் வழுக்கி விழுந்துவிட்டார். ''தம்முடைய இறைவனுக்கு மாறு செய்து விட்டார். நேர்வழி தவறிவிட்டார்'' (அல்குர்ஆன் 20 : 121).

🗗 பாவத்தின் பக்கம் விடுக்கப்படும் வெளிப்படையான அழைப்பை மனிதன் ஏற்றுக் கொள்வதில்லை. அல்லது அதன்பால் குறைவாகவே கவனம் செலுத்துகிறான். இதுவொன்றும் தவறுகிடையாது. நல்லது தான். உன்னுடைய நன்மைக்குத்தான் சொல்கிறேன் என்று பலவாறு அவனுடைய கவனம் சிதறடிக்கப்படும்போதுதான் அவன் தவறிழைக்க முன்வருகிறான்.

🗗 பாவம் எனும் மரத்திற்குப் பக்கத்தில் கூட போகக்கூடாது. அருகில் போவது கூட ஆபத்தானது. கண்களில் தட்டுப்படும் கனிகள் கண்டிப்பாக பறிக்கத் தூண்டும். நான் மிகவும் கட்டுப்பாடோடு இருப்பேன். என்னை யாரும் வீழ்த்திவிட முடியாது என்றெல்லாம் யாரும் வீறாப்பு பேச முடியாது.

கீழ்வரும் இறைவசனங்களை கவனித்துப் பாருங்கள்...

''விபச்சாரத்தின் பக்கமாகக் கூட போகாதீர்கள்! அதுவோ மானங் கெட்ட செயலாகவும் மிகத்தீய வழியாகவும் இருக்கின்றது'' (அல்குர்ஆன் 17: 32).

''மானக்கேடான செயல்களின் அருகில்கூட செல்லாதீர்கள்! அவை வெளிப்படையாக இருந்தாலும் சரியே! மறைவாக இருந்தாலும் சரியே!"
(அல்குர்ஆன் 6 : 151).

"அநாதைகளின் சொத்துகளுக்கு அருகில்கூட போகாதீர்கள்!"
(அல்குர்ஆன் 17 : 34).

24. பெண்ணியமும் பண்பாடும்

🗗 இறைவனுடைய பேச்சை மீறி ஷைத்தானுடைய பேச்சைக் கேட்ட தால் மனிதனுக்கு நேர்ந்த முதல் துன்பம் 'நிர்வாணம்'. சொர்க்கத்து ஆடைகள் அவர்களிடமிருந்து பறிபோயின. ஆடைகளை அவர்கள் இழந்தார்கள்.

🗗 இயற்கையாக பிறப்பிலேயே மனிதனுக்கு வெட்க உணர்வு வழங்கப் பட்டுள்ளது. பண்பாடு, நாகரீகம் போன்றவற்றின் விளைவால் தோன்றிய உணர்வல்ல இது. மற்றவர்களுக்கு முன்னால் தன்னுடைய மறைவான உறுப்பு ஏதேனும் வெளிப்பட்டுவிட்டால் உடனடியாக ஒரு மனிதனுக்கு வெட்க உணர்வு ஏற்படுகின்றது.

நாகரீக பகவான்களும் ஷைத்தானின் சீடர்களும் சொல்வது போல

கல்வியின் விளைவாக வெட்கம் தோன்றுவதில்லை. வெட்கம் என்பது இயற்கையான விஷயம்!. முதல்மனிதரிடமே இவ்வுணர்வு தங்கி யிருந்தது.

🗗 நேர்வழியிலிருந்து மனிதனை அகற்றி வழிகேட்டில் தள்ளிவிட வேண்டும் என்பதுதான் ஷைத்தானின் ஆசை! குறிக்கோள். அதற்காக மனிதனின் வெட்க உணர்வின்மீது தன்னுடைய முதல் தாக்குதலை அவன் தொடங்கினான். நிர்வாணத்தின் வழியாக இச்சைகளின் வாசலை அவன் திறந்து வைத்தான். மனிதனுடைய பாலியல் தேவைகளை முறைகேடான வழிகளில் பூர்த்தி செய்துகொள்ளுமாறு தூண்டினான்.

எதிரியைத் தாக்க நினைப்பவன் எதிரியின் பலவீனமான இடத்தைத் தேடியே குறிவைப்பான். மனிதனுடைய பலவீனமான இடம் அவனுடைய பாலியல் இச்சைகள். வெட்க உணர்வு எனும் பாதுகாப்புக் கோட்டையில் இறைவன் வைத்திருந்த அந்தப் பொக்கிஷத்தை ஷைத்தான் இலக்காக்கினான். ஷைத்தானும் அவனுடைய தோழர்களும் இன்றைக்கும் இதே வழி முறையைக் கையாள்கிறார்கள். முன்னேற்றம், நாகரீகம் எனும் போர்வையில் முன் வைக்கப்படும் கருத்துகள் எல்லாமே, பெண்களை அரைநிர்வாணப் படுத்தி நடுச்சந்தியில் நிற்க வைப்பதி லிலேயே குறியாய் இருப்பதை நாம் பார்க்கத்தானே செய்கிறோம்.

ஆதமும் ஹவ்வாவும் ஆடைகளின்றி இருந்தனர். அவர்களுக்கு ஆடை களைப் பற்றிய உணர்வே ஏற்படவில்லை என்று தவ்ராத் கூறுகின்றது.

> “மனிதன், அவன் மனைவி ஆகிய இருவரும் ஆடையின்றி இருந்தனர். ஆனால், அவர்கள் வெட்கப்படவில்லை”
>
> (தொடக்க நூல் 2 : 24).

இந்தச் செய்தியையும் குர்ஆன் மறுக்கின்றது.

“ஆதத்தின் மக்களே! உங்களுடைய வெட்கத்தலங்களை மறைப்பதற் காகவும் உங்கள் உடலுக்கு பாதுகாப்பாகவும் அலங்காரமாகவும் இருக்கக் கூடிய ஆடைகளை நாம் அருளியிருக்கிறோம். ஆயினும், தக்வா எனும் இறையச்ச ஆடையே சிறந்ததாகும். அல்லாஹ்வின் அத்தாட்சிகளுள் ஒன்று இந்த ஆடை!. இதன்மூலம் மக்கள் நல்லுணர்வு பெறக்கூடும்.

ஆதத்தின் மக்களே! உங்களுடைய தாய்தந்தையரை சொர்க்கத்தி லிருந்து வெளியேற்றி அவர்களுடைய வெட்கத்தலங்களை பரஸ்பரம் வெளிப்படுத்தி மானமிழக்க செய்திடவேண்டும் என்பதற்காக ஆடை களை நீக்கியதுபோல உங்களையும் அவன் குழப்பத்தில் ஆழ்த்தாது இருக்கட்டும்!. நீங்கள் பார்க்க முடியா இடங்களிலிருந்து அவனும்

அவனுடைய தோழர்களும் உங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இறைநம்பிக்கையற்றவர்களுக்கு தோழர்களாக ஷைத்தானை நாம் ஆக்கியுள்ளோம்" (அல்குர்ஆன் 7 : 26,27).

தந்தையின் அனுபவமும் அவர் பட்ட கஷ்டங்களும் பிள்ளைகளுக்கு படிப்பினையாய் இருக்கின்றன. முன்னோர்களின் வாழ்விலிருந்து நாம் கட்டாயம் பெற்றாக வேண்டிய பாடம் இது!. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய வாழ்க்கையை எடுத்துக் கூறுவதன் மூலம் இறைவன் இங்கே பல்வேறு விஷயங்களை நமக்கு கற்றுத் தருகிறான்.

ஆடை என்பது மனிதன் தானாக உருவாக்கிக் கொண்ட செயற்கையான பொருள் அல்ல!. இயற்கையாக மனிதனுக்கு எழும் ஒரு தேவையைப் பூர்த்தி செய்யும் அம்சமே ஆடை. விலங்குகளுக்கு அவற்றின் மறை உறுப்புகளைப் போர்த்தி மறைக்க இறைவன் இயற்கையான ரோமங் களையும் வழங்கியுள்ளான். உடல் அமைப்புத் தோற்றமும் அவற்றின் மறைவான பகுதிகளை தெரியாமல் செய்துவிடுகின்றது. அவ்வாறில் லாமல் மனிதனுடைய இயல்பில் இறைவன் 'வெட்க உணர்வை' வைத்துள்ளான். அவ்வுணர்வால் தூண்டப்படும் மனிதன் தனது மறை உறுப்புகள் வெளித்தெரியாமல் பார்த்துக் கொள்கிறான்.

அது மட்டுமல்ல, அவ்வாறு மறைஉறுப்புகள் வெளியே தெரிவதை 'மானக்கேடாக'வும் மனிதன் உணர்கிறான். இந்த வெட்க உணர்வை பூர்த்தி செய்ய இறைவன் வெளிப்படையான ஆடை எதனையும் வழங்க வில்லை. ஆடையால் உடம்பை மறைக்கவேண்டும் எனும் சிந்தனையை மனிதனுக்குக் கொடுத்தான். (காண்க 7 : 26). தன்னுடைய அறிவைப் பயன்படுத்தி மனிதன் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டான். விதவிதமான ஆடைகளை உற்பத்தி செய்துகொண்டான்.

இதன்காரணமாகத்தான் தடைசெய்யப்பட்ட மரத்தின் கனியைப் புசித்து சொர்க்க ஆடைகள் விலக்கப்பட்டவுடன் ஆதமுக்கும் ஹவ்வா வுக்கும் ஆடைகளை இழந்துவிட்டோம்; தங்களுடைய உறுப்புகளை உடனே மறைத்தாக வேண்டும் எனும் உணர்வு தோன்றியது. ஓடிப் போய் அவர்கள் மரஞ்செடி கொடிகளின் இலைதழைகளைக் கொண்டு தங்களை மறைத்துக் கொண்டார்கள்.

ஆடையின் பயன்கள் என்ன என்பதை வரிசைப்படுத்தி இங்கு இறைவன் கூறியுள்ளான். மானத்தை மறைக்கவேண்டும் என்பதுதான் ஆடையின் முதற் பயன். அலங்காரமாக இருக்கவேண்டும் என்பதும் தட்பவெப்ப சூழலை விட்டு பாதுகாக்கவேண்டும் என்பதும் ஆடையின் இரண்டாவது பயன்.

விலங்குகளைப் பொருத்தவரை இரண்டாவது பயன்தான் முக்கியமே தவிர முதற்பயன் அவற்றிற்கு அறவே கிடையாது. மானம் எனும் உணர்வே அவற்றிற்கு இல்லை. ஆகையால், மானத்திற்காக மறைக்க வேண்டும் எனும் அவசியமும் கிடையாது. விலங்குகளைப் பொருத்த வரை 'வெட்கஸ்தலம்' என்பதே கிடையாது. இருப்பதெல்லாம் 'இனப் பெருக்க உறுப்புகளே!'.

மனிதனிடம் உள்ள மறை உறுப்புகளுக்கும் இதே தன்மையைக் கொடுப்பதில் நவீனகால ஷைத்தான்கள் வெற்றிபெற்று வருகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். எதிர்பாலினரை ஈர்ப்பதற்காக இயற்கை யால் படைக்கப்பட்ட கவர்ச்சி உறுப்புகள், இனப்பெருக்க உறுப்புகள் என்றுதான் இப்போதெல்லாம் மறைஉறுப்புகள் அல்லது வெட்க ஸ்தலங்கள் குறிப்பிடப்படுகின்றன. இந்த 'மானமிழக்கச் செய்வது' என்பதுதான் ஷைத்தானின் மிகப் பெரும் ஆயுதம்!.

ஆடையின் இந்த முதற்பயனை மறக்கடித்து இரண்டாவது பயனை முன்னிலைப்படுத்தியதுதான் ஷைத்தான் செய்த முக்கிய வேலை!. இந்த வாக்கியத்தை சற்று நிதானமாக யோசித்துப் பார்த்தால் உங்களுக்கே புரியும். விளக்கியாகவேண்டிய அவசியமில்லை. எதைச் சொல்ல முடியுமோ அதை மட்டும் சொல்கிறேன். சொல்லப்படாத வார்த்தை களை நீங்களே ஊகித்துக் கொள்ளவேண்டும்.

வேறு ஒரு வழியில் நாம் இதை அணுகுவோம். மனிதனுக்கு இரண்டு வகையான ஆடைகள் இருக்கின்றன. ஒன்று மறைவான ஆடை. இன்னொன்று பகிரங்க ஆடை. மானம் எனும் சிந்தனையையும் மறைத்தாகவேண்டும் எனும் உந்துதலையும் இந்த மறைவான ஆடையே தருகின்றது. இறையச்சம் என்பதுதான் மறைவான ஆடைக்கு தூண்டுதலாக இருக்கின்றது. உந்துதல், தூண்டுதல் இரண்டையும் ஷைத்தான் அகற்றிவிடுகிறான்.

மறைவான ஆடையைத் தாங்கிப் பிடிக்கின்ற இவை இரண்டும் அகன்று விட்டால் அப்புறம் பகிரங்கமான ஆடைக்கு தேவையே இல்லாமல் போய்விடுகின்றது. அப்படியே அணிந்தாலும் அங்கு வெட்கம் என்பது அறவே காணப்படாது. வெட்க உணர்வு இல்லை யென்றால் மறைத்தாகவேண்டும் என்பது கட்டாயமில்லை. வெளிப் பட்டாலும் பிறர் பார்வையில் பட்டாலும் அதைப் பெரிதாகவே எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

ஆடை என்பது இப்போது அலங்காரமாக ஃபேஷனாக ஆகி விடுகின்றது. 'காட்டுவது'தான் ஃபேஷன் என்று நீங்கள் நினைத்தால்

தயங்காது காட்டுவீர்கள் கொஞ்சமும் உறுத்துதல் இல்லாமல்!. 'கொஞ்சமும் உறுத்துதல் இல்லாமல்' என்பதுதான் கவனிக்க வேண்டிய தொடர்.*

விளைவாக, ஆதமுடைய மகன்களும் மகள்களும் ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருப்பார்கள். மறைக்கின்ற செயலை அவர்களின் ஆடைகள் செய்கின்றனவா என்றால் கண்டிப்பாக இல்லை!. எதுவும் அணியாமல் இருப்பதும் ஓர் அலங்காரமே என்று நினைத்தால் அப்படியும் இருக்கத் துணிவீர்கள். அந்தக் காட்சிகளையும் இன்று உலகில் பார்க்க முடிகின்றதல்லவா?.

இந்தக் கொள்கையை முன்னிறுத்தும் ஷைத்தான்களிடம் கல்வியும் அறிவும் அகப்பட்டுவிட்டால் அப்புறம் அதற்கான சித்தாந்தங்களும் உருவாக்கப்பட்டு விடுகின்றன. "நிர்வாணம் என்பதுதான் மனிதனின் ஆதிக்கோலம். மனிதன் தனிமையில் இருக்கும்போது ஆடைகளின்றி இருப்பதையே பெரிதும் விரும்புகிறான். சமூக மரபுகளும், சம்பிர தாயங்களும்தான் அவனை ஆடை அணியுமாறு தூண்டுகின்றன. மற்றபடி இந்திந்த உறுப்புகளுக்கு இதுதான் வேலை!" என்றெல்லாம் தங்களுடைய செயல்களுக்கு சித்தாந்த வர்ணம் பூசுகின்றனர்.

வளர்ப்பும் இறையச்சமும் வெட்க உணர்வு தோன்றுவதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. இஸ்லாமிய சூழ்நிலையில் இறையச்ச உணர்வோடு வளர்க்கப்பட்டால்தான் வெட்கம் எனும் ஆடை இயல்பாக அமைந்து நம் மறை உறுப்புகளைப் பாதுகாக்கும்.

வெட்க உணர்வு கொண்டவர்கள் உடைகளில் மட்டுமல்லாமல் வார்த்தைகளிலும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். இறைநம்பிக்கை கொண்ட ஒருவரால் ஆபாசமாகவும் அசிங்கமாகவும் பேசவே இயலாது என்பதுதான் உண்மை!

ஒருமுறை இரண்டாம் உமர் என்றழைக்கப்படும் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் அவையில் ஒரு மனிதர் ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கையில் 'அல்குல்' என்ற சொல்லைப் பயன் படுத்தினார். 'என்ன? ஒரு முஃமினைப் போலப் பேசாமல் இவ்வளவு அசிங்கமாகப் பேசுகிறீர்கள்? கையின் உட்பபகுதி என்று சொல்ல வேண்டியதுதானே!' என அவரை உமர் (ரஹ்) கடிந்துகொண்டார்.

ஷைத்தானியப் பண்புகள் வளர்ந்துகொண்டே செல்லும் இந்நவீன

---

*ஆடைகள்குறித்த இஸ்லாமிய பார்வையை விரிவாய் அறிந்துகொள்ள விரும்புவோர் அஹத் பப்ளிஷர்ஸ் வெளியிட்டுள்ள நூலாசிரியரின் "ஆள்பாதி! ஆடைபாதி!" எனும் சிற்றேட்டை வாசிக்கவும்.

காலத்தில் அழுத்தந் திருத்தமாக இவற்றை வலியுறுத்திச் சொல்ல வேண்டியது நம் கடமையாக இருக்கின்றது. வளர்ந்த பிறகு ஒருவேளை இயல்பான வெட்கம் தலைதூக்கி விடுமோ எனப்பயந்து இப்போதெல்லாம் குழந்தைப் பருவத்திலேயே அரைகுறை ஆபாச ஆடைகள் அணிவிக்கப்படுகின்றன. குழந்தைதானே என்று நாமும் இவற்றைப் பெரிதாக எண்ணுவதில்லை.

விபச்சாரத்தின் அருகில் கூட போகாதீர்கள் என்பது போன்ற வசனங் களை நாம் பார்த்து வந்துள்ளோம். தீயவற்றின் அருகில் கூட போகக் கூடாது என்று மிகமிக எச்சரிக்கையாக இருக்கச் சொல்கின்றது அல் குர்ஆன். இளம் வயதிலிருந்தே இவைபோன்ற ஆடைகள் அணிவிக்கப் படுவதால் இயல்பான வெட்க உணர்வின் மீது நாமே மண்ணைப் போட்டு மூடி ஒன்றுமில்லாமல் செய்துவிடுகிறோம்.

முறைகேடான உறவு கண்களால் பார்ப்பதன் மூலமாகவும் காதுகளால் கேட்பதன் மூலமாகவும் கைகளால் தொடுவதன் மூலமாகவும் ஏற்படும் என்று நபிமொழிகள் எச்சரிக்கின்றன. என்ன காரணம்? தடை செய்யப் பட்ட ஒன்றை தொடர்ந்து பார்த்து வருவதால் கேட்டு வருவதால் அவற்றின் மீதான தடை குறித்த அலட்சியம் நம் மனதில் தோன்றி விடுகின்றது. பிறகு தக்க தருணமும் சமயமும் கிடைத்து அத்தவறைச் செய்வதற்கான சூழல் வாய்த்துவிட்டால் மனிதன் அத்தவறை செய்து விடுகிறான்.

உதாரணமாக, தொடர்ந்து டிவியில் ஆபாசப் பாடல்களை பார்ப்பவர் உள்ளத்தில் இருந்து வெட்க உணர்வு அகன்றுவிடும். ஒரு கட்டத்தில் தன்னுடைய உடைகளில் அவர் இதனை வெளிப்படுத்தவும் செய்யலாம். ‘வெளிப்படுவதை’ மூட நினைக்காமல் அலட்சியப்படுத்தலாம். இறைவன் அளித்துள்ள மறைவான ஆடையான வெட்க உணர்வை எப்படியெல்லாம் ஷைத்தான் சிதைக்கின்றான் என்பதை விளக்கவே இவற்றையெல்லாம் சொல்கிறேன்.

வழிகாட்ட வந்த சமூகமான இஸ்லாமிய சமூகத்தின் பெண்கள் இன்று அணியும் ஆடைகள் இதற்கு உயிருள்ள சாட்சிகளாய் விளங்குகின்றன. தங்களது உடலை வெளிக்காட்டும் பண்பு இன்று முஸ்லிம் பெண் களிடம் மிகைத்து வருகின்றது.

அழகாக இருப்பது என்று ஆரம்பித்து ‘வெளிப்படு’வதை பெரிதாகக் கருதாமல் அலட்சியப்படுத்துவது என்று தொடங்கும் இந்தப் போக்கு மெல்ல மெல்ல வளர்ந்து உடலின் சில பாகங்களை ஃபோகஸ் பண்ணும் நிலைக்குச் சென்று ஒரு கட்டத்தில் ஃபோகஸ் பண்ணுவதற்கென்றே

ஆடைகளை அணியும் கேவலமான நிலைக்கு நம்மை இட்டுச் செல்கின்றது.

ஆதமுடைய மக்கள் அணியும் ஆடை தக்வாவின் ஆடையாக இருக்க வேண்டும் என்றும் அல்லாஹ் கூறுகிறான். அதாவது நீங்கள் அணியும் ஆடை வெட்கஸ்தலங்களை மறைக்கக் கூடியதாகவும் மனிதன் எனும் மாண்பை நிலைநாட்டும் வண்ணம் அலங்காரமானதாகவும் இருந்தால் மட்டும் போதாது. பெருமையை வெளிக்காட்டாததாக இருக்க வேண்டும். பெருமைதானே ஷைத்தானை இந்த இழிவிற்கு இட்டுச் சென்றது?. செல்வச்சிறப்பை தம்பட்டம் அடிக்காததாக, தலைமைச் செருக்கை மிகைப்படுத்தாததாக இருக்கவேண்டும்.

ஆண்கள் பெண்களுடைய ஆடைகளை அணியக்கூடாது. பெண்கள் ஆண்களின் ஆடைகளை உடுத்தக்கூடாது. பிறசமூகங்களின் அறிவுத் தலைமைக்கும் கலாச்சாரத் தலைமைக்கும் ஆட்பட்டு அவர்களுடைய ஆடைகளை கெஞ்சிக்கூத்தாடி வாங்கி அணிந்து கொள்ளக் கூடாது. இவையெல்லாம் தக்வா எனும் வார்த்தை சொல்லும் செய்திகள்!.

25. தடை செய்யப்பட்ட மரம்

தடை செய்யப்பட்ட மரம் எது? என்றும் ஏகப்பட்ட கருத்துகள். முன்னரே சொன்னபடி எதைக் கூறவேண்டுமோ எவ்வளவு கூற வேண்டுமோ அதை அந்த அளவு இறைவன் கூறுகிறான். எதைப் புரிந்து கொள்ள வேண்டுமோ அதை விட்டுவிட்டு வேறு ஏதேதோ விஷயங்களின் பக்கம் நாம் தொடர்ந்து கவனத்தை ஓட்டிக் கொண்டே உள்ளோம். பார்க்கப்போனால் இதுவும் ஒருவகையான ஷைத்தானின் ஊசலாட்டமோ எனத் தோன்றுகின்றது.

அது நன்மை தீமைகளை அறியும் மரம் என்று தவ்ராத் கூறுகின்றது. கோதுமை மரம் என்று சிலர் உரைக்கின்றனர். அல்லாஹ் தடை செய்த மரம் என்பது மட்டும் நமக்குப் போதுமானது.

சொர்க்கத்தில் எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம் எதை வேண்டு மானாலும் உண்ணலாம், பருகலாம் என்று அனுமதி அளித்த இறைவன் ஒரேஒரு மரத்தை மட்டும் நெருங்கவேண்டாம் என்று தடை செய்தான். ஏறக் குறைய அதே விதிதான் இந்த உலகிலும் செயல்படுகின்றது. ஹலாலான செயல்கள் இலட்சக்கணக்கில் உள்ளன. ஹராமான செயல் கள் கொஞ்சமே கொஞ்சம்தான். ஆனாலுமென்ன, அந்த ஹராமான

செயல்களைத்தான் ஷைத்தான் அழகாக கவர்ச்சியாக சிறந்த பயன்கள் பொருந்தியவையாக காட்டுகிறான். உங்களுடைய வெற்றியும் முன்னேற்றமும் நீங்கள் தவிர்க்கின்ற இந்தச் செயல்களைச் செய்வதில் தான் அடங்கியுள்ளது என்று ஆசை காட்டுகிறான். நலன்கள் பொருந்திய செயல்கள் யாவும் தடை செய்யப்பட்டு உள்ளனவோ என்ற அபிலாஷைக்கு நாமும் ஆட்பட்டு விடுகிறோம்.

சொர்க்கத்தின் ஆடைகளை அவர்களிருவரும் இழந்துபோனது அந்த மரத்தின் கனிகளை உண்டதால் ஏற்பட்டது என்று பலர் நம்புகிறார்கள். அது தவறு. இறையாணையை மீறியதால் ஏற்பட்ட விளைவே அது!. தன் புறத்திலிருந்து அவர்களுடைய வெட்கஸ்தலங்களை மறைக்கும் ஏற்பாட்டை இறைவன் செய்திருந்தான். அவர்கள் கட்டளையை மீறி விட்டபோது தன்னுடைய ஏற்பாட்டை அல்லாஹ் விலக்கிக் கொண்டான். அவர்களால் தாங்களாக முயற்சி செயது தங்களுடைய வெட்கஸ்தலங்களை மறைத்தாக வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டார்கள். அதுமட்டுமல்ல, அதன்பின்பு தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் தாங்களாகவே தேடிக்கொள்ளும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள்.

இறைவனின் கட்டளையை மனிதன் உதாசீனப்படுத்தினால் அதற்கான விளைவுகளை அப்போதோ அல்லது சிலகாலம் கழித்தோ அவன் அனுபவித்தே ஆகவேண்டும். அவ்வாறே இறைகட்டளைகளுக்கு அடி பணியும் காலம்வரையே இறைபுறத்து உதவியும் உறுதுணையும் கிடைத்துக் கொண்டிருக்கும். கீழ்ப்படிதல் எனும் வட்டத்தைவிட்டு வெளியேறிச் சென்று விட்டால் இறைவனின் உதவியும் ஒத்தாசையும் அகன்றுவிடும். அப்புறம் தன்னுடைய பாதையை அவனே பார்த்துக் கொள்ளவேண்டியதுதான்!. தன்னுடைய வழியை தானே தீர்மானித்துக் கொள்வது எனும் நிலைக்கு மனிதன் வந்துவிட்டால் அப்புறம் அவனுக்கு அழிவுதான்!. ஆகையால்தான் அண்ணல் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கீழ்வரும் துஆவை அடிக்கொருதரம் ஓதி வந்துள்ளார்கள்.

"என்னிறைவா! நின் கருணையை அல்லவா நான் எதிர்பார்க்கிறேன். நொடிப்பொழுதும் என்னை என் மனதிடம் ஒப்படைக்காதிரு!"

🗗 என்னதான் வானவர்கள் மனிதனுக்கு ஸஜ்தா செய்திருந்தாலும் மனிதனுடைய மனதில் வானவர்கள் உயர்ந்தவர்கள் என்ற நினைப்பு ஆழமாக இருந்தது. எனவேதான் ஷைத்தான் அந்த நினைப்பைத் தூண்டிவிட்டு குளிர் காய முடிந்தது.

மனிதத் தன்மையைவிட மேம்பட்டு வானவர் குணத்தைப் பெற வேண்டும் உயரிடத்தை உயர் படித்தரங்களை அடைய வேண்டும் எனும் தீராத் தாகம் மனித மனதில் இருந்து வருகின்றது. தற்போதைய நிலையிலிருந்து முன்னேற வேண்டும் என்று எல்லா மனிதர்களும் ஆசைப்படுகிறார்கள். மனிதனுடைய இந்த ஆசையைத்தான் ஷைத்தானும் அவனுடைய தோழர்களும் பயன்படுத்திக் கொள் கிறார்கள். மனிதனுடைய இந்த உணர்வையே அவர்கள் முதலில் அணுகுகிறார்கள். முன்னேற ஒரு புதிய பாதை இருக்கின்றது என்று தாங்கள் விரும்பிய திசையின் பக்கமாய் கைகாட்டுகிறார்கள். இவ் வழியே பயணித்தால் கண்டிப்பாக உயரிடத்தை அடையலாம் என்று எக்கச்சக்க மாய் சத்தியம் செய்கிறார்கள். சாமர்த்தியமாய் திசைதிருப்பி தாங்கள் விரும்பிய பாதையில் அவனை முடுக்கிவிடுகிறார்கள்.

26. முதல்பாவமும் தூண்டிய பெண்ணும்

முதலில் ஷைத்தான் ஹவ்வா அலைஹாஸ்ஸலாம் அவர்களை தன் பிடிக்குள் கொண்டுவந்தான். அதன்பிறகு அவர்களைக் கொண்டு ஆதமை வசப்படுத்தினான் என்று பொதுவாக நம்பப்படுகின்றது. ஆனால், இதை குர்ஆன் வன்மையாக மறுக்கின்றது. இரண்டுபேரையுமே ஷைத்தான் ஏமாற்றினான். இரண்டு பேரையும் ஷைத்தான் வழி கெடுத்தான் என்றே குர்ஆன் கூறுகின்றது. பார்ப்பதற்கு சாதாரணமாகத் தெரிந்தாலும் இதில் பல்வேறு விஷயங்கள் பொதிந்துள்ளன. ஹவ்வா அவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியதால் எத்தகைய ஆன்மீக ஒழுக்க விபரீதங்கள் உலகில் ஏற்பட்டன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இரண்டு விஷயங்கள் கிறித்துவர்களிடம் முக்கிய இடத்தை வகிக் கின்றன. இஸ்ரவேலர் வழி அறிவிப்புகள் மூலம் அவை நம்மிடம் வழக்கத்தில் வந்து விட்டிருக்கின்றன.

முதல் பாவம். மனிதன் சொர்க்கத்திலேயே பாவம் செய்துவிட்டான். இறைவனின் கடுங்கோபத்தை சம்பாதித்துக் கொண்டான். அந்தப் பாவம் வழிவழியாக ஆதமுடைய மக்கள் அனைவருக்கும் தொடருகின்றது. அப்பாவத்திலிருந்து அவர்களை மீட்டெடுக்கவே தேவகுமாரன் மானிடமகன் அவதரித்தார். பாவத்தைக் கையோடு வாங்கிக் கொண்டு தான் மனிதன் பிறந்துள்ளான். (அதைப்போக்கிக் கொள்ள வேண்டு

மென்றால் தேவகுமாரனை விசுவாசித்தால்தான் முடியும்). பிறவி யிலேயே மனிதன் பாவி! எல்லா மனிதர்களும் பாவிகள். அப்பாவக் கறையை அவர்களால் போக்கிக்கொள்ளவே முடியாது.

முதல் மனிதனை பாவம் செய்யத் தூண்டியவள் பெண். பாவப்பிறவி!. இன்றும் மனிதன் செய்யும் பாவங்களுக்கு காரணமாய் இருப்பவள். ஆன்மா அற்றவள். ஆகையால், இறைவனை நெருங்க நினைப்பவர்கள் பெண்ணை விட்டு விலகி இருக்கவேண்டும். பெண்ணாசையை துறந்து விடவேண்டும். கிறிஸ்துவ மதத்தைப் பொருத்தவரை கல்யாணம் என்பதெல்லாம் மிகப்பெரிய குற்றச்செயல்.

சொர்க்கத்தில் இறைவனின் கட்டளையை மீறியதால்தான் மனிதன் உலகிற்கு அனுப்பப்பட்டான். அதற்குக் காரணமாக அமைந்தவள் பெண். இறைவனின் சாபத்தோடுதான் மனிதன் இவ்வுலகிற்கு அனுப்பப் பட்டான். அவன்மீது அது தீராப்பாவமாக இருக்கின்றது. அப்பாவக் கறையைப் போக்கவே மானிட மகன் வருகை தந்தார். தன்னுயிரை சிலுவையில் பலிகொடுத்து மானுடர் மீதான பாவச்சுமையைப் போக்கினார்.

இவ்வனைத்து கருத்தோட்டங்களையும் இஸ்லாம் நிராகரிக்கின்றது.

(1) பூமியில் இறைவனின் பிரதிநிதியாக வசிப்பதற்கு படைக்கப் பட்டவனே மனிதன். சொர்க்கத்தில் அவன் பாவம் செய்தாலும் செய்யாதிருந்தாலும் பூமிக்கு அனுப்பப்பட்டிருப்பான். இங்கு வாழ வேண்டும்; இறைவனுக்குக் கட்டுப்படவேண்டும் என்பதுதான் அவனுக் கான சோதனை. செய்த பாவத்தின் விளைவாக பூமிக்கு அவன் அனுப்பப் படவில்லை. பூமியில் கலீஃபாவாக மனிதனை தான் நியமிக்கப் போவதாக அவனைப் படைக்கும் முன்பே இறைவன் வானவர்களிடம் கூறிவிட்டான். சிறிதுகாலத்திற்காகத்தான் மனிதன் சொர்க்கத்தில் தங்க வைக்கப்பட்டான். ஒருவேளை அவன் தவறு செய்யாதிருந்தாலும் ‘உனக்கு வேலை பூமியில்தான்!’ என்று சொல்லி இறைவன் அவனை பூமிக்கு அனுப்பி வைத்திருப்பான்.

(2) இரண்டு பேரையுமே ஷைத்தான் வழிகெடுத்தான். பாம்பு வடிவங் கொண்டு முதலில் பெண்ணை மயக்கினான் என்றெல்லாம் குர்ஆன் கூற வில்லை. பெண்ணை அடிமைப்படுத்தி அவளை போகப்பொருளாக பயன்படுத்த நினைத்தவர்கள் அவள்மீது தீராப்பழியொன்றை சுமத்தும் வகையில் இக்கதையைக் கட்டியுள்ளனர். குர்ஆன் இதையும் மறுக் கின்றது. (பெண்ணைப் பாதுகாப்பதாக கூறிக்கொள்ளும் நவீன அறிவாளர்களின் பிடியிலிருந்தும் குர்ஆன்தான் பெண்ணைப் பாது

காக்கின்றது. இவர்களும் பெண்விடுதலை பேசி அவளுடைய ஆடை களைக் கழற்றவே முயற்சிக்கிறார்கள்).

தீராப்பழியோடும் பாவச்சுமையோடும் மனிதன் பூமிக்கு வரவில்லை. செய்த பாவத்தை அங்கேயே கழுவிக்கொண்டுதான் அவன் கீழே இறங்கினான்.

27. பாவம் அங்கேயே மன்னிக்கப்பட்டுவிட்டது

''என்னைவிடச் சிறந்தவன் என்றுதானே எனக்குக் கொடுக்காத கௌரவத்தை மனிதனுக்கு நீ கொடுத்தாய்!. அது தவறு என நிரூபித்துக் காட்டுகிறேன். பார்!'' --- என்பதுதானே ஷைத்தானின் சவால். அதற்காகத்தான் அவன் ஆதமையும் அவருடைய மனைவியையும் வழிகெடுத்து இறைகட்டளையை மீறவைத்தான். சகவாச தோஷத்தால் சிந்திக்கும் திறனை இழந்து சீரழிந்துபோகக் கூடியவனே மனிதன் என்பதை நிரூபித்துக் காட்ட எண்ணினான். இறைவனுக்கு மாறு செய்து இறைவனுடைய கோபத்தை என்றென்றைக்குமாய் மனிதன் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்தான்.

தன்னுடைய நினைப்பில் ஷைத்தான் வெற்றி பெற்றானா? நினைத்ததை சாதித்துக் கொண்டானா? மனிதனை வீழ்த்திவிட்டானா? என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இறைவனுடைய கட்டளையை மனிதனால் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை, தன்னுடைய பலவீனத்தின் காரணமாக தோற்றுப் போய் விட்டான், இறைவனுடைய கோபத்திற்கும் ஆளாகிவிட்டான் என்றாலும் இந்தப் போராட்டத்தில் அவன் தன்னுடைய முதல் எதிரி யான ஷைத்தானின் நம்பிக்கையைத் தகர்த்துவிட்டான். அதுமட்டுமல்ல, தானோர் ஒழுக்க மாண்புடைய உயர் படைப்பினம் என்பதையும் நிரூபித்துக் காட்டிவிட்டான் என்றுதான் சொல்லவேண்டும்.

(அ) தன்னுடைய பிறப்பைப் பற்றியும் சிறப்பைப் பற்றியும் ஷைத்தானுக்கு நிலைகொள்ளாத பெருமை இருந்தது. அத்தகைய பெருமை எதுவும் மனிதனுக்கு இல்லை.

(ஆ) தன்னுடைய அகம்பாவம், இறுமாப்பின் காரணத்தால் என்ன செய்கிறோம் என தெரிந்துகொண்டே ஷைத்தான் இறைவனுடைய கட்டளையை மீறினான். ஆனால், மனிதனோ தன்னுடைய பலவீனத் தின் காரணமாகவும் பிறருடைய தூண்டுதலின் காரணமாகவும் தவறான

கணிப்பின் காரணமாகவும் தவறிழைத்தான்.

(இ) தீயவன் எனத் தெரிந்துகொண்டே ஒரு தீயவனின் பேச்சை மனிதன் கேட்கவில்லை. நல்லவன் என்று நம்பியே ஒரு தீயவனின் பேச்சுக்கு காது கொடுத்தான். பள்ளத்தாக்கு என்று தெரிந்து கொண்டு குதிக்கவில்லை. மலை என நினைத்து பள்ளத்தாக்கில் விழுந்தான்.

(ஈ) ஏன் தவறிழைத்தாய்? என வினவப்பட்டபோது ஷைத்தான் தன்னுடைய தவறை நியாயப்படுத்தினான். ஒற்றைக் காலில் நின்று சாதித்தான். ஆனால், மனிதனோ தான் செய்தது தவறு என்பது சுட்டிக் காட்டப்பட்டவுடன் தவ்பாவில் விழுந்துவிட்டான். அழுது புலம்பி மன்னிப்பு கேட்கலானான். ஓடிப்போய் இறைவனின் கருணை வட்டத்திற்குள் தஞ்சம் புகுந்துகொண்டான்.

மனிதன் பலவீனமானவன். பிறப்பிலேயே பலவீனமானவன். “மனிதன் பலவீனமாகவே படைக்கப்பட்டுள்ளான்” (அல்குர்ஆன் 4 : 28).

செய்த தவறை எண்ணி அழுது புலம்பி தன்னையே நாடி நிற்கும் அடியாரை அல்லாஹ் கைவிடுவதில்லையே!. ஆதமுடைய ஹவ்வா வுடைய மனப்பூர்வமான தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். அதுமட்டுமல்ல, எவ்வாறு தவ்பா செய்யவேண்டும் என்பதையும் கற்றுக் கொடுத்தான்.

“ஆதம் தம் இறைவனிடமிருந்து கற்ற சில வார்த்தைகளைக் கொண்டு அவனிடம் பாவமன்னிப்பு கோரினார். அதனை அவருடைய இறைவன் ஏற்றுக் கொண்டான். அவனோ பாவமன்னிப்பை ஏற்பவனாகவும் கருணை பொழிபவனாகவும் உள்ளான்” (அல்குர்ஆன் 2 : 37).

அவை என்ன வார்த்தைகள்?

வான்மறை குர்ஆன் அவை எவை என்பதை அழகாக அறிவிக்கின்றது. அதை விட்டுவிட்டு நம் மக்கள் கதை பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் தம்முடைய தலையை உயர்த்தி சொர்க்கத்தைப் பார்த்ததாகவும் அங்கே முஹம்மதுவின் பெயர் எழுதப் பட்டிருக்கக் கண்டு அதை மையப்படுத்தி துஆ கேட்டதாகவும் அதன் காரணமாகத்தான் அல்லாஹ் அவரை மன்னித்தான் என்றும் நம்முடைய ‘புராணங்கள்’ கூறுகின்றன.

இறுதித்தூதர் முஹம்மத் அவர்களைப் போற்றுவதாகவும் புகழ்வதாகவும் எண்ணிக்கொண்டு முஸ்லிம்கள் எண்ணற்ற கற்பனைக் கதைகளை எழுதி வைத்துள்ளனர். அவற்றுள் ஒன்று ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களோடு தொடர்புடையது. ஆதம் அலைஹிஸ்ஸலாம்

அவர்கள் எங்ஙனம் பாவமன்னிப்பு பெற்றார்கள் என்பது குறித்து வழங்கப்படுகின்ற கற்பனைகளுள் அதுவும் ஒன்று!.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் படைக்கப்பட்டபோது தம் தலையை உயர்த்தி சொர்க்கத்தின் முகட்டைப் பார்த்தார்கள. அப்போது அங்கு ''லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்'' என்று எழுதப் பட்டிருந்தது. பிறகு, இறைகட்டளையை மீறி இறைவனின் அதிருப்திக்கு ஆளாகிவிட்டபோது 'முஹம்மதுவின் பெயர்கொண்டு என்னை மன்னித்தருள்வாயாக!' என்று மன்றாடி வேண்டிக் கொண்டார்கள். பேரருள் வாய்ந்த இறைவனும் அவர்களை மன்னித்து அருளினான் என்று செல்கின்றது கதை!.

உண்மையான முஃமின்கள் இவ்விதம் கதைகட்ட மாட்டார்கள். ஏனெனில், ''அல்லாஹ்வுடைய தூதர்கள் எவருக்கிடையிலும் நாங்கள் வேற்றுமை பாராட்டுவதில்லை!'' (அல்குர்ஆன் 2 : 285).

தர்கா வழிபாட்டை தீவிரமாகச் செய்துவரும் பரேலவிகள் இவை போன்ற புராணங்களை முஸ்லிம் உம்மாவில் பரப்பி வருகிறார்கள். ''லவ்வாக்க மா ஃகலக்த்துல் அஃப்லாக்க'' என்பதும் அதிலொன்று!. ''உன்னைப் படைத்திருக்கா விட்டால் பிரபஞ்சத்தையே படைத்திருக்க மாட்டேன்!' என்று இறைவன் முஹம்மதுவைப் பார்த்து கூறினானாம்.

புராணங்களைப் புறந்தள்ளிவிட்டு குர்ஆன் என்ன கூறுகின்றது எனப் பார்ப்போம்.

قَالَا رَبَّنَا ظَلَمْنَآ أَنفُسَنَا وَإِن لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ
مِنَ ٱلْخَٰسِرِينَ ﴿٢٣﴾

''எங்கள் இறைவா!! எங்களுக்கு நாங்களே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னிக்காவிட்டால் எங்களுக்கு கருணை காட்டாவிட்டால் நஷ்டத்தால் நாசமாகிப்போன மக்களாக ஆகி விடுவோம்!'' (அல்குர்ஆன் 7 : 23).

அல்லாஹ் அவர்களை மன்னித்தான். மன்னிக்கக் கூடியவன் அல்லாஹ்வையன்றி வேறு யார் உளர்?.

28. இறைவனின் அதிருப்தி

ஆதமையும் அவருடைய மனைவியையும் இறைவன் மன்னித்து விட்டாலும் தான் வைத்த பரிசோதனையில் அவர்கள் வெற்றிபெற வில்லை என்பதை தன்னுடைய வேதத்தில் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளான்.

மேற்கண்ட நிகழ்வு நடந்துமுடிந்தவுடன் ஆதமையும் ஹவ்வாவையும் அவர்களோடு ஷைத்தானையும் கீழே இறங்கி பூமிக்குச் சென்றுவிடுமாறு இறைவன் கூறிவிட்டான்.

'நீங்கள் எல்லோரும் இங்கிருந்து இறங்கிவிடுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாவீர்கள். ஒரு குறிப்பிட்ட காலம்வரை உங்களுக்கு பூமியில் தங்குமிடமும் வாழ்க்கை வசதிகளும் இருக்கின்றன'' (அல்குர்ஆன் 2 : 36).

'நீங்கள் இறங்கிவிடுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர் களாவீர்கள். ஒரு குறிப்பிட்ட காலம்வரை பூமியில் உங்களுக்கு தங்குமிடமும் வாழ்க்கைச் சாதனங்களும் உள்ளன. அங்கேயே நீங்கள் வாழ்வீர்கள். அங்கேயே நீங்கள் சாவீர்கள். அங்கிருந்தே நீங்கள் வெளிக் கொணரப்படுவீர்கள் என்றும் கூறினான்'' (அல்குர்ஆன் 7 : 24,25).

மஸ்ஜூதுல் மலாயிக்கா எனும் உயர் சிறப்பிடத்தை வழங்கி வானவர் களை ஸஜ்தா செய்யவைத்து சொர்க்கத்தில் தங்கவைக்கப்பட்டாலும் மேலும் மேலும் முன்னேறவேண்டும் வானவர்களை ஒத்த வாழ்வை அடையவேண்டும் எனும் ஆசையால் யாருடைய தூண்டுதலுக்கோ பலியாகி தன்னுடைய மானத்தை இழந்து தன்னுடைய தங்கு மிடத்தையும் இழந்து இறைவனுடைய அதிருப்தியையும் மனிதன் சம்பாதித்துக் கொண்டான்.

''ஆதம் தன்னுடைய இறைவனுக்கு மாறுசெய்தார். நேர்வழி தவறினார். பிறகு இறைவன் அவரைத் தேந்தெடுத்துக் கொண்டான். அவரை மன்னித்தான். அவருக்கு நேர்வழி காட்டினான்'' (அல்குர்ஆன் 20 : 121,122).

''நாம் ஆதமுக்கு ஒரு கட்டளையைப் பிறப்பித்திருந்தோம். அவரோ அதனை மறந்துவிட்டார். அவரிடத்தில் மனஉறுதியை நம்மால் காண இயலவில்லை' (அல்குர்ஆன் 20 : 115).

இவன் உங்களுடைய பகிரங்க பகைவன் என்று தெளிவாக எச்சரித்திருந்தபோதும் ஷைத்தானுடைய பேச்சை அவர் கேட்டார். வெளிப்படையாக நம்முடைய கட்டளையை மீறினார். அவர் மட்டுமல்ல, அவருடைய சந்ததியினரும் தெளிவான வழிகாட்டுதல்

வந்த பின்னரும் ஷைத்தானின் பின்னால் அலைந்து கொண்டுள்ளார்கள் --- என்பதையே இறைவன் இங்கு குறிப்பிட விரும்புகிறான். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து நாம் பெற வேண்டிய மிகப்பெரிய படிப்பினை இதுவே!.

(ஊ) மண்ணுலக வாழ்க்கை

29. இருந்த சொர்க்கம் எது?

ஆதமும் அவருடைய மனைவியும் எங்கே இருந்தார்கள்? சொர்க்கத்தில் என்றால் அந்தச் சொர்க்கம் எங்கே இருக்கின்றது? என்ற கேள்விகளுக்கு நம்முடைய உலமாப் பெருமக்கள் அளித்துள்ள விடைகளை இங்கு பார்ப்போம்.

விண்ணுலகில் சொர்க்கத்தில் அவர்கள் சிறிது காலம் தங்கவைக்கப் பட்டார்கள். அதன்பின்பு எதற்காக எங்கு செல்வதற்காக படைக்கப் பட்டார்களோ அந்த மண்ணுலகிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் எனும் கருத்து பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ள கருத்தாகும்.

அதற்கு மாற்றமான கருத்தையும் ஒருசிலர் கூறியுள்ளார்கள். தகவல் அடிப்படையில் அதனையும் நாம் பார்த்துவிடுவோம்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் தங்க வைக்கப்பட்ட சொர்க்கம் இம் மண்ணுலகிலேயே இருந்தது என்று ஒருசிலர் கூறியுள்ளார்கள். அதற்கு அவர்கள் எடுத்துக் காட்டுகின்ற ஆதாரங்கள் இதோ...

ஆதம் அலைஹிஸ்ஸலாம் மண்ணில் படைக்கப்பட்டார்கள். மண்ணுலகிலிருந்து வானுலகிற்கு உயர்த்தப்பட்டார்கள் என்று எந்தக் குறிப்பையும் காண இயலவில்லை. பூமியில் என்னுடைய பிரதிநிதியைப் படைக்கப் போகிறேன் என்றுதானே இறைவன் வானவர்களிடம் சொல்லியிருந்தான்?.

ஜன்னத் எனும் சொல் சொர்க்கத்தை மட்டும் குறிக்காது. தோட்டம் என்ற பொருளையும் தரும். “தோட்டக்காரர்களை சோதித்தது போன்று இவர்களையும் நாம் சோதிப்போம்’ என்று இறைவன் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளான். (அல்குர்ஆன் 68 : 17).

அடுத்ததாக, கீழே இறங்கிச் செல்லுங்கள் எனும் சொல். மேலே சொர்க்கத்தில் அவர்கள் வசித்த காரணத்தினால்தான் ‘இறங்கிச் செல்லுங்கள்’ எனும் பொருள் தரும் ‘ஹுபூத்’ என்ற சொல் ஆளப்

பட்டுள்ளது என்றெல்லாம் கூற இயலாது. ஏனெனில், செல்க, இறங்குக, வெளியேறுக எனும் பொதுவான பொருள்களில் இச்சொல்லை குர்ஆன் கையாண்டுள்ளது. எடுத்துக் காட்டாக...

வெள்ளப்பிரளயம் ஓய்ந்தபின்பு இறைத்தூதர் நூஹ் அலைஹிஸ் ஸலாமுக்கு 'கட்டளை பிறப்பிக்கப்பட்டது: நூஹே! இறங்குவீராக' (அல்குர்ஆன் 11 : 48).

இறையருளையும் இறைவன் அளித்த சுவையான உணவு வகைகளையும் வேண்டாம் என்று மறுத்து 'எங்களுக்கு காய்கறியும் கீரைகளும்தான் வேண்டும்!' என்று இஸ்ரவேலர்கள் அடம் பிடித்த போது அவர்களிடம் கூறப் பட்டது, 'நீங்கள் ஏதேனும் ஒரு பட்டணத்திற்கு சென்றுவிடுங்கள்!'' (அல்குர்ஆன் 2 : 61).

ஆதம் அலைஹிஸ்ஸலாமும் அவருடைய மனைவியும் பூமியில் ஒரு செழிப்பான தோட்டத்தில் தங்கவைக்கப்பபட்டார்கள். அது மற்ற எல்லா தோட்டங்களை விடவும் மேலானதாக உயர்வானதாக இருந்தது. மரஞ்செடிகொடிகள், கனி வர்க்கங்கள், நிழல்தரும் தருக்கள், பசுமையும் செழிப்பும் நிரம்பிய அருட்கொடைகள் என்று பிற தோட்டங்களை விடவும் மேம்பட்டிருந்தது. 'இங்கே உங்களுக்கு பசி தெரியாது. நிர்வாணமாகாமல் இருக்க இங்கே பல வசதிகள் இருக்கின்றன. தாகமோ வெப்பமோ உங்களை வாட்டவே வாட்டாது!'' (அல்குர்ஆன் 20 : 118) என்று இறைவன் குறிப்பிடுவதும் இதைத்தான்!.

அதாவது உங்களுக்கு பசியும் எடுக்காது. வெய்யிலும் வாட்டாது. உங்களுடைய 'உள்'ளும் வாடாது. 'வெளி'யும் வதங்காது. பசி-தாக வெப்பமும் உங்களைத் தீண்டாது. சூரிய வெப்பமும் உங்களைத் தீண்டாது. இந்த அருட்கொடை இல்லையென்றால், சாதாரண பூமிப் பகுதியில் நீங்கள் இறங்கிச் சென்று உழைக்கவேண்டியிருக்கும்!.

அதுதானே நடந்தது?. தடை செய்யப்பட்ட மரத்தின் கனியை உண்டவுடன் என்ன ஆனது?. அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆடைகள் பிடுங்கப்பட்டன. வேலை, உழைப்பு, களைப்பு, முயற்சி, சோர்வு, சோதனை, பரீட்சை போன்றவை நிரம்பிய உண்மையான பூவுலகின் வாழ்க்கைக்கு அவர்கள் அனுப்பட்டார்களா இல்லையா?.

'ஒரு குறிப்பிட்ட காலம்வரை உங்களுக்கு பூமியில் தங்குமிடமும் வாழ்க்கை வசதிகளும் இருக்கின்றன'' (அல்குர்ஆன் 2 : 36) என்று இறைவன் கூறியிருப்பதும் சொர்க்க வாழ்வைச் சுட்டாது. ஏனெனில் இதே சொற்களை 'வசியுங்கள்' எனும் சாதாரண பொருளிலும் குர்ஆன் பயன்படுத்தியுள்ளது. '''இந்தப் பூமியில் நீங்கள் குடியிருங்கள்!'' என்று

இஸ்ரவேலர்களிடம் நாம் கூறினோம்' (அல்குர்ஆன் 17 : 104) பூமியில் குடியிருங்கள் என்று சொல்லப் பட்டுள்ளதால் அவர்கள் அதுநாள்வரை ஆகாயத்தில் குடியிருந்தார்கள் என்று பொருள் கொள்ளமுடியுமா?.

ஆகையினால் ஆதமும் ஹவ்வாவும் மண்ணுலகில் படைக்கப் பட்டார்கள். மண்ணுலகிலேயே தங்க வைக்கப்பட்டார்கள். அவர்கள் இழைத்த குற்றத்தின் விளைவாக, அவர்களுக்கு அதுகாறும் வழங்கப் பட்டிருந்த வசதிவாய்ப்புகள் பிடுங்கப்பட்டு சாதாரண உலக வாழ்க்கை வாழுமாறு பணிக்கப்பட்டது.

30. இறங்கிய இடம் எதுவோ?

ஆதமும் அவருடைய மனைவியும் எங்கே இறக்கப்பட்டார்கள் என்பதற்கும் சுவாரஸ்யமான பதில்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மக்காவிற்கும் தாயிஃபுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆதம் இறங்கி னார்கள். ஆதம் இந்தியாவில் இறங்கினார்கள். ஹவ்வா ஜித்தாவில் இறங்கினார்கள். பசரா-விற்கு அருகிலுள்ள தஸ்தமீஸான் என்று பகுதியில் இப்லீஸ் இறங்கினான். அஸ்பஹான் பகுதியில் பாம்பு அய்யா இறங்கினார்கள். ஆதம் ஹஜருல் அஸ்வதையும் கையோடு எடுத்துக் கொண்டு இந்தியாவில் இறங்கினார்கள். கூடவே கொஞ்சம் சொர்க்கத்து செடிகளையும் பிடுங்கிக் கொண்டு வந்தார்கள். அதனால்தான் இந்தியாவில் நறுமண பயிர்கள் விளைகின்றன. ஆதம் ஸஃபாவிலும் ஹவ்வா மர்வாவிலும் இறங்கினார்கள்.

இவ்வளவு பதில்கள் கூறப்பட்டுள்ளன. மீண்டும் ஞாபகப் படுத்துகிறோம். இந்த விஷயங்களிலெல்லாம் நமக்கு யாதொரு பயனுமில்லை. அப்படி ஏதும் பயனிருந்திருந்தால் அல்லாஹ் கட்டாயம் அறிவித்திருப்பான்.

ஆதம் இலங்கையில் இறங்கினார் என்று நாம் நம்புவதால் அங்கே போகும் வழியில் அவருக்கு ஒரு பாலம் கட்டியுள்ளோம். (ராமர் பாலத்தை கட்டிய அதே பொறியாளர்தான்!) பாவா ஆதம் பாதங்கள் என்று எதனையோ வைத்துள்ளோம். சேது சமுத்திரம் என்பதில் உள்ள சேது அவருடைய பையன் ஷீதுதான் என்று கூறுகிறோம். (இஸ்லாமிய ஆட்சி ஏற்பட்டால் சுற்றுப்புற சூழலாளர்கள் எதிர்க்கும் சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றுமா என்பதே கேள்விக்குறி!)

ஹிதாயத் எனும் நேர்வழியிலிருந்து எப்படியாவது வழிபிறழ

வைத்துவிட வேண்டும் என்பதே ஷைத்தானின் முயற்சி. இப்படிப்பட்ட செயல்கள் மூலமாக நாம் அவனுக்கு பேருதவி செய்து கொண்டிருக் கிறோம். குகைத்தோழர்களைக் குறித்து இறைவன் குர்ஆனில் கூறி யுள்ளான். அவர்களுடைய கொள்கையுறுதி, இறைவனுக்காக எதையும் சந்திக்கத் துணியும் தீரம் போன்ற அருங்குணங்களைப் பற்றி அடுக் கடுக்காக கூறுகிறான். ஆனால், மக்கள் அவற்றையெல்லாம் விட்டு விட்டு அவர்கள் எத்தனை பேர், எங்கே தங்கினார்கள் என்பது போன்ற விஷயங்களில்தாம் கவனத்தை அதிகமாகச் செலுத்துகிறார்கள்.

இது ஒரு புற்றுநோய்! முஸ்லிம் சமுதாயம் இவ்வியாதிக்கு மோசமான முறையில் பலியாகிவிட்டது. வணக்க வழிபாடுகளின் உயிரோட்டத்தை புறக்கணித்து விட்டு சடங்கு சம்பிரதாயங்களில அதிகமாக ஈடுபட்டு வருகிறோம். இறைத் தூதரின் ரோமம் இருப்பதாக நம்பப்படும் பள்ளி வாசலுக்கு ஏதோ 'ஹஜ்'ஜுக்கு செல்வதைப் போல சென்று வருகிறோம். இறைத்தூதர் யூஸுஃப் அலைஹிஸ் ஸலாம் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை 'அழகிய வரலாறு' என குர்ஆன் குறிப்பிடுகின்றது. அதை அழகற்ற வரலாறாக ஆக்கிவிட்டோம். நாம் பெற வேண்டிய படிப் பினைக்கு சற்றும் சம்பந்தமில்லாத அந்தப் பெண்ணை அவருக்கு மனைவியாக்கிவிட்டோம்.

ஏறக்குறைய எல்லா இறைத்தூதர்களின் வரலாறுகளிலும் நாம் இவ்விதமே நடந்து கொண்டுள்ளோம். இறைவனின் தூதர்களுக்கு மதிப்பளிக்கிறோம் எனும் பெயரில் வரலாற்றுக்கும் இஸ்லாமிய நியதிகளுக்கும் மாற்றமான எத்தனை எத்தனையோ விஷயங்களை வலிந்து திணித்துள்ளோம்.

31. இரண்டு மகன்கள்

ஆதம் அலைஹிஸ்ஸலாம் பூமியில் இறக்கப்பட்டார்கள் என்றுமட்டும் கூறிய குர்ஆன் அதன்பிறகு எந்த நிகழ்வையும் பதிவு செய்யவில்லை. ஆதமுடைய இரண்டு மகன்களுக்கிடையிலான கைகலப்பை மட்டும் பதிவு செய்துள்ளது. அதுவும் 'ஒரு முக்கிய செய்தி' எனும் பீடிகையோடு!. அதைக் காண்போம்.

“ஆதமுடைய இரண்டு மகன்களின் முக்கிய வரலாற்றை அதிலுள்ள ஹிக்மத்தோடு (சொல்லவரும் செய்தியை தெளிவாக்கி) சொல்வீராக!” (அல்குர்ஆன் 5 : 27).

நீதி - அநீதி, நன்றியுடைமை - நன்றிமறத்தல், இறையச்சம் - இறைமாறுபாடு போன்ற இருமுனைகளின் முதல் வரலாறு என்பதால் இந்நிகழ்வு மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. இறைவனுக்கு அஞ்சி இஸ்லாமிய வாழ்வு வாழ்ந்துவந்த ஒரு முஃமினின் இரத்தம் சிந்தப்பட்ட வரலாறு என்பதாலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

கலையை கலைக்காக வெளிப்படுத்துதல், நிகழ்வை நிகழ்வாக அறிதல் போன்ற மடத்தனங்களையெல்லாம் தூக்கி தூரவைத்துவிட்டு வரலாற்றை படிப்பினைக்காக அறிதல் எனும் இலக்கணத்தை குர்ஆன் கற்றுத் தருகின்றது. தேவையற்ற வகையில் ஒரு வார்த்தையைக் கூட குர்ஆன் பயன்படுத்துவ தில்லை. எதுகை மோனைக்காக ஓர் எழுத்தைக் கூட தேவையற்ற இடத்தில் குர்ஆன் திணிப்பதில்லை. கதைபேசிக் களித்திருப்போம் என்ற வகையிலான நிகழ்வுகள் எதனையும் நாம் குர்ஆனில் காண இயலாது.

வரலாற்றை எவ்வாறு அணுகவேண்டும் என்பதற்கான கோடுகளை குர்ஆன் இழுத்துக் காட்டியுள்ளது. தவ்ராத் போன்ற பிற வேதங்களில் நம்மால் இதைக் காண இயலாது. படிப்பினைகள், அறவுரைகள், அறிவுரைகள் ஏதுமின்றி தவ்ராத் கூறும் வரலாறுகள் வெறிச்சிடுகின்றன. நம்முடைய பழங்கால வரலாற்று நூல்களும் ஏறக்குறைய இவ்வாறுதான் உள்ளன. வரலாற்றை குர்ஆன் எங்ஙனம் அணுகுகின்றது என்பதை அறிய இதே சம்பவத்தை தவ்ராத் எவ்வாறு விளக்குகின்றது என்பதை முதலில் காண்போம்.

> ‘‘ஆதாம் தன் மனைவி ஏவாளுடன் கூடி வாழ்ந்தான். அவள் கருவுற்றுக் காயினைப் பெற்றெடுத்தாள். அவள், ‘ஆண்டவர் அருளால் ஆண்மகன் ஒருவனை நான் பெற்றுள்ளேன்’ என்றாள். பின்பு, அவள் அவன் சகோதரன் ஆபேலைப் பெற்றெடுத்தாள். ஆபேல் ஆடு மேய்ப்பவன் ஆனான். காயின் நிலத்தைப் பண்படுத்துபவன் ஆனான். சில நாள்கள் சென்றன. காயின் நிலத்தின் பலனிலிருந்து ஆண்டவருக்குக் காணிக்கை கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையிலிருந்து கொழுத்த தலையீறுகளைக் கொண்டு வந்தான். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் கனிவுடன் கண்ணோக்கினார். ஆனால், காயினையும் அவன் காணிக்கைளையும் அவர் கனிவுடன் கண்ணோக்கவில்லை. ஆகவே, காயின் கடுஞ்சின முற்றான். அவன் முகம் வாடியது. ஆகவே, ஆண்டவர் காயினிடம் ‘நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம்

வாடியிருப்பது ஏன்? நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாடிவிட்டால் பாவம் உன்மேல் வேட்கைகொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆளவேண்டும்' என்றார்.

காயின் தன் சகோதரன் ஆபேலிடம், 'நாம் வயல்வெளிக்குப் போவோம்' என்றான். அவர்கள் வெளியில் இருந்த பொழுது, காயின் தன் சகோதரன் ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்றான். ஆண்டவர் காயினிடம், 'உன் சகோதரன் ஆபேல் எங்கே?' என்று கேட்டார். அதற்கு, அவன் 'எனக்குத் தெரியாது. நான் என்ன, என் சகோதரனுக்குக் காவலாளியோ?' என்றான். அதற்கு ஆண்டவர் 'நீ என்ன செய்துவிட்டாய்! உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது, உன் கைகள் சிந்திய உன் சகோதரனின் இரத்தத்தைத் தன் வாய் திறந்து கடித்த மண்ணை முன்னிட்டு, நீ சபிக்கப் பட்டிருக் கிறாய். நீ மண்ணில் பயிரிடும்பொழுது அது இனி மேல் உனக்குப் பலன் தராது. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்' என்றார்". (தொடக்க நூல் அத் 4 வச 1-12)

போகிறபோக்கில் சொல்லப்பட்ட பொத்தாம்பொதுவான ஒரு கதையாக இந்நிகழ்வு தவ்ராத்தில் கூறப்பட்டுள்ளது. காபீலுடைய குணநலன்கள் ஹாபீலுடைய குணநலன்கள் எதுவுமே இதில் குறிப்பிடப் படவில்லை. எதற்காக இந்நிகழ்வு ஈங்கு சொல்லப்படுகின்றது? நாம் இதிலிருந்து பெறவேண்டிய படிப்பினை என்ன? என்பதும் அறிய முடியவில்லை.

வழிகாட்ட வந்த குர்ஆன் இந்நிகழ்வை எங்ஙனம் எடுத்துரைக் கின்றதென்பதைக் காண்போம்.

"ஆதமுடைய இரண்டு மகன்களின் முக்கிய வரலாற்றை அதிலுள்ள ஹிக்மத்தோடு (சொல்லவரும் செய்தியை தெளிவாக்கி) சொல்வீராக!. அவர்கள் இருவரும் அர்ப்பணிப்பு செய்தனர். இருவரில் ஒருவருடைய அர்ப்பணிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. அடுத்தவருடைய அர்ப்பணிப்பு ஒப்புக் கொள்ளப்பட வில்லை. 'நானுன்னைக் கொலை செய்யப் போகிறேன்!' என்று அவன் ஆர்ப்பரித்தான். 'இறையச்சமுடையோரின் வழிபாடுகளையே இறைவன் ஏற்றுக்கொள்கிறான்!' என முதலாமவர் கூறினார். 'நீ என்னைக் கொல்ல முயன்றாலும் நான் உன்னைக் கொல்ல முயற்சி செய்யமாட்டேன்!. அகிலங்களை எல்லாம் படைத்த

அல்லாஹ்வை நினைத்து நான் பயப்படுகிறேன்!' என்றும் கூறினார். 'என்னுடைய பாவத்தையும் உன்னுடைய பாவத்தையும் ஒட்டு மொத்தமாக அள்ளிக்கொண்டு நரகவாசியாக ஆகப் போகிறாய் என்று நினைக்கிறேன். அநியாயக்காரர்களின் தங்குமிடம் அதுதானே!' என்றும் கூறினார்.

அவனைக் கொன்றுவிடுவதுதான் நல்லது என்ற தீர்மானத்திற்கு அவனுடைய மனம் வந்தது. அவ்வாறே அவரைக் கொலைசெய்து பேரிழப்பிற்கு ஆளானான்.

அல்லாஹ் ஒரு காக்கையை அனுப்பிவைத்தான். அது பூமியில் ஒரு குழியைத் தோண்டியது, தன்னுடைய சகோதரனின் இறந்த உடலை எப்படி மறைப்பது என்பதை அவனுக்குக் காட்டுவதற்காக!. 'அறிவற்ற 'இந்தக் காக்கைக்கு தெரிந்த விஷயம்கூட எனக்குத் தெரியாமல் போயிற்றே! இந்தப் பிணத்தை யார்கண்ணிலும் படாமல் மறைத்து வைத்திருப்பேனே! என்று புலம்பினான். தன்னுடைய செய்கையைக் குறித்து பெரிதும் வருந்தினான்'' (அல்குர்ஆன் 5 : 27-31).

பலிகொடுத்தலுக்கும் தானதருமம் செய்வதற்கும் 'குர்பான்' எனும் சொல் பயன்படும். இறைவனுடைய நெருக்கத்தைப் பெறுவதற்காக அர்ப்பணிக்கப்படும் எப்பொருளும் 'குர்பான்' ஆகும். ஒப்புக்கொள்ளப் பட்டதற்கான அடையாளம் என்ன என்பது இங்கு குறிப்பிடப் படவில்லை என்றாலும் பிற அறிவிப்புகளின் வாயிலாக அதை அறிய முடிகின்றது.

முந்தைய உம்மத்துகளில் அர்ப்பணிக்கப்படும் பொருளை அள்ளிச் செல்ல வானிலிருந்து தீப்பந்து ஒன்று வரும். அது அப்பொருட்களை அப்படியே விழுங்கிச் சென்றுவிடும்.

(காண்க: முஸ்லிம், பாகம் 3, ஹதீஸ் எண் 351, ரஹ்மத் ட்ரஸ்ட் வெளியீடு)

தன்னுடைய அர்ப்பணிப்பு ஒப்புதலெனும் அங்கீகாரத்தைப் பெறவில்லை என்றதும் காபீல் கோபமடைந்தார். தன்னுடைய அர்ப்பணிப்பு நிராகரிக்கப்படக் காரணமென்ன என்றவர் யோசிக்காமல் ஹாபீல் மீது தன்னுடைய கோபத்தைக் காட்டினார். பார்க்கப்போனால் அதற்கும் ஹாபீலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆனால், பொறாமையால் பீடிக்கப்பட்டோர் தமது கையாலாகாத்தனத்துக்கு மற்றவர்களையே குற்றஞ்சாட்டுகிறார்கள். தங்களுடைய தவறுகளை பிறருடைய கூடைகளில் கொட்டிவிடவே முயற்சிக்கிறார்கள். சிலரோ

அதையும்தாண்டி பழிவாங்கவும் இன்னலிழைக்கவும் துணிகிறார்கள். தனிநபர்களில் இதற்கு உதாரணமாக காபீலைக் காட்டும் குர்ஆன் சமூகங்களில் யூதர்களைக் காட்டுகின்றது. தன்னுடைய அர்ப்பணிப்பு ஏற்றுக்கொளப்படாததால் கோபத்தில் நிதானமிழந்த காபீல் தன்னுடைய சகோதரனைக் கொன்றுவிடத் துணிந்தார்.

'என்னைக் கொன்று என்ன ஆகப்போகின்றது? நான் என்ன குற்றம் இழைத்தேன்? ஏற்றுக்கொள்ளாதது இறைவனுடைய குற்றமா? உண்மையில் குற்றம் உன்னுடையது. ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான தகுதி உன்னுடைய குர்பானிக்கு இல்லை. இறைவனுக்குப் பயந்து தூய எண்ணத்துடன் நீ வழங்கியிருந்தால் கண்டிப்பாக அவன் ஒப்புக் கொண்டிருப்பான். இறைவனுக்காகவே எதையும் செய்ய நினைப்பவர்கள் முறைப்படி நியதிகளின் படி செய்வார்கள். நானும் அவ்வாறுதான் செய்தாகவேண்டும். குர்பானி ஏற்றுக் கொள்ளப் படவில்லையே என்று உண்மையிலேயே நீ கவலைப்பட்டால் அதற்கு என்ன காரணம் என்று யோசித்துப்பார். உன்னுடைய தக்வாவில் எவ்வாறு ஓட்டை விழுந்தது என்று சிந்தித்துப் பார். அதை விட்டுவிட்டு என்மேல் பாய்வதால் என்னைக் கொன்றுவிட நினைப்பதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை'.

'இறையச்சமுடையோரின் வழிபாடுகளையே இறைவன் ஏற்றுக் கொள்கிறான்!' என ஹாபீல் கூறினார். (அல்குர்ஆன் 5 : 27).

இதே கருத்தையே வேறோர் இடத்தில் குர்ஆன் 'நீங்கள் கொடுக்கும் குர்பானிகளின் இறைச்சியோ இரத்தமோ இறைவனைச் சென்றடைவதில்லை. உங்களிடமுள்ள இறையச்சமே அவனைச் சென்று சேருகின்றது!' என்று தெரிவிக்கின்றது. (அல்குர்ஆன் 22 : 37).

'நீ என்னைக் கொல்ல முயன்றாலும் நான் உன்னைக் கொல்ல முயற்சி செய்யமாட்டேன்!. அகிலங்களை எல்லாம் படைத்த அல்லாஹ்வை நினைத்து நான் பயப்படுகிறேன்!' என்று ஹாபீல் கூறினார்.

நீ என்னைக் கொலை செய்வதாக மிரட்டுகிறாய். ஒருவேளை உண்மையிலேயே நீ என்னைக் கொல்ல முயன்றாலும் எனக்கு உன்னைக் கொல்லும் உத்தேசமில்லை. உன்னையும் என்னையும் படைத்த அல்லாஹ் ரப்புல் ஆலமீனை எண்ணி நான் பயப்படுகிறேன். ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இருக்கிறோம். ஒவ்வொருவர் மீதும் மற்றவருடைய உயிரையும் மானத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. அதைப்பற்றி விசாரிக்கப்படுவோம். அப்படி இருக்கையில் அத்துமீறத் துணிந்தால் அல்லாஹ்விடம் என்னதான்

சொல்லமுடியும்? என்றெல்லாம் ஹாபீல் எடுத்துரைத்தார்.

இதுவொன்றும் போர்க்களமல்ல! போர்க்களக் காட்சியுமல்ல! ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனைக் கொலை செய்யப் போகிறான். நீ ஒருவேளை அவ்வாறு செய்தாலும் நான் செய்யமாட்டேன் என்று இன்னொருவன் கூறுகிறான். 'எனக்கு அந்த மாதிரியான நோக்கம் எதுவுமில்லை!' 'அப்படிப்பட்ட பாவத்தை நான் செய்யமாட்டேன்!' என்றுதான் பொருள். என்னதான் நீ அடித்தாலும் வாங்கிக்கொண்டு பேசாதிருப்பேன் என்று பொருளல்ல!.

உங்களுடைய உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து வரும்போது எதிர்த்து நின்று போரிடுவதை இஸ்லாம் உங்கள்மீது கடமையாக்கி இருக்கின்றது.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு மனிதர், 'என்னுடைய பொருளை அபகரிக்க யாரேனும் முயன்றால் என்ன செய்வது?' என்று வினவினார்.

'அல்லாஹ்வுக்குப் பயப்படுமாறு அறிவுரை கூறுக!'

'அதை அவர் காதுகொடுத்தே கேட்கவில்லை என்றால்?'

'பக்கத்தில் உள்ள முஸ்லிம்களை அழைத்து உதவி கோருக!'

'அப்படிப்பட்ட மக்கள் எவரும் என்னருகில் இல்லையென்றால்?'

'அரசாங்கத்திடம் சென்று முறையிடுக!'

'ஆட்சிப் பொறுப்பாளர்கள் தொலைவில் இருந்தால்?'

'பொருளைக் காப்பதற்காக போராடுக! அப்போராட்டத்தில் வென்றால் பொருள் மிஞ்சும். உயிரை இழந்துவிட்டால் ஷஹீதாவீர்கள்' என பதில் அளித்தார்கள்.

இஸ்லாமின் போதனை இதுதான் எனும்போது ஹாபீல் கைகளைக் கட்டிக்கொண்டு தன் தலையைத்தானே காவு கொடுத்தார் எனக் கொள்ள முடியாது.

'என்னுடைய பாவத்தையும் உன்னுடைய பாவத்தையும் ஒட்டுமொத்தமாக அள்ளிக்கொண்டு நரகவாசியாக ஆகப்போகிறாய் என்று நினைக்கிறேன். அநியாயக்காரர்களின் தங்குமிடம் அதுதானே!' என்று ஹாபீல் கூறினார்.

உன்னைத் தாக்கும் நோக்கோடு நான் கையை வீசாததற்கு இதுதான் காரணம். குற்றவாளியாக என் இறைவனுக்கு முன்னால் போய் நிற்க ஆசைப்படவில்லை. என்னைத் தாக்கியே தீருவேன் என்று நீ நினைத்தால் தாராளமாகச் செய்துகொள். என்னை ஒருவேளை நீ

கொன்றுவிட்டால் அந்தப் பாவமும் உன் தலையில்தான் விடியும். தற்காக்கும் எண்ணத்தோடு நான் எடுக்கும் முயற்சிகளில் உனக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டாலோ அல்லது தாக்குதலின்போது நீ உயிரை இழந்துவிட்டாலோ அதுவும் உன்னையே சாரும். ஏனென்றால் கொல்லும் நோக்கத்தோடு தாக்குதலைத் தொடுத்தவன் நீதானே!'

அநியாயமாக ஒருவன் மற்றவன்மீது தாக்குதல் தொடுக்கிறான். எதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு மற்றவன் தள்ளப்படுகிறான். இவனைத் தாக்கவேண்டும் எனும் எண்ணம் அவனிடம் அறவே இல்லை. கைகலப்பின்போது விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்கின்றன. இருவருக்கும் காயம் ஏற்படலாம்; யாரேனும் ஒருவருக்கு படுகாயம் நேரலாம்; உயிரை இழக்க நேரிடலாம். இவற்றுக்கெல்லாம் யார் காரணம்?.

اَلْمُسْتَبَانِ مَا قَالَا وَعَلَى الْبَادِئُ مَا لَمْ يَتَعَدَّ الْمَظْلُوْمُ (الترمذی, ابو داود)

குறி வைக்கப்பட்டவர் வரம்பு மீறாதவரை எல்லா பாவச்சுமையும் தாக்குதல் தொடுத்தவர் மீதுதான் வீழும் என்று இஸ்லாம் சொல்கின்றது.

வேண்டுமென்றே ஒரு முஃமினைக் கொன்றுபோட்டால் நரக நெருப்புதான் தண்டனை என்று குர்ஆன் கூறுகின்றது. (காண்க 4 : 93). ஆதிகாலத்திலிருந்தே இதே விதிதான் என்பதை புரிந்து கொள்கிறோம்.

'அவனைக் கொன்றுவிடுவதுதான் நல்லது என்ற தீர்மானத்திற்கு அவனுடைய மனம் வந்தது'.

தாக்கலாமா, கொல்லலாமா, வேண்டாமா என்று காபீல் மிகப்பெரும் மனக்குழப்பத்தில் இருந்தான். கடைசியில் கொன்றுவிடுவது என்று முடிவெடுத்தான். மனிதன் இயற்கைக்கு மாற்றமான முடிவொன்றை எடுக்கும்போது அவனுடைய மனம் ஒத்துழைக்க மறுக்கின்றது. அவன் செய்யப்போவது தவறு என்று ஓயாமல் கத்திக் கொண்டே இருக்கின்றது. அவனோடு மல்லுக்கட்டுகின்றது. காரணங்களை எடுத்துக் கூறி, சமாதானப்படுத்தி தன்னுடைய வழிக்கு மனதை திருப்பாதவரை அது ஓய்வதேயில்லை. மனிதன் தவறு இழைத்துவிடக்கூடாது என்பதற்காக இறைவன் ரஹ்மான் இயல்பமைப்பிலேயே வைத்துள்ள பாதுகாப்பு ஏற்பாடு இது!. காபிலுக்கும் இதுவே நேர்ந்தது. இறுதியில் பெருக்கெடுத்த அவருடைய பொறாமை கொலையைச் செய்தே தீருவது எனும் முடிவில் கொண்டுவந்து நிறுத்தியது. அப்போதுதான் குற்றம் செய்யத்தொடங்குபவன் இந்நிலையை கடந்தே வரவேண்டும்.

குற்றங்களைச் செய்யசெய்ய அவனுடைய உறுத்தும் மனசாட்சி வலுவிழந்து பொலிவிழந்து குற்றுயிரும் குலையுயிருமாய் ஆகி விடுகின்றது. நடைப்பிணமாய் பேசும் திறனிழந்து மௌனமாகி விடுகின்றது. அப்புறம் அவன் தடையில்லாமல் குற்றங்களைச் செய்து கொண்டே போவான்.

அனுமதிக்கப்படாத யாதொரு தீச்செயலை செய்ய முற்படும்போதும் மனிதனுக்கும் அவனுடைய மனதிற்குமிடையே இப்போராட்டம தொடர்கின்றது. மனிதன் தன்அறிவிற்கு முக்கியத்துவம் கொடுத்து நஃப்ஸை அடக்கிவிட்டால் வெற்றியாளனாக மாறிவிடுகிறான். அவனுடைய நஃப்ஸ் வெற்றி பெற்றுவிட்டால் நஷ்டமடைந்தவனாக நாசமடைந்தவனாக மாறிவிடுகிறான். தன்னுடைய நஃப்ஸின் பேச்சை காபீல் கேட்டதால் நஷ்ட ஆற்றில் விழுந்தான்; நாசமாகிப் போனான்.

யாரேனும் ஒருவருக்கு ஒரு நற்செயலை நீஙகள் கற்றுக்கொடுத்தீர்கள் என்றால் அவர் அச்செயலை செய்யும் காலமெல்லாம் உங்களுக்கும் பலன் கிடைக்கும். ஒரு தீயசெயலைத் தொடங்கி வைத்தீர்கள் என்றால் அச்செயல் நடைபெறும் காலமெல்லாம் உங்கள் கணக்கில் பாவச்சுமை ஏறும் -- இது இஸ்லாம் போதிக்கும் ஒழுக்க நியதி! அவ்வகையில் உலகில் நடக்கின்ற கொலைகளில் ஒரு பங்கு முதல்கொலையைச் செய்தவனுக்கு கட்டாயம் போய்ச்சேரும்!.

32. காக்கை கற்றுக் கொடுத்த பாடம்

''அல்லாஹ் ஒரு காக்கையை அனுப்பிவைத்தான். அது பூமியில் ஒரு குழியைத் தோண்டியது, தன்னுடைய சகோதரனின் இறந்த உடலை எப்படி மறைப்பது என்பதை அவனுக்குக் காட்டுவதற்காக!''

கொன்றபிறகு செத்துப்போன தன் சகோதரனை அப்படியே விட்டுவிட்டான். வானில் ஒரு காகம் தோன்றியது. காகம் ஒரு புத்தி சாலிப் பறவை. தன்னுடைய தேவைக்கும் மிஞ்சிய இரையை பொதுவாக காகங்கள் பாறைகளுக்கிடையிலோ அல்லது வேறு ஏதேனும் மறை விலோ மறைத்து வைக்கின்றன. பிறகு, தேவைப்படும்போது எடுத்துக் கொள்கின்றன. அன்று வந்த காகமும் அதையே செய்தது.

செத்துப்போன உன் சகோதரனின் சடலத்தை யாருக்கும் தெரியாமல் மறைத்துவிடு, உன்னுடைய குற்றம் யாருடைய பார்வையிலும் படாது மறைந்துபோகும், என்ற பாடத்தை அது காபீலுக்கு உணர்த்தியது.

காக்கையின் புத்திசாலித்தனமான செயலைக் கண்டு காபீலின் விழிகள் வியப்பால் விரிந்தன. அதே சமயம் வெட்கத்தால் நொந்துபோய் தன்னுடைய தலையைத் தானே அவன் அடித்துக் கொண்டான்.

'அறிவற்ற இந்தக் காக்கைக்கு தெரிந்த விஷயம்கூட எனக்குத் தெரியாமல் போயிற்றே! இந்தப் பிணத்தை யார்கண்ணிலும் படாமல் மறைத்து வைக்க வேண்டும் என்பதுகூட எனக்குத் தெரியாமல் போயிற்றே!' என்று அவன் தலைதலையாய் அடித்துக் கொண்டான்.

அல்லாஹ்வுக்குப் பயப்படாதவன் மற்ற எல்லாப் படைப்பினங் களுக்கும் பயந்து சாகிறான் எனும் விதியை குர்ஆன் இங்கு எடுத்துக் கூறுகின்றது. அல்லாஹ் இயற்கையிலேயே அமைத்துக் கொடுத்திருக் கின்ற மனச்சாட்சியின் பேச்சை மதிக்காதவர்கள் காக்கா போன்ற பறவை களிடமெல்லாம் பாடம் கேட்க வேண்டியிருக்கின்றது. குற்றத்தைச் செய்துவிட்டு அதை எண்ணி வருந்தி அழாமல் நேர்வழிக்கு மீள நினைக்காமல் மறைத்துவிடுவதில் அல்லவா அவர்களுடைய கவனம் செல்கின்றது!.

இங்கே ஷைத்தானைத்தான் காக்கையாகக் கொள்ளவேண்டும். முதலில் அவன் காபீலின் மனதில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தினான். குற்றத்தை அவன் செய்தபிறகு தடயங்களை எப்படி மறைப்பது என்பதை காக்கையாக வந்து கற்றுக் கொடுத்தான். மனிதனை வழிகெடுத்தே தீருவது எனும் அவனுடைய சபதத்தில் முக்கியமானதொரு படித் தரத்தை இவ்வாறாக அவன் கடந்து நின்றான்.

காக்கையை தான் அனுப்பியதாக அல்லவா அல்லாஹ் இங்கு கூறுகிறான் என்றொரு கேள்வி உங்களுடைய உள்ளத்தில் எழுந்தால் அதற்குரிய பதிலை குர்ஆனே தருகின்றது. நன்மை எது? தீமை எது? என்பதைப்பற்றிய அறிவை அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுத்துள்ளான். அவ்வறிவை நன்முறையில் பயன்படுத்துவதும் பயன்படுத்தாது சீரழிவதும் அவனவன் பாடு!.

நன்மையை நோக்கி நீங்கள் நகர்ந்தால் அதற்குரிய வழியை அல்லாஹ் காட்டுவான். தீமையை நோக்கி நீங்கள் முன்னேறினால் அவ்வழியில் உங்களை அழைத்துச் செல்வோரோடு இணைத்துவிடுவான். இதுதான் அல்லாஹ்வுடைய ஸுன்னத்-வழிமுறை!.

''யாரேனுமொரு மனிதன் பொங்கும் கருணையாளனின் நினைவூட்டு தலை அலட்சிப்படுத்துகிறானோ அவன்மீது நாமொரு ஷைத்தானை ஏவி விடுகிறோம். அவன் இவனுக்கு நண்பனாகி விடுகிறான்'' (அல்குர்ஆன் 43 : 36).

“அவர்கள் மீது சில நண்பர்களை நாம் சாட்டியிருந்தோம். அவர்களோ அவர்களுக்கு முன்னாலும் பின்னாலுமுள்ள ஒவ்வொன்றையும் அழகு படுத்திக் காட்டிக் கொண்டிருந்தார்கள்!”. (அல்குர்ஆன் 41 : 25).

மேலே ஹாபீல் எடுத்துக்காட்டிய பல்வேறு வாதங்களும் பலனளிக்காமல் போனதைப் பார்த்து வந்தோம். எவ்வளவோ எடுத்துக் கூறியும் ஏற்றுக்கொள்ளாதவன் விஷயத்தில் அல்லாஹ்வுடைய இந்த ஸுன்னத் செயல்பட்டு வீழ்ச்சிப் பள்ளத்தாக்கில் உருட்டித்தள்ளியதில் ஆச்சரியமே இல்லை!.

செத்துப்போன சகோதரனின் பிணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் காபீல் தவித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு தெரியப் படுத்தும் விதமாகத் தான் அல்லாஹ் காக்கையை அனுப்பி வைத்தான் என்றுதான் எல்லோரும் பொதுவாகக் கூறி வருகிறார்கள். ஆனால், மேலே எடுத்துரைக்கப்பட்ட கருத்துதான் சரியானது என்பதை குர்ஆனை ஆழமாக வாசிக்கும் எவரும் சொல்லாமலேயே புரிந்து கொள்வார்.

காக்கைக் கதையோடு கல்யாணத்தையும் சேர்த்து முடிச்சு போட்டு வைத்துள்ளார்கள். தன்னோடு இணையாகப் பிறந்த தங்கையை தம்பிக்கு விட்டுக்கொடுக்க மனமில்லாமல் காபீல் வீம்பாக இருந்தார். அந்தப் பிரச்சனையை ஒரு முடிவிற்கு கொண்டுவரவே இறைவழியில் அர்ப்பணிப்பு செய்யுமாறு கூறப்பட்டது. யாருடைய குர்பான் ஏற்றுக் கொள்ளப்படுமோ அவருக்கே அந்தப் பெண் என்று முடிவானது. இப்படியாக ஒரு பெண்ணுக்காக நடைபெற்றதே இந்தக் கைகலப்பு என்றெல்லாம் கூறுகிறார்கள்.

வீணுக்காக மனிதன் படைக்கப்படவில்லை என்று அழுத்தந் திருத்தமாக வலியுறுத்திக் கூறுகின்றது அல்குர்ஆன். வந்த நோக்கத்தை மறந்துவிடாமல் அல்லது அலட்சியப்படுத்திவிடாமல் எந்நேரமும் அதை மனதில் கொண்டு வாழவேண்டும்.

33. கஅபத்துல்லாஹ் – முதல் இறையில்லம்

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது மனைவி மக்களோடு புவிப் பரப்பில் சீரும்சிறப்புமாக வாழ்ந்துவரலாயினர். ஏராளமான அருட்கொடைகளோடு எண்ணற்ற குழந்தைச் செல்வங்களையும் அல்லாஹ் அவர்களுக்கு அள்ளி வழங்கினான்.

‘அந்த ஓர் ஆன்மாவிலிருந்து அதனுடைய துணையையும் அல்லாஹ் உண்டாக்கினான். அவை இரண்டின் மூலம் எண்ணற்ற ஆண் மக்களையும் பெண் மக்களையும் (உலகில்) பரவச் செய்தான்’ (அல்குர்ஆன் 4 : 1).

இறைவனை வழிபடவேண்டும் என்பதற்காகத்தானே உலகில் மனிதனை இறைவன் படைத்துள்ளான்?. வழிபடவேண்டும் என்றால் அதற்கோர் இடம் வேண்டுமல்லவா?. ஆகையால் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மக்காவில் கஅபத்துல்லாஹ் என்று அழைக்கப்படும் இறையில்லத்தைக் கட்டினார்கள்.

மக்கமாநகரில் உள்ள இறையில்லம் கஅபத்துல்லாஹ்வைக் கட்டியவர் யார் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபடு நிலவு கின்றது. ஆதம் அலைஹிஸ்ஸலாம் தான் கட்டினார் என்று கருதப்படும் அதே வேளையில் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் தான் கட்டினார் என்றும் என்றும் ஒருசிலர் கருத்து தெரிவித்துள்ளார்கள். கீழ்க்காணும் ஆதாரங்களைக் கொண்டு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தாம் கட்டினார்கள் என்று நாமொரு முடிவிற்கு வருகிறோம்.

(அ) மனிதர்கள் அனைவர்மீதும் தொழுகை கடமையாக்கப் பட்டுள்ளது. அல்லாஹ்வை வணங்குவதற்காகத்தான் மனிதர்களையும் ஜின்களையும் இறைவன் படைத்துள்ளான். முன்சென்ற எல்லா இறைத் தூதர்கள் மீதும் தொழுகை கடமையாக்கப்பட்டிருந்தது என்பதை பொதுவாகக் கொள்ளாமல் கீழ்வரும் இறைவசனத்தின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கலாம்.

“ஆதமுடைய வழித்தோன்றல்களிலிருந்தும் நூஹ ுடன் கப்பலில் நாமேற்றியனுப்பிய மக்களின் வம்சாவழியிலிருந்தும் இப்றாஹீம் மற்றும் இஸ்ராயீலின் வழித்தோன்றல்களிலிருந்தும் இறைவன் தனது அருட் கொடைகளைப் பொழிந்துள்ள இறைத்தூதர்கள் இவர்களேயாவர்!. நாம் நேர்வழி காட்டி தேர்ந்தெடுத்துக்கொண்ட மக்களைச் சார்ந்தவர்கள்!. இவர்களுக்கு முன்னால் கருணைகொண்ட இறைவனின் வசனங்கள் வாசிக்கப்பட்டால் அழுதவாறே (ஸஜ்தாவில்) நெடுஞ்சாண் கிடையாக விழுந்து விடுவார்கள்!” (அல்குர்ஆன் 19 : 58).

ஸஜ்தா செய்து இறைவனை வணங்க வேண்டுமென்றால் பள்ளி வாசல் கட்டாயம் தேவை!. தொழுகை கூட்டாக- ஜமாஅத்தோடுதான் நிறைவேற்றப்படவேண்டும். ஆகையால் ஆதம் அலைஹிஸ்ஸலாம் காலத்திலும் கண்டிப்பாக தொழுகை பள்ளிவாசலில் ஜமாஅத்தோடு

நிறைவேற்றப்பட்டிருக்கும். அப்படிக் கட்டப்பட்ட பள்ளிவாசல்தான் உலகத்திலேயே முதன்முதலில் கட்டப்பட்ட பள்ளிவாசலாக இருக்கும்.

வான்மறை குர்ஆனில் இறைவன், ''மனிதர்களுக்காக முதன் முதலில் கட்டப்பட்ட இறையில்லம் பக்காவில் உள்ள இறையில்லமே ஆகும்!'' (அல்குர்ஆன் 3 : 97) என்று கூறுகிறான். முதன்முதலாக கட்டப்பட்ட இறையில்லம் பக்கா அதாவது மக்காவில் உள்ளதுதான் என்று குர்ஆனே சான்றளித்தபிறகு அதை யார் கட்டியிருக்க முடியும்? ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைத்தவிர!.

(ஆ) وَاِنَّ هٰذَا بَلَدٌ حَرَّمَ اللّٰهُ يَوْمَ خَلَقَ السَّمٰوَاتِ وَالْاَرْضِ
وَهُوَحَرَامٌ يُحَرِّمُهُ اللّٰهُ اِلٰى يَوْمِ الْقِيَامَةِ (البخارى)

''வானங்களையும் பூமியையும் படைத்தநாள் முதல் அல்லாஹ் இந்நகரை கண்ணியப்படுத்தியுள்ளான். கியாமத் இறுதித் தீர்ப்பு நாள்வரை அல்லாஹ் இதனைக் கண்ணியப்படுத்தியுள்ளான்'' என்று அண்ணல் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அறிவித்துள்ள ஒரு ஹதீஸ் புகாரியில் பதிவாகியுள்ளது. படைத்தநாள் முதல் புனிதமாக்கப்பட்டுள்ளது என்றால் அங்கு முதன்முதலில் பள்ளி வாசலைக் கட்டியவர் கண்டிப்பாக ஆதம் அலைஹிஸ் ஸலாமாகத்தான் இருக்கவேண்டும் என்பது இந்நபிமொழியிலிருந்து விளங்க வருகின்றது.

(இ) இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தாம் கஅபத்துல் லாஹ்வைக் கட்டினார்கள் என்று ஒரு கருத்து நிலவுகின்றது. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது மனைவியையும் சிறுகுழந்தையையும் இறைகட்டளைக்கிணங்க புற்பூண்டுகள் அற்ற வனாந்திரமான மக்காவில் கொண்டுபோய் விட்டுவிடுகிறார்கள். அப்போது அவர்கள் கேட்ட துஆவை குர்ஆன் பதிவு செய்துள்ளது.

''எம்மிறைவா! புற்பூண்டுகள் முளைத்திராத ஒரு பள்ளத்தாக்கில் உன்னுடைய கண்ணியமிக்க இல்லமருகில் என் மனைவியையும் மக்களையும் விட்டுவிட்டேன்!'' (அல்குர்ஆன் 14 : 37).

யாருமற்ற வனாந்திரப் பகுதியில் மக்கள் வசித்திராத பாலைப் பிரதேசத்தில் விட்டுச் செல்கிறார்கள். புற்பூண்டுகளே இராத அப் பகுதியில் இறையில்லம் எங்கிருக்கும்? ஆதம் அலைஹிஸ்ஸலாம் கட்டிய இறையில்லம் அப்பகுதியில் இருந்து அழிந்துபோய்விட்டது என்பதை வஹீ மூலம் அறிந்திருந்த இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம்

அவர்கள் அதனைக் குறிப்பிட்டுக்கூறியுள்ளார்கள். பிற்காலத்தில் அதனுடைய சுவடுகளைக் கண்டறிந்து மீண்டும் அவ்விடத்தில் இறையில்லம் எழுப்புமாறு இறைவன் ஆணையிடுகிறான். அதனையே இறைத்தோழர் இப்றாஹீம் நிறைவேற்றுகிறார்கள்.

இக்காரணங்களை முன்வைத்து முதல் இறையில்லத்தை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தாம் கட்டினார்கள் எனும் முடிவிற்கு நாம் வருகிறோம்.

34. ஆதமுடைய வரலாறு ஏழு இடங்களில்

'கூறியது கூறல் குற்றம்' எனும் விதி ஏறக்குறைய எல்லா மொழி களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. அதனை வழுவாகவும் குற்றமாகவும் மொழியியலார் கருதுகிறார்கள். அவ்வகையில் பல்வேறு கருத்துகள் குர்ஆனில் அடிக்கடி கூறப்படுவதால் உயர் இலக்கிய நூல் எனும் தரத்தில் குர்ஆன் இல்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாக வைக்கப் படுகின்றது. ஓரிறைக்கொள்கை, மறுமை நம்பிக்கை, இறைவனின் தூது போன்றன குர்ஆனில் அடிக்கடி கூறப்பட்டுள்ளன. அவையன்றி இறைத்தூதர்களின் வரலாறுகளும் ஆங்காங்கே கூறப்படு கின்றன. உதாரணமாக, ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுடைய வரலாறு ஏழு இடங்களில் கூறப்படுகின்றது.

கூறியது கூறல் எனும் குற்றத்தை குர்ஆன் செய்கின்றதா என்பது மிக முக்கியமானதொரு கேள்வி. ஒருமுறை கூறப்பட்டதை மறுமுறை கூறவோ செவியேற்கவோ பொதுவாக மனிதமனம் விரும்புவதில்லை. எனவேதான் ஏறக்குறைய எல்லா மொழிகளிலும் இது குற்றமாகவும் வழுவாகவும் கருதப்படுகின்றது. அப்படியிருக்கையில் இக்குற்றத்தை குர்ஆன் செய்யுமா? ஈடு இணையற்ற இலக்கியச் சிறப்புவாய்ந்த நூலான குர்ஆனில் கூறியது கூறல் உள்ளதா? என்பதற்கான விடையை அறிந்து கொண்டால்தான் குர்ஆன் வாசிப்பு பயனுள்ளதாகவும் நிறைவளிப்ப தாகவும் அமையும்.

கூறியது கூறல் எனும் குற்றத்தை குர்ஆன் எங்குமே செய்யவில்லை என்பதே உண்மையாகும். ஒரு விஷயத்தை ஒன்றுக்கு மேற்பட்ட இடங் களில் கூறுவதுதான் குற்றமாக முடியும். அதேசமயம், முதன்முறை கூறாத ஒரு கருத்தை வெளிப்படுத்தும் நோக்கில் மறுமுறை கூறப் பட்டால் அது குற்றமாக ஆகாது. வரலாற்று நிகழ்வொன்று ஓரிடத்தில் குறிப்பிட்ட

தொரு விஷயத்தை வெளிப்படுத்துவதற்காக கூறப்படுகின்றது. மற்றோரிடத்தில் வேறொரு முக்கிய விஷயத்தை நினைவு படுத்து வதற்காக கூறப்படுகின்றது எனில், அது எங்ஙனம் குற்றமாகும்?

அழகு நிரம்பிய ஓர் அரண்மனைக்கு உங்களை ஒருவர் அழைத்துச் செல்வதாக வைத்துக் கொள்ளுங்கள். கையிலுள்ள ஒளிவிளக்கை திருப்பிக் காட்டி அவர் அம்மாளிகையின் ஒரு மூலையை உங்களுக்குக் காட்டு கிறார். வெளிச்சம் படும் பகுதி மட்டும் உங்களுக்குத் தெரிகின்றது. மற்ற பகுதிகள் மறைவிலேயே இருக்கின்றன. மறுபடியும் அவர் வேறொரு பகுதியின் பக்கம் விளக்கைத் திருப்புகிறார். இப்போது முன்பு கண்ணில் படாத வேறொரு பகுதி தென்படுகின்றது. ஒரே மாளிகையை எத்தனை முறை காட்டுவீர்கள்? என்று நீங்கள் கண்டிப்பாக கேட்கமாட்டீர்கள்.

நம்முடைய தலைப்பான ஆதம் அவர்களின் வரலாற்றை மட்டும் இந்நோக்கில் ஆராயப்புகுவோம். அல்பகறா, அஃராஃப், ஹிஜ்ர், பனூ இஸ்ராயீல், கஹ்ஃப், தாஹா, சாத் என்று ஏழு அத்தியாயங்களில் ஆதமுடைய வரலாறு கூறப்பட்டுள்ளது. கூறப்படுவதற்கான நோக்கமும் கூறும்விதமும் ஒவ்வோரிடத்திலும் வேறுபடுகின்றன. மிகச்சரியாக விரலில் பொருந்தும் மோதிரம்போல அவ்விடங்களில் ஆதமுடைய வரலாறு சொல்லப்பட்டுள்ளதை உணரலாம். அவற்றை இங்கு சுருக்கமாகக் காண்போம்.

வான்மறை குர்ஆனுடைய அத்தியாயங்களும் வசனங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. பொதுவாக நம்பப்படுவதுபோல தொடர் பற்றவை அல்ல! ஒவ்வோர் அத்தியாயத்திற்கும் ஒரு மையக்கருத்து உள்ளது. அவ்வத்தியாய வசனங்கள் யாவும் அம்மையக் கருத்தை சுற்றியே அமைக்கப்பட்டிருக்கும். அவ்வகையில் தாம் இடம் பெற்றுள்ள அத்தியாயத்தின் மையக்கருத்தோடு இழையோடியே முதல்மனிதர் ஆதம் அவர்களின் வரலாறும் கூறப்பட்டுள்ளதை உற்றுநோக்கின் கண்டு கொள்ளலாம்.

அத்தியாயம் அல்பகறாவில்

அல்பகறா அத்தியாயத்தின் 28,29 வசனங்களில் (1) உலகத்தைப் படைத்தவன் ஒரே இறைவன்தான்! (2) மரணத்திற்குப்பின் மீண்டும் உங்களுக்கு உயிர்கொடுத்து அவன் எழுப்புவான் (3) அத்தகைய இறைவனை விட்டுவிட்டு வேறுவேறு தெய்வங்களை வணங்குவது மடத்தனம் (4)அவனுக்கு மட்டுமே கீழ்ப்படிந்து வாழவேண்டியது கட்டாயம் எனும் நான்கு விஷயங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இந்நான்கு விஷயங்களை நிரூபிப்பதற்கான ஆதாரங்களுள் ஒன்றாக ஆதமுடைய வரலாற்றையும் குர்ஆன் வைக்கின்றது. முந்தைய வசனங்களில் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகள் எண்ணிக் காட்டப்பட்டு ஓரிறைவனை விட்டு வேறுவேறு தெய்வங்களை வணங்கும் அவனுடைய கீழ்மைக்குணம் விமர்சிக்கப்பட்டது. தொடர்ந்து ஆதமுடைய வரலாற்றை எடுத்துக்கூறி அருட்கொடைகளிலேயே மிகப்பெரிய அருட்கொடை மனிதனை இறைவன் தன்னுடைய பிரதிநிதியாக உயர்த்தி வானவர்களை ஸஜ்தா செய்ய வைத்ததுதான் என்பதைக் குர்ஆன் உணர்த்துகின்றது.

அத்தியாயம் அஃ்ராஃபில்

அஃ்ராஃப் அத்தியாயத்தை வாசிக்கையில் மக்காவாசிகள் செய்துவரும் குற்றங்களை அது பட்டியலிடுவதைப் புரிந்துகொள்ளலாம். இறைவனுடைய அருட்கொடைகளை உணர்ந்து அவனுடைய கட்டளைகளை ஏற்று அடிபணியாவிட்டால் இவ்வுலகிலும் மறுமையிலும் சொல்லொணா வேதனைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பது அத்தியாயத்தின் ஆரம்ப வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து மனிதனை எந்தளவு இறைவன் கண்ணியப்படுத்தியுள்ளான் என்பது கூறப்படுகின்றது. இறைவன் மனிதன் மீது பொழிந்துள்ள மிகப் பெரியதோர் அருட்கொடையே அந்தக் கண்ணியம்!

இறைவன் மனிதனுக்காக இந்தப் பூமியையே வசப்படுத்திக் கொடுத்துள்ளான். அவனுக்குத் தேவையான வாழ்வாதாரங்கள் யாவும் அந்தப் பூமியிலிருந்தே வெளிப்படுகின்றன. அதுமட்டுமல்ல, மனிதனைப் படைத்தபோது அரும்பெரும் அருட்கொடைகளை அல்லாஹ் வழங்கிவிட்டான். மனிதனைப் படைத்து அவனை தன்னுடைய கலீஃபாவாக ஆக்கினான். வானவர்களிடம் ஆதமுக்கு ஸஜ்தா செய்யுங்கள் என்று ஆணையிட்டான். அதைவிடப் பெரிய அருட்கொடை வேறு என்ன இருக்கமுடியும்? ஆனாலும் மனிதர்களாகிய நீங்கள் மிகக்குறைவாகவே நன்றி செலுத்துகிறீர்கள்! மனிதர்கள் மீதான இறைவனின் மிகப்பெரிய அருட்கொடை என்பதை உணர்த்துவதற்காகத்தான் இவ்வசனத்தில் பன்மைச் சொல்லை கையாண்டுள்ளது குர்ஆன்!.

அதுமட்டுமல்ல, ஷைத்தான் எவ்வாறு உங்களுடைய தாய்தந்தையரை வழிகெடுத்தான். அவர்கள் அணிந்திருந்த சொர்க்கத்து ஆடைகளை இழக்கச் செய்தான் என்பதைக் கூறி எச்சரிக்கின்றது. ஏனென்றால்,

'வெட்கம்' எனும் மறைவான ஆடையின் மீதுதான் ஷைத்தான் தாக்குதல் தொடுக்கிறான். அத்தாக்குதலுக்கு உள்ளாகித்தான் மக்காவாசிகளான குறைஷிகள் இறையில்லம் கஅபத்துல்லாஹ்வை வலம் வரும்போது நிர்வாணமாக வலம்வருவதை புனிதமாகக் கருதி வந்தனர். நிர்வாணத்தையும் இறைவழிபாட்டோடு சேர்த்து மனிதரிடையே ஷைத்தான் புகுத்திவிட்டிருப்பதை இன்றும் நாம் காணலாம்.

அத்தியாயம் அல்ஹிஜ்ரில்

மறுமைநம்பிக்கைதான் அத்தியாயம் அல்ஹிஜ்ரின் மையக்கருத்தாகும். மறுமையை நம்பாதவர்கள் 'அது எப்படி செத்து மண்ணோடு மண்ணாக ஆனதன் பின்னால் மறுபடியும் எழுப்ப முடியும்?' என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

''நம்பவே முடியாத விஷயமாகவல்லவா இது இருக்கின்றது? மரணமடைந்து மண்ணோடு மண்ணாக ஆகிவிட்டபிறகுமா மீண்டும் எழுப்பப்படுவோம்? மறுபடியும் எழுப்பப்படுவது வெகுதூரமான விஷயமாக அல்லவா இருக்கின்றது?'' (அல்குர்ஆன் 50 : 3).

மரணத்திற்குப் பின் மனிதர்கள் மறுபடியும் படைக்கப்படுவார்கள் என்பதை நிரூபிக்க இரண்டு வலுவான ஆதாரங்களை குர்ஆன் முன் வைக்கின்றது. ஒன்று இறைவனின் அறிவு. இன்னொன்று இறைவனின் ஆற்றல்! இறைவனுக்கு யாவற்றைப் பற்றிய அறிவும் இருக்கின்றது. அவன் எதனையும் செய்ய ஆற்றலுடையவன். இவ்விரண்டையும் விளக்கும் எண்ணற்ற வசனங்களை குர்ஆனில் நம்மால் காண இயலும்.

எவ்வளவு கீழ்த்தரமான மூலப்பொருளிலிருந்து மனிதனை இறைவன் படைத்துள்ளான் தெரியுமா? அழுகி நாற்றமடிக்கும் களிமண்ணி லிருந்து!. அதைக்குறித்துதான் இவ்வத்தியாயத்தில் கூறப்படுகின்றது. குர்ஆனில் வேறெங்கும் இச்சொற்றொடர் கூறப்படவே இல்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

அத்தியாயம் பனூ இஸ்ராயீலில்

இறைவனுக்கு கட்டுப்பட மறுத்தால் என்னவாகும்? இறைகட்டளைகளுக்கு மாறு செய்தால் என்னவாகும்? இவ்வரலாறு தொடங்கும் முன் கூறப்பட்டுள்ள கருத்துகளை உற்று நோக்கினால் இதை விளங்கலாம்.

இறைவனின் அத்தாட்சிகளைப் பற்றியும் மறுமை நாளைப் பற்றியும் என்னதான் அச்சுறுத்தினாலும் இவர்களுடைய வரம்பு மீறும் தன்மை

அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது; குறைவதாகக் காணோம், என்றுரைக்கும் குர்ஆன் 'இப்படித்தான் இருந்தான் இப்லீஸ்' என்று ஆதமுடைய வரலாற்றின் அந்தக் கோணத்தைப் பற்றி மட்டும் பேசுகின்றது.

அத்தியாயம் அல்கஹ்ஃபில்

மனிதனுடைய மிகப்பெரிய விரோதி ஷைத்தானே! மனிதனின் பிறந்த நாள் முதல் அவனுக்கும் ஷைத்தானுக்கும் பகைமை தொடங்கிவிட்டது. பல இடங்களில் மிகத்தெளிவாக அந்தப் பகைமையும் பகைமைக்கான காரணங்களும் விளக்கப்பட்டுவிட்டன. ஆனாலும், அறிவுகெட்ட மனிதன் தன்னுடைய பகைவனையே சிறந்த நண்பனாக கருதிக்கொண்டு அவனுடைய வழிகாட்டுதலின் அடிப்படையில் வாழவே ஆசைப்படு கிறான். எவ்வளவு பெரிய மூடத்தனம் இது!

ஏற்கனவே வரலாற்றின் அனைத்துக் கோணங்களும் பெருமளவு கூறப்பட்டு விட்டதால் இங்கு ஒரே ஒரு வசனத்தின் மூலம் சொல்லவரும் கருத்து கூறப்பட்டு விடுகின்றது. ஒரே ஒரு வசனத்தின் மூலம் ஒரு வரலாற்று நிகழ்வு!.

அத்தியாயம் தாஹாவில்

மூஸா அலைஹிஸ் ஸலாமுடைய வரலாறு முழுக்க இவ்வத்தியா யத்தில் கூறப்படுகின்றது. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் முகமாக இவ்வரலாறு கூறப்பட்டுள்ளது. ஆட்பலமும் அதிகாரமும் இல்லாத நிலையிலும் இறைத்தூதர் மூஸா அவர்கள் படைபலமும் பணபலமும் கொண்ட ஃபிர்அவ்னை வெற்றிகொண்டதைப் போல ஒரு காலத்தில் நீங்களும் இவ்வநியாயக்காரர்களை வென்று சத்தியத்தை நிலைநாட்டுவீர்கள் என்பதுதான் அத்தியாயம் கூறவரும் செய்தி!

சத்தியத்துக்காக பாடுபடுவோர் அவசரப்படவோ ஆத்திரப்படவோ கூடாது. காலம் கைகூடி வரும்வரை காத்திருக்கவேண்டும். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போல ஆகிவிடக் கூடாது. 'இவன் தான் பகைவன்! இவனுக்கு அருகிலும் சென்றுவிடாதீர்கள்!' என்று எச்சரித்திருந்தபோதிலும் ஆதம் மீறினார்; மாறுசெய்தார். அவரிடம் உறுதிகொண்ட நெஞ்சம் இல்லை.

அத்தியாயம் சாத்-தில்

தற்பெருமை, வறட்டுக்கௌரவம், செருக்கு, அகம்பாவம், குலப் பெருமை, கோத்திரச்சிறப்பு போன்றவற்றுக்கு அடிமையாகிக் கிடக்கும் மக்கள் இறுதித் தீர்ப்பு நாளை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிக்கிறார்கள். எந்த நாளை நீங்கள் புறக்கணிக்கிறீர்களோ அந்த நாள்வரை உங்களை வழிகெடுப்பேன் என்று ஷைத்தான் (உங்களை வழிகெடுக்கும் அதே ஷைத்தான்) அவகாசம் வாங்கியுள்ளான். அது தெரியாமல் நீங்கள் அவனுடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறீர்கள்.

முன்னாலும் பின்னாலும் உள்ள வசனங்கள், அத்தியாயத்தினுடைய மையக்கருத்து போன்றவற்றை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வோர் இடத்திலும் புதுப்பொலிவோடு புதுக்கோணத்தை கூறுவதற்காக ஆதம் அவர்களுடைய வரலாறு கூறப்பட்டுள்ளதை விளங்கிக்கொள்ளலாம்.

ஆதம் அவர்களுடைய வரலாற்றிலிருந்து நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினையை நன்கு உணர்ந்து வாழ்க்கையில் அதனை நடைமுறைப்படுத்தி வெற்றி காண்போம். வாழ்க்கை எனில், இவ்வுலக வாழ்க்கை மட்டுமல்ல, மறுமை வாழ்க்கையும்தான். சொல்லப்போனால் அதுதான் உண்மையான வாழ்க்கை!.